உதயன்

பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 082 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 04 சனிக்கிழமை (16/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily

'எமது நிலங்களை விடுவியுங்கள்'

தெல்லிப்பழை உண்ணாவிரதத்தில் வானுயரக் கோஷம்

யாழ்ப்பாணம், பெப்.16

வலி. வடக்கு மக்கள் நேற்று நடத்திய வாழ்வுரிமைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தம்மை மீளக் குடியமர்த்துமாறு கோரி வான் அதிரக் கோஷம் எழுப்பினர்.

அத்துடன் வலி. வடக்கு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பல்வேறு அரசியல் கட்சிகளும் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டன.

பார்க்க பக்கம் 04

வேடிக்கை பார்த்த பொலிஸார்

யாழ்ப்பாணம், பெப்.16

வலி.வடக்கில் வாழ்விடங்களை விடுவிக்குமாறு கோரி நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை விரட்டியடிக்க முயன்ற சீருடை அணியாத நபர்களை கைது செய்யாமல் வேடிக்கை பார்த்தவர் தெல்லிப்பழைப் பொலிஸார்.

இது குறித்து போராட்டத்

பார்க்க பக்கம் 04

உதயன் கமரா உடைப்பு

யாழ்ப்பாணம், பெப்.16

'உதயன் ஒன்லைன்' ஊடகவியலாளரின் வீடியோக் கமரா படை அதிகாரி ஒருவரினால் பலவந்தமாகப் பறித்தெடுக்கப்பட்டு அடித்து நொருக்கப்பட்டது. அந்தா

பார்க்க பக்கம் 23

மக்கள் போராட்டத்தைக் குழப்ப வந்தவர்கள்

நையப்புடைப்பு





யாழ்ப்பாணம், பெப்ரவரி16

வலி.வடக்கில் தமது வாழ்விடங்களை விடுவிக்குமாறு கோரி நேற்று தெல்லிப்பழையில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை குழப்பியடிக்க முயன்ற சீருடை அணியாத நான்கு பேர் அங்கு திரண்டிருந்த மக்களால் நையப் புடைக்கப்பட்டனர்.

இந்த நால்வரையும் மக்கள் ஒன்றாகத் திரண்டு 'நன்கு கவனித்தனர்'. அதனால் அவர்கள் அங்கிருந்து தோட்டக் காணிகள் ஊடாகத் தப்பிச் சென்றனர். பின்னர் அவர்கள் படையினரின் ஜீப் ஒன்றில் பாதுகாப்பாக ஏறிச் சென்றதைக் காண முடிந்தது.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த மக்களை மிரட்டி அதனை குழப்பியடிக்க முயன்ற வேளையிலேயே சீருடை அணியாத நால்வருக்கும் இந்தக் கதி நேர்ந்தது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

வலி.வடக்கு மக்கள் தமது வாழ்விடங்களை விடுவிக்குமாறு கோரி நேற்

பார்க்க பக்கம் 04

இலங்கைப் பயணத்துக்கு திகதி தீர்மானிக்கவில்லை

நவநீதம்பிள்ளை தெரிவிப்பு

ஜெனிவா, பெப்.16

இலங்கைப் பயணம் தொடர்பில் திகதி இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இன்னர் சிற்றி பிரஸ் ஊடகத்துக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பிரதிநிதிகள் ஜெனிவாவுக்குப் பயணம் செய்யும் போது திகதிகளை அவர்கள் நிர்ணயிப்பார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நவநீதம்பிள்ளை இலங்கைக்குப் பயணம்

பார்க்க பக்கம் 04

போர்க்குற்றங்களை புலிகளே செய்தனர் அதைத் தடுக்க சர்வதேசம் தவறிவிட்டது

இராணுவ நீதிமன்றம் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.16

வன்னியில் இறுதிப் போரின்போது இடம்பெற்றவை என நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஷெல் தாக்குதல்களுக்கும் படையினருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இறுதிப் போரில் விடுதலைப் புலிகளே போர்க் குற்றங்களில் ஈடுபட்டனர். புலிகளின் போர்க்குற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பில் இருந்து சர்வதேச சமூகம் தவறிவிட்டது.

இது இராணுவ நீதிமன்ற விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று இலங்கை

பார்க்க பக்கம் 04

ரஷ்யாவின் வான் பரப்பில் வெடித்துச் சிதறிய விண்கல்

500க்கும் மேற்பட்டோர் காயம்

மொஸ்கோ, பெப்.16

பூமியை நோக்கி வந்து கொண்டிருந்த பெரிய விண்கல் ரஷ்யாவின் வான்பரப்பில் விழுந்து வெடித்ததில் 500 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

அதன்போது பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாரிய ஏற்படக் கூடிய காயங்கள் எதுவுமில்லை என வைத்திய சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்த விண்கல் நேற்று இரவு பூமியைக் கடக்கும் என்று

பார்க்க பக்கம் 04

தாயார் கிணற்றில் வீசிய இரு குழந்தைகளும் சாவு!

பின்னர் குதித்த அவர் தப்பினார்

யாழ்ப்பாணம், பெப்.16

இரண்டு பெண் குழந்தைகளையும் கிணற்றில் தள்ளிவிட்டுத் தானும் கிணற்றில் குதித்து உயிர்துறக்க முற்பட்டார் தாய் ஒருவர். இரண்டு குழந்தைகளும் பரிதாபகரமாக உயிரிழந்தது டன் தாயார் உயிருடன் மீட்கப்பட்டார்.

பார்க்க பக்கம் 04

இலங்கையில் இன்னமும் போருக்கான காரணங்கள்

பிரிட்டன் அமைச்சர் கூறுகின்றார்

லண்டன், பெப்.16

இலங்கையில் இடம் பெற்ற போரின் வெளித்தோற்றங்கள் மறைந்துவிட்டபோதிலும் அதற்கான மூல காரணங்

பார்க்க பக்கம் 23

வலி.வடக்கு உண்ணாவிரதப் போராட்டத்தின் பதிவுகள்





எதிர்க்கட்சி ஆட்சி அமைத்தாலும் தமிழரின் விடுதலை கேள்விக் குறியே

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.16

பலாலி விமானப்படைத் தளத்தின் பாதுகாப்பு முக்கியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க கூறுகிறார். எனவே இன்றுள்ள எதிர்க்கட்சி நாளை அரசமைத்தாலும் தமிழர்களுக்கு விடுதலை கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.

இவ்வாறு தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ச.யேசுதாஸ் தெரிவித்தார் .

வலி.வடக்கு உண்ணாவிரதப்போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனநாயக நாடு என்று சொல்கிறார்கள். போரின் பின்னர் இங்கு சுதந்திரம் நிலவுவதாகச் சொல்கின்றார்கள். அப்படியானால் இந்தப் போராட்டத்தில் ஏன் மக்களை விரட்ட வந்தீர்கள்?

என்ன ஜனநாயகம் நாட்டில் இருக்கிறது? என்ன பாதுகாப்பு இந்த நாட்டில் இருக்கிறது? இங்குள்ள பாதுகாப்பு படைகள் சிவில் சமூகம் அடங்கிய அரசைப் பாதுகாக்கவில்லை. மாறாக அரசை மட்டுமே பாதுகாக்கின்றன.

பலாலி விமானப் படைத் தளத்தின் பாதுகாப்பு முக்கியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சொல்கிறார். அப்படியானால் இந்த எதிர்க்கட்சி நாளைக்கு அரசமைத்தாலும் தமிழர்களுக்கு விடுதலை கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.

மக்களாகிய நீங்கள் வீதிக்கு வந்து போராடும் வரையில் இந்த விடுதலையை அடைய முடியாது. நாம் இந்த அரசிடம் நிவாரணம் கோரவில்லை.

வடக்கின் வசந்தம் என்று சொல்கிறார்கள். எல்லோரையும் நாட்டில் குடியமர்த்தி விட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் 1990 ஆம் ஆண்டிலிருந்து இந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் எப்படி வாழ்கிறார்கள் என்று தெரியாதா?

சர்வதேச சமூகம் கூட கொஞ்சம் நாடகம்தான். அரசின் நிகழ்ச்சி நிரலில் இங்கு வந்து பார்த்துவிட்டு எல்லாம் சிறப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படியானால் நாம் யாரிடம் போவது? மக்கள் வீதியில் இறங்கி போராட வேண்டும். முயற்சிப்போம். தொடர்ந்து முயற்சித்தால் நாம் வெல்லலாம்-என்றார். (த-1)

காணிகள் விடுவிக்கும் வரை எமது போராட்டம் தொடரும்

உண்ணாவிரதத்தில் மாவை எம்.பி.

யாழ்ப்பாணம், பெப்.16

எமது காணிகளில் நாங்கள் சென்று மீளக்குடியமரும் வரையில் எங்களின் போராட்டங்கள் தொடரும். இங்குள்ள அமைச்சரும், இந்த அரசும் சர்வதேசத்துக்குப் பொய் சொல்லிக் கொண்டிருக்கின்றன. எல்லோரையும் மீளக்குடியமர்த்திவிட்டதாகப் பொய் சொல்லுகின்றனர். ஆனால் இங்கு 30 ஆயிரம் மக்கள் நடுத்தெருவில் நின்று கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா.

வலி.வடக்கு மக்களின் உண்ணாவிரதப் போராட்டத்தின் முடிவில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

இலங்கையில் எல்லோரையும் மீளக்குடியமர்த்தி விட்டதாக இந்த அரசும், இங்குள்ள அமைச்சர் ஒருவரும் சர்வதேசத்துக்குப் பொய் சொல்லி வருகிறார்கள். நாங்கள் 30 ஆயிரம் மக்கள் நடுத்தெருவில் நிற்கின்றோம். ஆனால் அது பற்றி இவர்கள் கவலைப் படவில்லை.

நாங்கள் எங்களின் சொந்தக் காணிகளில் சென்று மீளக் குடியமரும் வரையில் தொடர்ந்து போராடுவோம்- என்றார்.

[illegible] கூறியதாவது:

படையினரின் கையில் ஆயுதம் இருக்கின்றது என்பதற்காக நீங்கள் காட்டாட்சி நடத்துவதைத் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. நாங்கள் எங்களின் உரிமைகளைப் பெறுவதற்காகத் தொடர்ந்து போராடத்தான் போகின்றோம். எங்கள் காணிகளில் இராணுவத்தினர் விவசாயம் செய்து கொண்டு, இந்த அரசு பொருளாதாரத்தைப் பற்றிப் பேசுகின்றது. அளவெட்டியில் எங்கள் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஆரம்பித்த இராணுவ அராஜகம் இன்று வரையில் வந்து நிற்கின்றது. இது தொடரத்தான் போகிறது.

பொலிஸாரால் ஒன்றும் செய்ய முடியாவிட்டால் அதை நீங்கள் பகிரங்கமாகச் சொல்லுங்கள்-என்றார்.

[illegible] தமது உரையில்,

எங்களின் வேதனைகளைப் புரிந்துகொள்ளாமல் இந்த அரசு செயற்படுகின்றது. எங்களைத் தொடர்ந்தும் அகதிகளாக வைத்துக் கொண்டிருக்காமல் சொந்த மண்ணிலேயே குடியமர்த்த வேண்டும்-என்றார்.

[illegible] உரையில் தெரிவித்ததாவது,

இன்று இங்கு நடந்த சம்பவங்களுக்கு முற்றுமுழுதாகப் பொறுப்புக் கூற வேண்டியவர் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதிதான். அவருக்குப் பொறுப்புக் கூறல் பற்றி சரியாகத் தெரியவில்லை.

இன்றைய சம்பவங்கள் மீளவும் முப்பது வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலைக்கே எம்மைத் தள்ளி விடுகின்றன. இணக்க அரசியல் பேசுபவர்கள் இந்த மக்களுக்காக எதையும் செய்யவில்லை. நாங்கள் போராடிக் காணிகளைப் பெற்றுக் கொள்ள அதைக் கையளிப்பதற்கு இணக்க அரசியல் செய்பவர்கள் வந்து நிற்பார்கள் என்றார்.

[illegible] முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமது உரையில்

இன்றைய இந்த மக்கள் போராட்டம் உண்மையில் வெற்றி பெற்றிருக்கின்றது. இந்த ஆயிரக்கணக்கான மக்கள் பல்கிப் பெருகி பல்லாயிரக்கணக்கில் ஒன்று திரள வேண்டும். அப்போது தான் இங்குள்ள அடக்கு முறைகளை தகர்த்தெறிந்து போராடலாம்-என்றார். (த-1)

பலாலியின் பாதுகாப்பு முக்கியம் உண்ணாவிரதத்தில் தெரிவித்தார் ரணில்

யாழ்ப்பாணம், பெப்.16

காணிகள் மீளவும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு பலாலி விமான நிலையத்தின் பாதுகாப்பை பலவீனப்படுத்த முடியாது. மக்களுக்குக் காணிகள் வழங்கப்படவேண்டும். அதனையும் விட முக்கியம் பலாலி விமான நிலையப் பாதுகாப்பு.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார். வலி வடக்கு மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

எனது அரசுதான் போர் காரணமாக பலாலியை கையகப்படுத்துமாறு கூறியது. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே எடுத்தோம். போர் முடிந்த பின்னர் குறித்த இடங்கள் மக்களிடம் மீள ஒப்படைக்கப்படவேண்டும். 2003 ஆம், 2004 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் சர்வதேச நாடுகள் வலி.வடக்கு மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையும் இதனைத்தான் கூறுகின்றது.

> ராஜபக்ஷ அரசு இங்கு மட்டும் காணிகளை அபகரிக்கவில்லை. கொழும்பிலும் காணிகளை அபகரிக்கின்றது.

பலாலி விமான நிலையத்தை வைத்துக்கொண்டு இந்த மக்களின் காணிகளை அபகரிக்க முடியாது. காணிகள் மீளவும் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற காரணத்தை வைத்துக் கொண்டு பலாலி விமான நிலையத்தின் பாதுகாப்பையும் பலவீனப்படுத்த முடியாது.

ராஜபக்ஷ அரசு இங்கு மட்டும் காணிகளை அபகரிக்கவில்லை. கொழும்பிலும் காணிகளை அபகரிக்கின்றது. இந்த அரசுக்கு காணி அபகரிப்பு பேராசை பிடித்திருக்கின்றது.

காணிகளை மக்கள் மீளவும் பெறவேண்டுமானால், பலாலியில், வன்னியில், கொழும்பில் காணிகளை இழந்த மக்கள் ஒன்று சேர்ந்து ராஜபக்ஷ அரசுக்கு எதிராக போராடினால் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும்- என்றார். (த-1)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக

பிரேரணையை இந்தியா ஆதரிக்கக் கூடாது என்ற சங்கரியின் கருத்துக்கு தமிழர்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப்.16

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள பிரேரணையை ஆதரிக்காமல் இந்தியா நடுநிலைமை வகிக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ள கருத்துக்கு தமிழ் மக்களிடையே பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

வவுனியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, "ஜெனிவாவில் கடந்த முறை கொண்டுவரப்பட்ட பிரேரணையை இந்தியா ஆதரித்ததால்தான் சீனாவின் பக்கம் இலங்கை சாய்ந்தது.

ராஜபக்ஷ அரசு இங்கு மட்டும் காணிகளை அபகரிக்கவில்லை. கொழும்பிலும் காணிகளை அபகரிக்கின்றது. இந்த அரசுக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரிக்கக் கூடாது. நடுநிலைமை வகிக்க வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்தே தமிழர் தரப்பிடையே கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கின்றது. சர்வதேசத்தின் அழுத்தத்தின் மூலம், இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை நடத்துவதோடு, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்த ஜெனிவாவில் கொண்டுவரப்படவுள்ள தீர்மானம் ஓரளவுக்காவது உதவும் என்ற நம்பிக்கையே தமிழர்களிடம் உண்டு. எனினும் குறித்த தீர்மானத்தை நிறைவேற்ற இந்தியாவின் ஆதரவு அவசியம். இந்த நிலையில் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, சர்வதேச சூழமைவை சரிவர அறிந்துகொள்ளாமல் தெரிவித்த இத்தகைய கருத்தால் தமிழ் மக்கள் பலரும் கொதிப்படைந்துள்ளனர். குறிப்பாக இறுதிப் போரில் பாதிப்புற்ற வன்னி மக்கள் ஆனந்தசங்கரியின் இந்தக் கருத்தை அறிந்து கடும் விசனம் அடைந்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

(ந)

சகல வகை விசா ஆலோசனையிலும்
திசைகாட்டியின் சாதனைப் பயணம்
தொடர்கின்றது. யாழ் வணிகர்
திரு.தி.இராஜேந்திரம் UK விசா பெற்றார்

இராஜேந்திரா வர்த்தக நிறுவனம் 192, கே.கே.எஸ் வீதி, பருத்தித்துறை உரிமையாளர் திரு.திருநாவுக்கரசு இராஜேந்திரம் தாம் சுயமாக UK குடும்ப விசாவிற்கு விண்ணப்பித்து விசா மறுக்கப்பட்டது.
இந்நிலையில் திசைகாட்டியின் வலுவான சட்ட வழி காட்டலில் விசா மீளக் கிடைக்கப்பெற்றார்.
[illegible]
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016, 0215689090
(33502)(6.7.13)

கீரிமலை முத்துமாரி ஆலயத்தில் பூசைகள்

காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கீரிமலை முத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்தத்திருவிழாவை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆரம்பமான இந்தப் பூசை வழிபாடுகள் எதிர்வரும் 28 ஆம் திகதிவரை 15 நாள்களுக்கு இடம்பெறவுள்ளன.

ஆலயத்தில் பாலஸ்தாபனப் பணிகள் இடம்பெறுவதால் கொடியேற்றம் இடம்பெறாது விசேட பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆலயத்தின் திருப்பணிகள் நிறைவு பெற்றதும் வழமைபோன்று கொடியேற்றி திருவிழா இடம் பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ம-86)

கோடரி வெட்டுக் காயத்துடன் இளைஞர் ஆஸ்பத்திரியில்

கொழும்பில் இருந்து வந்து தமது சொந்த வீட்டை விற்பனை செய்ய முற்பட்ட அல்லைப்பிட்டி இளைஞன் அவரது பெரிய தந்தையால் கோடரியால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரப் பகுதியில் இடம்பெற்றது. இது குறித்துத் கூறப்படுவதாவது:-

கொழும்பிலிருந்து தனது தாயாருடன் அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தில் உள்ள தமது வீட்டை விற்பனை செய்வதற்காக வந்திருந்த இளைஞனுடன் பெரிய தந்தையார் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். தொடர்ந்து வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியதில் பெரிய தந்தையார் குறித்த இளைஞனை கம்பியால் தாக்கியதுடன் கோடரியாலும் வெட்டிக் காயப்படுத்தியுள்ளார். இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த சிவகுமார் பிரசாந் (வயது-22) எனும் இளைஞன் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாகஊர்காற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-ரி)

வாரிவிட்டான் வீதியின் திருத்தப் பணி எப்போது?

அந்தப் பகுதி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், பெப்.16

வடமராட்சிக் கிழக்குப் பிரதேசத்தில் இடை நிறுத்தப்பட்டிருந்த வாரிவிட்டான் வீதியின் திருத்தப் பணிகள் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை வீதித் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப் படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுமார் 6 கிலோ மீற்றர் நீளமான வாரிவிட்டான் வீதியின் திருத்தப் பணிகள் கடந்த 2 வருடங்களுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட போதும் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் வீதித் திருத்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

குறித்த வீதியின் திருத்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்த காரணத்தால் வீதித் திருத்தப் பணிக்களுக்கென பறிக்கப்பட்டிருந்த கல், மணல் என்பன நாளாந்தம் களவாடப்பட்டன. இதன் காரணமாக திருத்தப் பணிகளுக்காக குவிக்கப்பட்டிருந்த கல், மணல் என்பன தற்போது வீதியில் இல்லை.

இந்த நிலையில் ஒப்பந்த காரர்களால் வீதித் திருத்தப் பணிகள் இடைநிறுத்தப் பட்டதாக பருத்தித்துறை பிரதேச சபையால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளரால் புதிய ஒப் பந்தக் காரர்கள் மூலம் கடந்த ஜனவரி மாதம் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்தக்காரர்களின் இழுபறி நிலை மற்றும் திட்டமிடப்படாத வீதித் திருத்தப் பணிகளால் குறித்த வீதியின் திருத்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியின் ஊடாக மருதங்கேணி, ஆழியவளை, வத்திராயன், கட்டைக்காடு ஆகிய இடங்களுக்குச் செல்லும் மக்கள் பெரும் இடர் பாடுகளைச் சந்தித்து வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் உட்பட பொது மக்கள் போக்கு வரத்தின் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இடைநடுவில் விடப் பட்ட குறித்த வீதியின் திருத்தப் பணிகளை சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14)

சுன்னாகம் மரக்கறிச் சந்தையில் ஏனைய வியாபாரிகளால் நெருக்கடி

பொருள்களைக் கொண்டுவரும் விவசாயிகளும் பெரும் நெருக்கடியில்

வலி. வடக்கு, பெப். 16

சுன்னாகம் சந்தைப் பகுதியில் மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்தில் ஏனைய அழகு சாதனப் பொருள்கள் உட்பட வேறு பொருள்களை விற்பனை செய்பவர்களுக்கும் பிரதேச சபையால் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனால் மரக்கறி விற் பனையாளர்களும் விவசாயி களும் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று பிரதேச சபைத் தலைவரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விவசாயிகளின் பெரிய சந்தையாகக் காணப்பட்ட சுன்னாகம் சந்தையில் தற் போது ஏனைய வியாபாரிகளுக்கும் பிரதேச சபை யால் இடம்வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சந்தை யில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுவோர் இட நெருக்கடி களை எதிர் கொண்டு வருகின்றனர்.

சந்தைகளுக்குப் பொருள் களைக் கொண்டுவரும் விவசாயிகளும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர் பாக பிரதேச சபைத் தலைவருடன் சுன்னாகம் நகர மத்தி சிவில் பாதுகாப்புக் குழு கலந்துரையாடியுள்ளது.

குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக கருத்தில் கொள்வதுடன் எதிர்காலத்தில் சந்தை வளாகத்தில் ஏனைய வியாபாரிகளுக்கு இடம் வழங்குவதை தவிர்த்துக் கொள்வதாகவும் தலைவர் உறுதியளித்துள்ளார் என்று சிவில் பாதுகாப்புக் குழுவின் தலைவர் எஸ். தம்பித்துரை தெரிவித்துள்ளார். (ம-86)

யாழ்.பல்கலை கல்விச் செயற்பாடுகள் முழுமையாக இடம்பெற ஒத்துழைப்பு

மாணவ பிரதிநிதிகள் உறுதிமொழி

யாழ்ப்பாணம், பெப். 16

கைது செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளதை அடுத்து யாழ்.பல்கலைக் கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. நாளை மறுதினம் 18 ஆம் திகதி திங்கட் கிழமை தொடக்கம் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை இயல்பாக தொடர்வர் என யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி இரவு யாழ். பல்கலைக்கழக மாணவர் விடுதிக்குள் படையினர் அத்து மீறி உள்நுழைந்த சம்பவத்தைக் கண்டித்து மறுநாள் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட துடன்அமைதிஊர்வலத்தையும் நடத்தினர். அதன் போது இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

அதை அடுத்து மாணவர்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி கடந்த நவம்பர் மாதம் 29ஆம் திகதி தொடக்கம் தமது கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணித்தனர்.

அதனைத் தொடர்ந்து மாணவர்கள் பலர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். இதன்படி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந்த், ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர்க.ஜெனமேஜெயந்த், விஞ்ஞானபீட மாணவர் ஒன்றிய உறுப்பினர் எஸ். சொலமன் ஆகியோர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வெலிக்கந்தை புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் மாணவர்களை விடுதலை செய்யக்கோரி அனைத்துப் பீட மாணவர்களும் வகுப்புப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். கைதான மாணவர்களில் இருவர் ஜனவரி மாதம் 22 ஆம்திகதி விடுவிக்கப்பட்டனர். ஏனைய இரு மாணவர்களும் தொடர்ந்தும் புனர் வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த 13 ஆம் திகதி அவர்களும் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் நால்வரும் விடுதலை செய்யப்பட்டதால் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் கல்விச் செயற்பாடுகளில் நாம் முழுமையாகப் பங்கேற்போம் என்று மாணவர் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்தனர். (ஐ-14-4)

சாவகச்சேரி ஆஸ்பத்திரி கிளினிக்குகளில் கடந்த ஆண்டு 35 ஆயிரம் பேருக்குச் சிகிச்சை

தென்மராட்சி, பெப்.16

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் இடம்பெற்ற பல்வேறு கிளினிக்குகளில் 35 ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரி வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர் மற்றும் வைத்திய அதிகாரிகள் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், மாவட்ட வைத்திய நிபுணர்கள் போன்றோரால் நடத்தப்பட்ட கிளினிக்குகளில் மேற்குறித்த நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு செல்வதால் ஏற்படும் செலவுகள் மற்றும் நேரவிரயங்களைக் கருத்தில் கொண்டு பல்வேறு கிளினிக்குகள் இங்கு ஆரம்பிக்கப்பட்டன.

இதனால் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பல நோயாளர்கள் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு கிளினிக்குகளில் சிகிச்சை பெறுவதால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

குழந்தைகள் சிகிச்சை, உளவள சிகிச்சை, கர்ப்பிணிகள் சிகிச்சை, குழந்தை பிறந்த பின்னரான சிகிச்சை, ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கான சிகிச்சை, பெண் நோயியல் சிகிச்சை, குடும்பக்கட்டுப்பாட்டு சிகிச்சை, கண் சிகிச்சை, மார்பு நோய் சிகிச்சை, பற் சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை, நீரிழிவு சிகிச்சை பொது மருத்துவ சிகிச்சை, முதியோர் சிகிச்சை, சுகவாழ்வு சிகிச்சை, தோல் சிகிச்சை, போன்ற கிளினிக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் கர்ப்பிணிகளின் கணவர்களுக்கான கலந்துரையாடல்கள் மற்றும் போதைப் பொருள்களுக்கு அடிமையாகி மீளமுடியாத வர்களுக்கான கலந்துரையாடலும் நடத்தப்பட்டு வருகின்றன.

வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் கடந்த வருடம் ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 293 நோயாளர்களும் விடுதிகளில் 9 ஆயிரத்து 327 நோயாளர்களும் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத்தியசாலை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

நிகழ்வுகள் இன்று

நூல் வெளியீடு

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் புவியியல் பாடம் கற்கும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கவென ஆசிரியை திருமதி தே.பஞ்சாட்சரம் எழுதிய புவியியல் பரீட்சைக்கான வழிகாட்டல் நூல் வெளியிடப்படவுள்ளது. இந்த வெளியீட்டு விழா காலை 9 மணிக்கு கொடிகாமம் புனித இராயப்பர் தேவாலயத்துக்கு அருகிலுள்ள அன்னை திரேசா முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறும்.

தென்மராட்சி கல்வி வலய சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் சி.நாகராசா தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தனும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதனும் கலந்து கொள்வர்.

நூலின் மதிப்பீட்டுரையை ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் இ.சர்வேஸ்வரன் நிகழ்த்துவார். ஓய்வுநிலை அதிபர் த.கந்தையா நூலை வெளியிடமுதற் பிரதியை முதன்மை விருந்தினர் பெற்றுக் கொள்வார். (ம-9)

பொதுக் கூட்டம்

நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டம் பிற்பகல் 3 மணிக்கு நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். பிரதேச கலாசாரப் பேரவையின் உறுப்பினர்கள் கூட்டத்துக்கு தவறாது சமுகந் தருமாறு கேட்கப்படுகின்றனர். (ம-7)

★★★

யாழ்.வணிகர் கழகத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் காலை 9 மணிக்கு யாழ்.வணிகர் கழக பணி மனையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வணிகர் கழக அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வணிகர் கழக முகாமைத்து சபை தெரிவித்துள்ளது. (ம-14)

★ ★ ★

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் முற்பகல் 11.30 மணிக்கு இல.43, மூன்றாம் குறுக்கு வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

சிற்றி கம்பசின் பரிசளிப்பு

ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பசின் 17 ஆவது ஆண்டு நிறுவுனர் தின விழாவும் பட்டமளிப்பு நிகழ்வும் காலை 9 மணிக்கு பூநாறி மரத்தடி கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள "செல்வ மஹால்" மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் வைத்திலிங்கம் குலரட்ணம் ஞாபகார்த்த தங்கப் பதக்கமும், சிறப்பு விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (ம-14)

திறப்பு விழா

லங்கா சமசமாஜக் கட்சியின் கிளை அலுவலகத் திறப்பு விழா முற்பகல் 11 மணிக்கு 137, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வில் அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, வாசுதேவநாணயக்கார உட்பட தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்வார். (ம-14)

வேடிக்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

துக்கு வந்திருந்த மக்கள் கடும் விசனம் வெளியிட்டதுடன், சட்டத்தைப் பாதுகாப்போரே இப்படி நடந்து கொண்டமை குறித்து அதிருப்தி தெரிவித்தனர். மக்களை மிரட்டிய சீருடை அணியாத நபர்களை கைது செய்யுமாறு மக்கள் பெருங் குரல் எழுப்பிக் கத்தியபோதிலும் பொலிஸார் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை.

சீருடை அணியாத நால்வரும் மக்கள் கூட்டத்துக்குள் புகுந்து குழப்பம் ஏற்படுத்திய நேரத்தில் ஆலய வளாகத்துக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் கடமையில் இருந்தனர். ஆயினும் அவர்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இறுதியில் மக்களால் பிடித்து ஒப்படைக்கப்பட்ட நபர் ஒருவரையே மக்களின் வற்புறுத்தலின் பேரில் பொலிஸார் கைது செய்து சென்றனர். (த-1-86)

மாது...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வலி. வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களை விடுவிக்குமாறும், இராணுவத்தினரால் உயர்பாதுகாப்பு வலயப்பகுதியினுள் வீடுகள் அழிக்கப்பட்டு வருவதற்கு எதிராகவும் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினார்கள். அதனைச் சிலர் குழப்ப முயற்சித்த போதும் போராட்டம் வெற்றிகரமாக நடந்தது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த விசேட பந்தலில் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராச, ஈ.சரவணபவன், க.சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.சிறீதரன், அ.விநாயகமூர்த்தி, எம்.ஏ. சுமந்திரன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சி சபைகளில் பருத்தித்துறை பிரதேச சபை, பருத்தித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபையின் தவிசாளர்கள் தவிர்ந்த ஏனைய தவிசாளர்களும் கலந்துகொண்டிருந்தனர். அத்துடன் உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த க.சிவாஜிலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அக் கட்சிகளின் உள்ளூர்த் தலைவர்களும் பங்கேற்றனர்.

போராட்டத்தின் இடையில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், தமிழ்-முஸ்லிம் கூட்டணியின் தலைவர் அஸாத் சாலி, புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோர் சிறிது நேரம் போராட்டத்தில் பங்கெடுத்துவிட்டுச் சென்றனர்.

மேலும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் எஸ்.யேசுதாஸன், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சி.தவரட்ணம் ஆகியோருடன் மதகுருமார் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

போராட்டத்தை இடையில் குழப்ப மேற் கொண்ட முயற்சி வெற்றியளிக்காத நிலையில் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

பிற்பகல் 2.30 மணியளவில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய மனு, வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், துணைத் தவிசாளர் சஞ்சீவன், வலி. வடக்கு மீள்குடியமர்வுக் குழுவின் தலைவர் குணபாலசிங்கம் ஆகியோரால் தெல்லிப்பழை பிரதேச செயலர் ஸ்ரீமோகனனிடம் கையளிக்கப்பட்டது.

அதன் பின்னர் அரசியல் தலைவர்களின் உரைகள் இடம்பெற்றன. இறுதியில் மென் பானம் வழங்கி போராட்டம் முடித்துவைக்கப் பட்டது.

இதேவேளை மல்லாகம் கோணப்புலம் முகாம், சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாம் போன்றவற்றில் தங்கி உள்ள மக்கள் போராட்டத்துக்குச் செல்வதை சீருடையினர் தடுத்து நிறுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.(த-1-86)

இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செய்வார் என முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது.இலங்கைக்குப் பயணம் செய்ய விரும்புவதாக அவர் அறிவித்த போதிலும் எப்போது பயணம் செய்வார் என்பது குறித்து இன்னமும் தீர்க்கமாக அறிவிக்கப்பட வில்லை. (த)

ரஷ்யா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

எதிர்பார்க்கப்பட்டது. எனினும் விண்கல் பூமியின் எந்த பகுதியையோ, நாட்டையோ தாக்கும் என விஞ்ஞானிகள் எதிர்வு கூறவில்லை.

இந்தநிலையில் விண்கல் பூமியை வந்தடையும் எனக் குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே ரஷ்யாவின் வான் பரப்பில் வெடித்துச் சிதறியது.

ரஷ்ய நேரப்படி நேற்றுக் காலை 9.20 மணியளவில் விண்கல் விழுந்தவேளை அதிர்வலைகள் ஏற்பட்டுள்ளன.

விண்கல் வெடித்துச் சிதறியபோது மிகப் பெரிய வெடிச்சத்தத்தைக் கேட்டதாக அங்குள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்போது காயமடைந்தவர்களுக்கு முதலுதவி வழங்குவதற்காக 20,000 தொழிலாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாக அந்த நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெடித்துச் சிதறிய விண் கல்லின் துகள்கள் நிலப்பரப்பில் எங்கும் விழவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் ஏழு விமானங்கள் விண்கல் வெடித்த பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. (த)

போர்க்குற்றங்களை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இராணுவம் நேற்று அறிவித்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் குறித்து விசாரிக்க, இராணுவத் தளபதியினால் நியமிக்கப்பட்ட இராணுவ விசாரணை நீதிமன்றத்தின் அறிக்கை இலங்கை இராணுவத் தளபதியிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ நீதிமன்றத்தின் விசாரணையின் முதற்கட்ட அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையான ஷெல் தாக்குதல்களால் பொதுமக்களுக்கு இழப்புகள் ஏற்படுத்தப் பட்டதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை இலங்கை இராணுவ நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இராணுவ நீதிமன்றத்தில், மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா (தலைவர்), மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா, பிரிகேடியர் ருவான் குலதுங்க, பிரிகேடியர் ருவான் டி சில்வா, பிரிகேடியர் அருண விஜேவிக்கிரம ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். லெப்.கேணல் லலித் ஹேரத் செயலராகப் பணியாற்றியிருந்தார்.

இராணு நீதிமன்ற அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவுக்கமைய, பூச்சிய நிலை பொதுமக்கள் இழப்பு கொள்கை போரின்போது இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதாக சாட்சியங்கள் மூலம் நீதிமன்ற விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மோதல் தவிர்ப்பு கடைப்பிடிக்கப்பட்டது

மோதல் தவிர்ப்பு வலயங்கள் தொடர்பான தலைமையகத்தின் உத்தரவுகள் எல்லா நேரங்களிலும் தளபதிகளால் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பு வலயங்களில் இருந்து தாக்குதல் நடத்தினாலும் கூடப் பதில் தாக்குதலை தவிர்க்குமாறு தளபதிகளுக்கு கூறப்பட்டிருந்தது.

பீரங்கிப்படைத் தளபதிகளுக்கு மோதல் தவிர்ப்பு வலயங்களில் இருந்து 500 மீற்றருக்கு அப்பாலேயே ஷெல்களை இலக்கு வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்ததால், அறிவிக்கப்பட்டதை விடவும் 500 மீற்றர் அப்பால் வரை மோதல் தவிர்ப்பு வலயம் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமானப் போரின் எல்லாக் கட்டங்களிலும், இலங்கை இராணுவம், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தையும், போர்ச் சட்டத்தையும், மதித்து ஒழுக்கத்துடன் நடந்து கொண்டுள்ளது. இதன்மூலம் பொது மக்களுக்கு இழப்புகள் ஏற்படுவதை அவர்கள் தவிர்த்தனர்.

சரணடைந்த, கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளையும் இலங்கைப் படையினர் மனிதாபிமானச் சட்டங்களுக்கு அமையவே நடத்தினர்.

மக்களை விடுதலைப் புலிகளே கேடயங்களாகப் பயன்படுத்தினர்

அதேவேளை, விடுதலைப் புலிகளே பொதுமக்களை மனிதப் கேடயங்களாகப் பயன்படுத்தியது, தப்பிச் செல்லமுயன்ற பொதுமக்களைப் படுகொலை செய்தது, சிறார்களைக் கட்டாயப்படுத்திப் போரில் ஈடுபடுத்தியது போன்ற போர்க்குற்றங்களிலும் ஈடுபட்டதும் இந்த விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் போர்க்குற்றங்களை தடுத்து நிறுத்த வேண்டிய கடமையில் இருந்து அனைத்துலக சமூகம் தவறியுள்ளதை இராணுவ நீதிமன்றம் கண்டறிந்துள்ளது.

அளிக்கப்பட்ட சாட்சியங்களின்படி, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஷெல் தாக்குதல்கள் இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட வில்லை என்றும், பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு விடுதலைப் புலிகளே காரணமாக இருந்திருக்கக் கூடும் என்றும் இராணுவ நீதிமன்றம் முடிவுக்கு வந்துள்ளது.

தப்பிச்செல்ல முயன்ற பொதுமக்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கலாம், பயிற்சிபெறாத புலிகள் பொது மக்களைக் குறிவைத்துத் தாக்கியிருக்கலாம், முறையற்ற வகையில் கொள்வனவு செய்யப்பட்ட ஷெல்கள் மற்றும் குண்டுகளால் பொது மக்களுக்கு இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம்.

கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் படுகொலை செய்யப்பட்டதாக சனல்- 4 வெளியிட்ட காணொலி குற்றச்சாட்டுகளை அடிப்படையாக வைத்து இராணுவ நீதிமன்றம் இரண்டாவது கட்ட விசாரணைகளை நடத்தி வருகிறது.

இலங்கை இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கை பாதுகாப்புச் செயலரிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் இராணுவத் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

தாயார்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தப் பரிதாபகரமான சம்பவம் ஊர்காவற்றுறைப் பொலிஸ் பகுதியில் இடம்பெற்றது.

சகாயநாதன் தேனுஷா (ஆறு மாதம்), சகாயநாதன் குயின்ஷா(ஒன்றரை வயது) ஆகிய பிள்ளைகளே உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் அவரது வீட்டில் இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் 6 மாதக் கைக் குழந்தை, ஒன்றரை வயதுக்குழந்தை என்பன நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தன. தாயார் உயிருடன் மீட்கப்பட்டார்.

முதலில் இரண்டு குழந்தைகளையும் படுக்கையில் இருந்து தூக்கிவந்து கிணற்றில் போட்டுள்ளார் தாயார். பின்னர் தானும் அதனுள் குதித்துள்ளார். கிணற்றின் ஆழம் குறைவாக இருந்ததால் தாயார் உயிரிழக்க வில்லை. கிணற்றினுள் கல்லொன்றைப் பிடித்தவண்ணம் தாயார் இருந்துள்ளார்.

அவர் வைத்திருந்த "ரோச் லைற்" ஒளிர்ந்த நிலையில் கிணற்றுக்கு வெளியே விழுந்து விட்டது.

அதிகாலை விழித்துக்கொண்ட கணவர் மனைவியையும் பிள்ளைகளையும் காணாது வெளியே தேடி வந்தபோது கிணற்றடியில் 'ரோச் லைற்' ஒளிர்ந்த வண்ணம் இருக்கக் கண்டு கிணற்றின் உள்ளே பார்த்தபோதே சம்பவம் தெரியவந்தது.

உடனடியாக ஒருவாறு மனைவியை கிணற்றிலிருந்து வெளியே தூக்கிவிட்டார் கணவர். குழந்தைகளைக் காப்பாற்ற உதவியாக அயல் விட்டுக்காரரை அழைத்தபோது மனைவி மீண்டும் கிணற்றில் விழுந்து உயிர் துறக்க முற்பட்டுள்ளார்.

பின்னர் அவர் மீண்டும் காப்பாற்றப் பட்டார். குழந்தைகள் உடனடியாக மீட்கப்பட்ட போதும் அவை ஏற்கனவே உயிரிழந்திருந்தமை தெரியவந்தது.

சம்பவ இடத்துக்கு நேற்றுச் சென்ற ஊர்காவற்றுறை பதில் நீதிவான் சபேசன் மரணவிசாரணைகளை மேற்கொண்டார் .

தானே குழந்தைகளை கிணற்றில் வீசியதாகவும், தானும் கிணற்றில் விழுந்து உயிர் துறக்க முற்பட்டதாகவும் தாயார் விசாரணையில் தெரிவித்தார்.

சம்பவ தினமன்று வீடு வந்த கணவன் தன்னை ஏசினார் என்றும், அதனால் கோபமடைந்து அவ்வாறு செய்ததாகவும் தாயார் மேலும் தெரிவித்துள்ளார்.

குழந்தைகளின் உடல்கள் நேற்று அடக்கம் செய்யப்பட்டன. தாயார் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டார். விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (த-1)

நையப்புடைப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

றுக் காலை 8.30 மணி முதல் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்குமுன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். முற்பகல் 11 மணியளவில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உண்ணாவிரதப் போராட்டத்துக்கு வருகை தந்தார். அவர் அங்கு சிறிது நேரம் உரை நிகழ்த்தி விட்டு வெளியேறினார். இதன் பின்னர் போராட்டத்தில் கலந்துகொண்ட புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினார். இதன் போது சீருடை அணியாத நால்வர் அங்கு பெரும் கூச்சல் எழுப்பினர். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவரின் வாகனத் தொடரணி உண்ணாவிரதம் நடைபெற்ற இடத்தை விட்டு அகன்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் கூட்டத்துக்குள் சீருடை அணியாத இந்த நால்வரும் புகுந்தனர். அங்கு பதாகைகளைத் தாங்கியிருந்த மக்களிடம் இருந்து அவற்றைப் பறித்தெடுத்து அந்தத் தடிகளால் மக்களை அடித்து விரட்டினர்.

'போராட்டம் முடிஞ்சுது. எல்லாரும் போங்க' என்று அரைகுறைத் தமிழில் கத்தியவாறு அவர்கள் மக்களை அடித்துத் துரத்தினர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து உடனடியாகவே தங்களைச் சுதாகரித்துக் கொண்ட மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சீருடை அணியாத நால்வரையும் வளைத்துப் பிடித்து நையப்புடைத்தனர். திரண்டிருந்த மக்கள் கூட்டத்துக்குள் இருந்து இந்த நால்வரும் தப்பிச் செல்ல முற்பட்டனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சீருடை அணியாத நால்வரில் ஒருவரைப் பிடித்துக் கொண்டு அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தெல்லிப்பழைப் பொலிஸாரை நோக்கிச் சென்றதுடன் அவரைக் கைது செய்யுமாறு ஆங்கிலத்தில் பலமுறை உரக்கக் கத்தினார்.

ஆயினும் அங்கு கடமையில் இருந்த பொலிஸார் சீருடை அணியாத நபர்களைக் கைது செய்யாமல் அவர்கள் தப்பிச் செல்லவே வழிசெய்தனர். மேற்படி நால்வரில் மூவர் பின்னர் அங்கிருந்து தப்பியோடி கே.கே.எஸ். வீதி வழியாகச் சென்றனர்.

இதன்போது தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் இராணுவ அதிகாரி ஒருவரும், படையினர் நால்வரும் துப்பாக்கிகள் சகிதம் கே.கே.எஸ். வீதியில் நின்றிருந்தனர். தப்பியோடிய மூவரில் ஒருவர் நடேஸ்வராக் கல்லூரியின் பின்புறமாக உள்ள தோட்டக் காணிகளுக் குள்ளால் சென்றார். இதன்போது கே.கே.எஸ். வீதியில் நின்றிருந்த இராணுவத்தினர் தப்பியோடியவரைப் பின் தொடர்ந்து சென்று அவரை அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு கொண்டு சென்று சேர்த்தனர்.

இதன்போது குறித்த நபரைக் காப்பாற்றிய இராணுவ அதிகாரியுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளரான ஜெபநேசனை படையினர் நால்வரும் ஒன்று சேர்ந்து தாக்கியதுடன் கீழே தள்ளிவிழுத்தினர். இந்தச் சம்பவத்தை தனது வீடியோக் கமராவால் பதிவு செய்த உதயன் ஊடகவியலாளரை அந்த இராணுவ அதிகாரி கடுமையாகத் தாக்கியதுடன் வீடியோக் கமராவையும் பறித்து அதனுள் இருந்த 'மெமறி சிப்' ஐ கழற்றி எடுத்துவிட்டு கமெராவை உடைத்தெறிந்தார்.

இந்த நேரத்தில் ஏற்கனவே மக்களிடம் மாட்டிக் கொண்ட சீருடை அணியாத நபர் ஒருவர் நன்கு வாங்கிக் கட்டினார். அப்போது அங்கு வந்த அவரது சகபாடி ஒருவர் அங்கிருந்த மக்களை கடுமையாக மிரட்டினார். இதனை ஊடகவியலாளர்கள் ஒளிப்படம் எடுக்க முற்பட்ட வேளை அவர்களிடமிருந்து கமராவைப் பறிப்பதற்கு சந்தேக நபர்கள் முயன்றதுடன் தாக்கவும் முற்பட்டனர். ஆயினும் தம்மிடம் மாட்டிய நபரை நையப் புடைத்த மக்கள் அவரை தறதறவென இழுத்துச் சென்று பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். மற்றைய மூவரில் ஒருவர் படைமுகாமுக்குள் தஞ்சமடைய, ஏனைய இருவரும் அங்கிருந்து நைசாகக் கழன்றுவிட்டனர்.

இதன் பின்னர் அந்தப் பகுதியெங்கும் கடுமையான பொலிஸ் பாதுகாப்பு போடப் பட்டிருந்தது. உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து அமைதியான முறையில் நடைபெற்று முடிந்தது.

(த-1)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

அணு ஆயுத வளர்ச்சிக்கான முயற்சி

வடகொரியாவை முன்னேற்ற உதவுமா?

வடகொரியா கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய நிலத்தின் கீழான அணுஆயுதப் பரிசோதனை சர்வதேச கவனத்தை மிகப்பெரிய அளவில் ஈர்த்துள்ளது. ஐ.நா. பாதுகாப்புச்சபையின் 1874(2009) ஆவது தீர்மானத்தை அப்பட்டமாக மீறும் வடகொரியாவின் செயற்பாட்டுக்கு இலங்கை உட்பட பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. வடகொரியாவின் நடவடிக்கை கொரிய தீபகற்பத்துக்கு மட்டுமல்ல, முழு உலகத்துக்கும் அச்சுறுத்தலாகும்.

இராணுவத்துக்கு முதலிடம்(Military First) என்ற தலைவர் 'கிம் ஜொங் உன்'னின் கோட்பாடு வடகொரிய மக்களின் பட்டினியை இரண்டாம் இடத்துக்குத் தள்ளிவிட்டது. சகல துறைகளிலும் இராணுவத்துக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

1950 - 53 கொரிய போர் நடைபெற்று அறுபது ஆண்டுகள் கழிந்த நிலையிலும், தமது நாட்டை அமெரிக்கா தாக்கலாம் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள் வடகொரிய மக்களும் அதன் தலைவரும். மூன்று வருடங்கள் இடம்பெற்ற கொரியப் போரில், வடகொரியாவுக்கு ஆதரவாக சீனாவும் தென்கொரியாவுக்கு ஆதரவாக 80 சதவீதம் அமெரிக்கப் படைகள் உள்ளடங்கிய சுமார் மூன்றரை லட்சம் பன்னாட்டுப் படைகளும் ஈடுபட்டன. சுமார் 25 லட்சம் பேர் போரில் கொல்லப்பட்டனர். போரின் முடிவில் ஏற்படுத்தப்பட்ட சுமார் நான்கு கிலோ மீற்றர் அகலம் கொண்ட, உலகிலேயே பலமான பாதுகாப்பு அரண்களைக் கொண்ட போர் சூனியப்பகுதி இன்னும் அதிக பதற்றம் நிறைந்த பகுதியாகவே தொடர்ந்தும் காணப்படுகிறது.

வடகொரியாவை வழிக்குக் கொண்டுவர சீனாவின் உதவியை எதிர்பார்க்கிறது ஒபாமா நிர்வாகம். கடந்த டிசம்பர் மாதம் நடத்தப்பட்ட 'உன்ஹா - 3' ஏவுகணைப் பரிசோதனையையும் கடந்த செவ்வாயன்று நடத்தப்பட்ட நிலத்தின் கீழான அணுஆயுதப் பரிசோதனையையும் சீனா ஒப்புக்குக் கண்டித்துள்ளபோதிலும், வடகொரியாவைப் பகைக்கும் நிலையில் அது இல்லை.

தென்கொரியாவிலும் ஜப்பானிலும் அமெரிக்கப் படைகள் நிலைகொண்டிருப்பதால் வடகொரியாவைத் தனது பாதுகாப்பு அரணாகக் கருதுகிறது சீனா. வடகொரிய அரசு வீழ்ச்சி அடையுமானால் லட்சக்கணக்கான அகதிகளை ஏற்க வேண்டிவரலாம் என்ற அச்சமும் சீனாவுக்கு உண்டு.

அணு ஆயுதத் தயாரிப்பைக் கைவிடாவிட்டால் கடுமையான விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும் என்று அமெரிக்க காங்கிரஸின் வருடாந்த கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் அதிபர் ஒபாமா எச்சரித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் வடகொரியா வெற்றிகரமாகப் பரிசோதித்த 'உன்ஹா - 3' ஏவுகணை மூன்று கட்டங்களைக் கொண்ட நீண்ட தூர ஏவுகணை. அமெரிக்காவின் மேற்குக்கரைவரை இது செல்லக்கூடியது. தற்போதைய நிலத்தின் கீழான அணுஆயுதப் பரிசோதனை மூலம் அணுகுண்டு ஒன்றை வடகொரியா தயாரித்து விடுமானால் தனது நீண்ட தூர ஏவுகணையைப் பயன்படுத்தி அமெரிக்காவைத் தாக்கமுடியும்.

அதனாலேயே அமெரிக்கா அணு ஆயுதப் பிரச்சினையில் வடகொரியாவுடன் மட்டுமல்ல ஈரானுடனும் கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. அமெரிக்காவின் பொருளாதாரத் தடை காரணமாக ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியில் 15 சதவீதத்துக்கு தடை உண்டாக்கப்பட்டுள்ளது. அவற்றை விடவும் பல தடைகளை விதிக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவும் மிஞ்சி விட்டால் இஸ்ரேல் மூலம் ஈரானின் சந்தேகத்துக்குரிய அணு உற்பத்தி நிலையங்களை அழித்துவிட முடியும் என்ற எதிர்பார்ப்பும் அமெரிக்காவுக்கு உண்டு.

உலகில் அதிக அளவு தனிமைப்படுத்தப்பட்ட நாடாகக் கருதப்படும் வடகொரியா மீதான அமெரிக்கத் தடைகள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கப்போவதில்லை. அனைத்துலக நிதி, சர்வதேச வர்த்தகம் ஆகியவற்றில் வடகொரியா பங்கு கொள்ளாது ஓரளவு ஒதுங்கியே இருக்கிறது. அதன் முழு வர்த்தகத்தில் மூன்றில் இரண்டு பங்கு சீனாவுடன் தான் என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதனாலேயே, சீனாவின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறது ஒபாமா நிர்வாகம். எனினும் பாதுகாப்புச்சபையில் வீட்டோ அதிகாரம் உள்ள சீனாவின் ஒத்துழைப்பு, முழு அளவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது.

வடகொரியா அணு ஆயுத நாடாக மாறுமானால், எதிர்காலத்தில் அது சீனாவுக்கும் அச்சுறுத்தல் தான். வடகொரியாவின் நடவடிக்கைகள் சர்வதேச நாடுகளிலிருந்து அதனைத் தனிமைப்படுத்தவே வழிவகுக்கும். சர்வதேச ஆதரவு இருந்தால் மட்டுமே ஒரு நாடு தனது பாதுகாப்பையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

அணு ஆயுத நாடாகத் தான் தலையெடுக்க வேண்டும் என்ற வடகொரியாவின் அதீத ஆசையும், அதற்கான முயற்சிகளும் அந்த நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த உதவுமா என்பது கேள்விக்குரிய ஒன்றே.

அந்நாட்டு மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கோ, பொருளாதார மற்றும் அபிவிருத்தி சார்ந்த துறைகளை மேம்படுத்துவதற்கோ அணு ஆயுத வளர்ச்சி நிலை உதவுமா என்பது திட்டவட்டமாக நிச்சயப்படுத்திக் கொள்ள முடியாத ஒன்றாகும். அணு ஆயுதத் துறையின் வளர்ச்சி தான் உயர்நிலை நாடு என்று கெச்சித்தனம் பேசுவதற்கே அதி கூடிய வீதம் உதவும். அவ்வளவே.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசுக்கு திடீர் கருத்து மோதல்

100 கோடி அமெ.டொலர் கடன் பெறப்படமாட்டாது

கொழும்பு,பெப்.16

நிதித்தொகைகள் செலவழிக்கப்படவேண்டியுள்ள விதம் தொடர்பாக எழுந்துள்ள கருத்து மோதல்கள் காரணமாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து புதிதாக 100 கோடி அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெறும் திட்டத்தை அரசு கைவிட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இதற்கு முன்னர், அதாவது ஆறு மாதங்களுக்கு முன்னர் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசு 260 கோடி அமெரிக்க டொலர் கடன் பெற்றிருந்ததோடு புதிதாக மேலும் 100 கோடி அமெரிக்க டொலர்களைக் கடனாகப் பெறுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அரசு கடந்த மாதத்தில் தெரிவித்திருந்தது.

ஆனாலும் தற்போது, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறும் திட்டத்தைக் கைவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

எது எவ்வாறான போதிலும் சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ந்தும் நெருக்கமான உறவைப் பேணிக் கொள்வதும் அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று மத்தியவங்கி தெரிவிக்கிறது.

இதனிடையே, நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளதற்கமைய அரசு அடிப்படை வசதிகள் தொடர்பாகச் செலவழிப்பதற்கே, இந்தப் புதிய கடனை எதிர்பார்த்திருந்துள்ளது.

இலங்கைக்குத் தாராளமாகவே வெளிநாட்டுச் செலாவணிக் கையிருப்பு கிடைத்துள்ளது.

இந்த உதவி தொடர்ந்தும் கிடைக்கிறது என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்திருக்கிறார்.

கடன் பெறவேண்டிய தேவை நாட்டுக்கு இல்லை. தற்போது கிடைத்துள்ள பணத்தொகை நாட்டின் தற்போதைய திட்டங்களுக்குத் தாராளமாகப் போதுமானது.

இலங்கையின் பொருளாதாரம் தற்போது பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் எமக்குக் கிட்டாது போவது கவலைக்குரிய விடயமே அல்ல. அவர்களது நிபந்தனைகள் மீது கடன் பெறும் அவசியம் இல்லை.

ஏதோவொரு அவசிய தேவைக்குக் கடன்கள் தேவைப்படுமானால் சர்வதேசத்தில் வேறு மாற்று வழிகள் எமக்குள்ளன எனவும் கப்ரால் கூறியுள்ளார். (ம-22)

மாலுமி சான்றிதழ் கற்கைநெறிக்கு ஆர்வமானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.16

மாலுமி சான்றிதழ் கற்கை நெறிகளான இயந்திரவியலாளர், கப்பல் தள ஊழியர்கள் நெறிகளைக் கற்பிப்பதற்கு வல்வை மாலுமிகள் நலன்புரி சங்கம், சி.ஐ.என்.ஈ.சி. யாழ்ப்பாண வளாகம் என்பன நடவடிக்கைகள் எடுத்துள்ளன.

சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியவர்கள் இந்தப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.

ஆர்வமுடையவர்கள் வல்வை மாலுமிகள் நலன்புரி சங்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் போர் காரணமாகப் பாதிப்படைந்தவை என்பதால் கப்பல் துறை அமைச்சு சாதாரணதர சித்திக்குப் பதிலாக சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றியவர்களை இந்தப் பயிற்சியில் இணைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தச் சலுகை 2013 இல் மட்டுமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சலுகையைப் பயன் படுத்து மாறும் கற்கை நெறிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன என்றும் வல்வை மாலுமிகள் நலன்புரி சங்கம் தெரிவித்துள்ளது. (ம-7)

கிராமசேவகர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம்,பெப்.16

திருநெல்வேலி கிழக்குப் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த கிராம உத்தியோகத்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இலக்கத் தகடு அற்ற ஓட்டோ ஒன்றில் முகத்தைக் கறுப்புத் துணியால் கட்டியவாறு வந்த 4 பேர் அடங்கிய குழுவே இவ்வாறு தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடுமையாகத் தாக்கப்பட்ட கிராம சேவகர் கால் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலை கிழக்கு பூம்புகார் கிராம அலுவலரான கே.விஜிதன் (வயது -28) என்பவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நிலையில் இவர் தாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

மக்கள் வங்கியின் தலைவராக காமினி செனரத்

மக்கள் வங்கியின் புதிய தலைவராக ஜனாதிபதி அலுவலக பிரதான செயற்பாட்டாளர் காமினி செனரத் நியமிக்கப்பட்டுள்ளார் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என நிதித் திட்டமிடல் அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கி முன்னாள் தலைவர் டபிள்யு.கருணாஜீவ கடந்த மாதம் காலமானார். அதையடுத்து கடந்த ஒரு மாத காலமாக அந்தப் பதவிக்கு புதிதாக எவரும் நியமிக்கப்படவில்லை. இந்த நிலையில் காமினி செனரத் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

வலிகாமம் வலயத்துக்கு ஆசிரியர்கள் மாற்றம்; விளக்கம் கோருகிறது மனித உரிமை ஆணைக்குழு

அச்சுவேலி, பெப். 16

வெளிமாவட்டத்தில் இருந்து யாழ். கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள் 33 பேருக்கும் வலிகாமம் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் வழங்கியது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் விளக்கம் கோரியுள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ். வலய கல்விப் பணிப்பாளர் ஆகிய மூவரிடமும் அவர் விளக்கம் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் உட்பட வெளிமாவட்டங்களில் இருந்து யாழ். கல்வி வலயத்துக்கு விடுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் தங்களுக்கு யாழ். கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் நியமனம் வழங்கி வதிவிடங்களுக்கு அருகில் கடமை புரிவதற்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

தங்களை வலிகாமத்துக்கு இடம் மாற்றி இருப்பது அடிப்படை உரிமை மீறல் என்பதை வலியுறுத்தித் தங்களுக்கு வதிவிடங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் நியமனம் வழங்க ஆவன செய்ய வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் கூட்டாகவும், தனித்தனியாகவும் முறையீடு செய்திருந்தனர்.

முறையீட்டை ஏற்றுக்கொண்ட யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் இந்த இடமாற்ற வேறுபடுத்தல் தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரிடம் விவரமான விளக்கம் கேட்டுள்ளார்.

முறைப்பாடு தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் தகவல் தெரிவிக்கையில்-

"வெளி மாவட்டத்தில் இருந்து யாழ். கல்வி வலயத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ள 33 ஆசிரியர்களும் இந்த மாதம் 15 ஆம் திகதி (நேற்று) தமது புதிய பாடசாலைகளில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டே சம்பந்தப்பட்டவர்களிடம் குறுகிய கால அவகாசத்தில் விளக்கம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அவர்களின் விளக்கத்தை அறிந்த பின்னரே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்." - எனத் தெரிவித்தார்.

இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-

நாங்கள் குறிப்பிட்டகாலம் அதிகஷ்ட, கஷ்டப் பிரதேசங்களில் வெளிமாவட்டத்தில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றிய பின்னர் யாழ். கல்வி வலயத்துக்கு விடுவிக்கப்பட்டுள்ளோம்.

எமது வதிவிடங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கடமை புரிவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளோம். அதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது கோரிக்கை நியாயமானது. -எனத் தெரிவித்தனர்.- (ம-4-11)

கோயில்குளம் கிராம சேவையாளர் பிரிவில்

மீள்குடியமர்ந்தோர் அரச உதவிகள் இதுவரை கிடைக்காது பெரும் சிரமம்

மன்னார், பெப்.16

மாந்தை மேற்கு கோயில் குளம் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் தமக்கு அரச உதவிகள் கிடைக்கவில்லையென விசனம் தெரிவித்துள்ளனர்.

மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட் பட்ட கோயில்குளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மீள்குடியமர்ந்த கிராமங் களுக்கு இந்திய வீட்டுத் திட்டம் உட்பட அரசினால் எவ்வித உதவிகளும் வழங் கப்படவில்லை என அங்கு வசிக்கும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கோயில்குளம் கிராம சேவையாளர் பிரிவில் கோயில் குளம், சவிரிகுளம், புதுக் குளம், சோனகப்பிட்டி ஆகிய நான்கு கிராமங்கள் உள்ள டங்கியுள்ளன.

இந்த நான்கு கிராமங் களிலும் சுமார் 280 குடும் பங்கள் வசித்து வருகின்றன. இந்தக் குடும்பங்கள் மீள்குடி யமர்ந்தபோது அரசினால் தற்காலிக குடிசைகள் மற் றும் உலர் உணவுப் பொருள் கள் மாத்திரமே வழங்கப் பட்டன.

வேறு எவ்வித அடிப் படை வசதிகளும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இந்தக் கிராமங் களுக்கு இதுவரை உரிய முறையிலான போக்குவரத் துச் சேவைகள் கூட ஏற் படுத்தப்படவில்லை.

அது மட்டுமன்றி மின் சாரம், குடிதண்ணீர் வசதி களும் இல்லை. இந்தக் கிரா மங்கள் காடுகளுக்கு அரு கில் காணப்படுவதால் இரவு நேரத்தில் நடமாடுவதற்கு மக்கள் அஞ்சும் நிலை காணப்படுகின்றது.

இதேவேளை கோயில் குளம் கிராம மக்களுக்கு வெளிநாட்டில் உள்ள அவர் களுடைய உறவினர்கள் உதவிகளை மேற்கொண்டு வருவதால் அவர்கள் ஓரளவு தமது அடிப்படைத் தேவை

> உரிய முறையிலான போக்குவரத்துச் சேவைகள் கூட ஏற் படுத்தப்படவில்லை. அது மட்டுமன்றி மின் சாரம், குடிதண்ணீர் வசதிகளும் இல்லை.

களைப் பூர்த்தி செய்து வரு கின்றனர்.

ஆனால் ஏனைய மூன்று கிராமங்களும் கவனிப்பார் அற்ற நிலையில் உள்ளதா கத் தெரியவருகின்றது.

மேலும் இந்திய அரசி னால் வழங்கப்பட்ட இந்திய வீட்டுத் திட்டத்தில் இது வரை ஒரு வீடு கூட தமக்கு வழங்கப்படாமையால் கூடா ரங்களில் பல்வேறு அசௌ கரியங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாக சவிரி குளம் கிராம மக்கள் தெரி வித்துள்ளனர்.

இது தொடர்பாக மாந்தை மேற்கு உதவி அரச அதிபரு டன் தொடர்பு கொண்டு கேட்டபோது-

"இந்திய வீட்டுத்திட்டம் கட்டம் கட்டமாக வழங்கப் பட்டு வருகின்றது. முதலாம் கட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வீடுகள் தற்போது அடித்தளம் மட்டுமே போட்ட நிலையில் காணப்படுகின்றன.

இந்த நிலையில் கோயில் குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட குறித்த நான்கு கிராமங்களும் அடுத்த கட்ட தெரிவுக்கு உட்படுத் தப்பட்டுள்ளன.

இது தொடர்பான சகல விவரங்களும் அதிகாரி களுக்கு வழங்கப்பட்டுள் ளன. எதிர்வரும் காலங் களில் அவற்றுக்குப் பொறுப் பான அதிகாரிகள் கோயில் குளம், சவிரிகுளம், புதுக் குளம், சோனகப்பிட்டி ஆகிய கிராமங்களுக்குச் சென்று தெரிவு களை மேற்கொள் வார்கள்" - என்றார். (க-12)

நடமாடும் மருத்துவ சேவையை நடத்த கோரிக்கை

பூநகரி,பெப்.16

பூநகரிக் கிராமங்களை உள்ளடக்கி நடமாடும் மருத் துவ சேவையை நடத்து மாறு கிளிநொச்சி மாவட்ட பிரதிச் சுகாதாரப் பணிப்பா ளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பூநகரியிலுள்ள ஜெய புரம், வினாசியோடை, செம் மங்குன்று, வலைப்பாடு, கரியாலை நாகபடுவான், சின்னப்பல்லவராயன்கட்டு, நல்லூர் உட்பட பல கிராமங் கள் மருத்துவ வசதி இல் லாத நிலையில் காணப்படு கின்றன.

மேலும் இந்தக் கிராமங் களில் காணப்படும் போக்கு வரத்து நெருக்கடி காரண மாக மருத்துவமனைகளை நாடிச் செல்வதில் இந்த மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்ற னர். இதனால் மிகவும் பின் தங்கிய தமது கிராமங்களில் வாரத்தில் ஒரு நாளாவது நடமாடும்மருத்துவ சேவையை நடத்துமாறு இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர்.

(க-18)

போட்டிகள் இடைநிறுத்தம்

கிளிநொச்சி,பெப்.16

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாகக் கிளி நொச்சிப் பாடசாலைகள் சிலவற்றின் இல்ல மெய்வன் மைப் போட்டிகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள் ளன என்று தெரிய வருகின்றது.

வெயில் காலத்தைக் கருத் தில் கொண்டு இங்குள்ள பாடசாலைகளில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கள் இடம்பெற்று வந்தன. ஆனால் திடீரெனப் பெய்த மழை காரணமாக சில பாட சாலைகளில் இவற்றை நடத்த முடியாத நிலை தோன்றி யுள்ளது. (க-18)

மன்னார் பஸ் நிலையப் பகுதியில் கடந்த 12 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட சிறுவர் பூங்கா, இங்கு தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக சிறுவர்களால் உபயோகிக்கப்பட முடியாத நிலையில் மூடப்பட்டுள்ளது. (க-12)

வவுனியா – மன்னார் வீதியில்

வடிகால் வசதிகள் இல்லாததால் வீதியில் பயணிப்பதில் இடையூறுகள்

நெளுக்குளம்,பெப்.16

சீரான வடிகால் வசதிகள் அமைக்கப்படாததால் வவு னியா - மன்னார் வீதியில் பயணம் செய்வதில் இடை யூறுகள் காணப்படுகின்றன.

இந்த வீதியின் ஓரங்க ளில் சீரான வடிகால் வச திகள் செய்யப்படவில்லை. இதனால் வீதியை வெள்ள நீர் மேவிப் பாய்வதால் இந்த நிலை காணப்படுவதாக பயணிப்போர் தெரிவித் துள்ளனர்.

மேலும் மழை காலத்தில் இங்குள்ள பட்டாணிச்சூர் குளம், நெளுக்குளம் ஆகி யன நிரம்பி வழியும் போது வெளியேறும் நீரும், வீடு களில் இருந்து வெளியேறும் நீரும் இந்த வீதியை ஊட றுத்துப் பாய்வதால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இந்த வீதியின் அருகில் அமைந்துள்ள இரண்டு பெரிய பாடசாலைகளும், இரண்டு முன்பள்ளிகளும் வெள்ள நீர் உட்புகுவதால் மழை காலத்தில் அதிக சிரமங்களை எதிர்கொள் கின்றன.

எனவே இந்த வீதியின் இரு புறங்களிலும் கால்வாய் களை அமைத்து வெள்ள நீரை வெளியேற்றுவதன் மூலமாக இந்த அவல நிலை யைப் போக்க முடியுமென பொதுமக்கள் தெரிவித் துள்ளனர்.

(க-402)

போட்டிக்கான ஏற்பாடுகள்

வவுனியா,பெப்.16

மைதான வசதி இல்லாத போதும் வவுனியா விபுலா னந்தாக் கல்லூரியின் வரு டாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இடம்பெறு மெனத் தெரிய வருகின்றது.

வவுனியா நகர பொது மைதானத்தில் இவ்வாண் டுக்கான இல்ல மெய்வன் மைப் போட்டியை நடத்து வதற்கான ஏற்பாடுகள் பூர்த் தியடைந்துள்ளதாக கல்லூரி யின் அதிபர் வே.இந்திரன் தெரிவித்தார்.

அதேசமயம் கல்லூரிக்கு விளையாட்டு மைதான வசதி இல்லாததால் நீண்ட தூரத்தில் உள்ள வவுனியா பொது மைதானத்துக்குச் செல்ல வேண்டியுள்ளதாக பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், விசனம் தெரிவித்துள்ளனர். (க-402)

உவரடையும் அபாய கட்டத்தில் பூநகரி ஜெயபுரம் கிராமம்

அக்கரயான்,பெப்.16

கிளிநொச்சி ஜெயபுரம் கிராமம் உவரடையும் அபாய நிலையில் உள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படு கிறது.

பூநகரியின் பழைமை வாய்ந்த பல்லவராயன் கட்டுக் கிராமம் முழுமை யாக உவரடைந்துள்ளது. அதேவேளை அயல் கிரா மங்களான ஜெயபுரம் தெற்கு மற்றும் சோலை ஆகிய கிரா மங்கள் உவராகும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன.

2000 ஆம் ஆண்டு பல்ல வராயன்கட்டுக் கிராமம் உவரடைய ஆரம்பித்த போது இதனைத் தடுக்க வேண்டுமென மக்கள் குரல் எழுப்பினர்.

ஆனால் போர்ச்சூழல் காரணமாக இது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது ஜெயபுரம் கிராம மும் உவரடைவதற்கு ஆரம் பித்துள்ளது.

ஜெயபுரம் கிராமம் நல்ல காட்டு வளம் உள்ள கிரா மங்களில் ஒன்றாகும். இதனை உவராபத்திலிருந்து காப் பதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.

உவர்த் தடுப்பணைகளை அமைப்பதன் மூலமும், காடு கள் அழிக்கப்படுவதைத் தவிர்ப்பதன் மூலமும் இந்தக் கிராமத்தை உவராபத்தி லிருந்து காப்பாற்ற முடியு மென அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க-13)

குடமுருட்டிக்குளத்தின் கீழான நெற் செய்கைகளும் அழிவு

பூநகரி,பெப்.16

பூநகரி குடமுருட்டிக் குளத்தின் கீழ் பயிரிடப்பட்ட 20 ஏக்கர் நெற்செய்கை மழை யினால் அழிவடைந்துள்ள தாக விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

சின்னப்பல்லவராயன் கட்டுக் கிராமத்தில் வாழ் கின்ற மக்கள் மேற்படி குளத்தின் கீழான நெற்செய் கையில் ஈடுபட்டு வருகின் றனர்.

மேலும் வறிய நிலை யில் உள்ள இவர்கள் கடன் களைப் பெற்று தமது விவ சாய முயற்சிகளில் ஈடு பட்டு வந்தனர். இந்த நிலை யில் தற்போது அடிக்கடி பெய்யும் மழையினால் விளைந்த நெற்கதிர்கள் நீரில் மிதக்கும் நிலை உரு வாகியுள்ளது.

1983 ஆம் ஆண்டு விவ சாய அழிவுகள் நிகழ்ந்த தைப் போன்று தற்போதும் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இங்குள்ள

> 1983 ஆம் ஆண்டு விவசாய அழிவுகள் நிகழ்ந்த தைப் போன்று தற்போதும் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன.

முக்கொம்பன் பகுதியில் காடுகளை அழித்தல், கள வாக மணல் ஏற்றுதல் ஆகிய வற்றால் பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இறுதியாக இடம்பெற்ற பூநகரிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இது தொடர் பாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

மேலும் முக்கொம்பன் காடுகள் அழிக்கப்படுமா னால் இந்தக் கிராமமும் உவராகும் ஆபத்து ஏற்படு மென இங்கு வசிக்கும் மக் கள் கவலை தெரிவித்துள்ள னர். (க-13)

விளையாட்டு மைதானம் அமைவதற்கு மன்னார் நகரப்பகுதியே பொருத்தம்

அமைச்சர் நிசாத் பதியுதீன் கூறுகிறார்

மன்னார்,பெப்.16

அமைக்கப்படவுள்ள நவீன பொது விளையாட்டு மைதா னம் மன்னார் நகரப் பகுதியில் அமைவதே பொருத்தமானது. இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் நிசாத் பதியுதீன்.

இந்த மைதானத்தை மன் னார் தாராபுரம் வீதியில் அமைப்பதற்கான முயற்சி கள் மேற்கொள்ளப்படுவதாக வெளிவந்த செய்திகள் தொடர் பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் எமில் நகர்ப் பகுதியில் அமைக்கப்பட வுள்ள மன்னார் நவீன பொது விளையாட்டு மைதானத்தை நான் எச்சந்தர்ப்பத்திலும் தாராபுரத்தில் அமைப்பதற் கான முயற்சிகளை மேற் கொள்ளவில்லை.

குறித்த விளையாட்டு மைதானத்தை அமைப்ப தற்கு மன்னார் நகரில் பொருத்தமான காணி ஒன்று கிடைக்காத பட்சத்தில் தாராபுரத்திலோ அல்லது ஏதேனும் பொருத்தமான இடத்திலோ தேவையான காணியை பெற்றுத்தரு வதற்கு நான் நடவடிக்கை எடுப் பதாக மட்டுமே தெரிவித்தேன்.

நவீன விளையாட்டு அரங்கை முன்பு தீர்மானிக் கப்பட்டதன் பிரகாரம் எமில் நகர்ப் பகுதியில் அமைப்பது தொடர்பில் எனக்கு வந்த வித ஆட்சேபனையும் இல்லை.

சகல வசதிகளும் உள்ள விளையாட்டு அரங்கு மன் னார் நகரப்பகுதியில் அமை வது பொருத்தமானது.

இலங்கையில் எங்கும் காணப்படாத தமிழ் முஸ் லிம் இனங்களுக்கு இடை யிலான இன ஒற்றுமை மன்னார் மாவட்டத்திலேயே நிலவி வருகின்றது.

இதனைச் சீர்குலைப்ப தற்கு நான் எச்சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கப்போவதில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(க-12)

'எம்மைச் சுரண்டித் தின்னும் தம்பியா மார்ச் மாதத்துக்குள் நடையைக் கட்டு'

குருநாகல் முஸ்லிம் வர்த்தகர்களுக்கு சிங்கள கடிதம் மூலம் கொலை மிரட்டல்

கொழும்பு,பெப்.16

''ஹலால் மூலம் மக்களிடம் சுரண்டித் தின்னும் தம்பியா, மார்ச் மாதத்துக்குள் கடைகளைவிட்டு நீங்கள் வெளியேறாவிட்டால் உங்களுக்கு மரணம்தான்...''

- இவ்வாறு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு குருநாகல், நாரம்மல பிரதேசத்திலுள்ள 50 முஸ்லிம் வர்த்தகர்களுக்கு பௌத்த அமைப்புகளின் ஒன்றியத்தால் துண்டுப் பிரசுரம் அனுப்பப்பட்டுள்ளது.

இதனால் நாரம்மல பகுதியிலுள்ள முஸ்லிம் வர்த்தகர்கள் மரணப் பீதியுடன் வாழ்வதுடன், அந்தப் பிரதேசத்தில் பெரும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த வர்த்தகர்கள் நாரம்மல பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதுடன், சமயம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளும் விசேட பொலிஸ் பிரிவினரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குருநாகல் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும், குருநாகல் மாநகர சபை உறுப்பினருமான அப்துல் ஷத்தார் விளக்கமளிக்கையில்,

குருநாகல், நாரம்மல பிரதேசத்தில் கடந்த பல வருடங்களாக முஸ்லிம் மக்கள் வாழ்ந்துவருகின்றனர். இங்கு 50 முஸ்லிம் வர்த்தகர்கள் உள்ளனர். கடந்த திங்கட்கிழமை தபால் மூலம் 50 துண்டுப்பிரசுரங்கள் கிடைத்தன. அந்த துண்டுப்பிரசுரங்கள் பௌத்த அமைப்புகளின் ஒன்றியத்தால் அனுப்பப்பட்டிருந்தது.

அதில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

''ஹலால் மூலம் மக்களின் பணத்தைச் சுரண்டித் திண்ணும் தம்பியா, மார்ச் மாதத்துக்குள் கடைகளை விட்டு நீங்கள் வெளியேறா விட்டால் உங்களுக்கு மரணம்தான்...'' என்று எழுதப்பட்டிருந்தது.

இவ்வாறு 50 துண்டுப் பிரசுரங்கள் அனுப்பப்பட்டிருந்தன. இதையடுத்து முஸ்லிம் வர்த்தகர்களிடமும், பிரதேச மக்களிடமும் மரணப்பீதி ஏற்பட்டதுடன், பெரும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது.

இதன்பின்னர் நாம் நாரம்மல பொலிஸ் நிலையத்திலும், மதம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளும் விசேட பொலிஸ் பிரிவினரிடமும் முறைப்பாடு செய்துள்ளோம். இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, திங்கட்கிழமை இரவு நாரம்மல குருவிக்கொடுவ பகுதியிலுள்ள 6 முஸ்லிம் கடைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொழுகைகளுக்காகச் சென்ற இருவரும் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பிலும் பொலிஸ் முறைப்பாட்டில் நாம் குறிப்பிட்டுள்ளோம்.

இந்தப் பிரச்சினையானது குருநாகல் மாவட்டத்திலுள்ள பௌத்த பிக்குகளாலும், பௌத்தர்களாலும் ஏற்படுத்தப்படுவதொன்றல்ல. இது வெளி மாவட்டங்களில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் சதித்திட்டம். எனவே, இது விடயம் தொடர்பில் குருநாகல் மாவட்டத்திலுள்ள பௌத்த பிக்குகளுடனும் பேச்சு நடத்த நாம் எதிர்பார்க்கிறோம். அத்துடன், பாதுகாப்பு அதிகாரிகளிடமும் இது தொடர்பில் பேசிவருகிறோம் - என்றார்.



மண் அரண்களை அகற்றுமாறு மாணிக்கபுரம் மக்கள் வேண்டுகோள்

வெடிபொருள்கள் இருக்கலாமெனவும் அச்சம்

முல்லைத்தீவு, பெப்.16

முல்லைத்தீவு மாணிக்கபுரம் பகுதியில் பொதுமக்களின் காணிகளை ஊடறுத்துச் செல்லும் இராணுவம் மண் அரண்களை அகற்றித் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மாணிக்கபுரம் பகுதியில் ஏ-35 வீதிக்குச் சமாந்தரமாக கடந்த போர்க் காலத்தில் பொதுமக்களின் குடியிருப்புக் காணிகளை ஊடறுத்து மண் அரண்கள் அமைக்கப்பட்டன. ஆனால் அவை இதுவரை அகற்றப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

இந்தப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில், இந்த மண் அரண்கள் அகற்றப்படாமல் இருப்பதால் தாம் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

சில இடங்களில் வெடிபொருள்கள் கூட இருக்கலாம் என்றும் மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (க-6)

பொலிஸாரின் நடமாடும் சேவை மாசார் பொதுநோக்கு மண்டபத்தில்

கிளிநொச்சி, பெப்.16

பளைப் பொலிஸாரால் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி மாசார் பொதுநோக்கு மண்டபத்தில் இந்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இதில் மாசார், சோரன்பற்று பிரதேசங்களைச் சேர்ந்த மக்களில் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றைத் தொலைத்தவர்களுக்கான அறிக்கைகள் வழங்கப்படவுள்ளன.

பளைப் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடமாடும் சேவை நடத்தப்படுவதால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளுக்கான அறிக்கைகளைப் பெறமுடியுமெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.டி. ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறும் இந்த நடமாடும் சேவையில் இலவச கண்பரிசோதனை முகாம் நடத்தப்பட்டு பார்வையில் குறைபாடு காணப்படுபவர்களுக்கு குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் போர் இடர்களால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் போது தேசிய அடையாள அட்டை உட்பட பல்வேறு ஆவணங்களைத் தொலைத்தவர்களுக்கு உதவும் பொருட்டு பளைப் பொலிஸார் பிரதேசத்தின் பல இடங்களிலும் நடமாடும் சேவையை நடத்தி சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-9)

மாமயன் குளத்தை புனரமைக்க மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,பெப்.16

மாமயன் குளத்தைப் புனரமைக்குமாறு யூனியன்குளம் மக்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் உள்ள யூனியன்குளம் கிராமத்தில் இந்த மாமயன் குளம் உள்ளது. இதனைப் புனரமைக்குமாறு நீண்ட காலமாக இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

ஆனால் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. யூனியன்குளம் கிராமத்தின் தென் கிழக்குப் பகுதியில் சேதமடைந்த நிலையில் இந்தக் குளம் தற்போது காணப்படுகின்றது.

யூனியன்குளம் கிராமத்தில் சுமார் 500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த நிலையில் மாமயன் குளத்தின் புனரமைப்புப் பணிகள் அவசியமாக உள்ளதாக இந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் குளம் புனரமைக்கப்படுமானால் விவசாய முயற்சிகளை மேற்கொள்ளக் கூடிய நிலை இங்கு உருவாகுமென மக்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

யூனியன்குளம் கிராமம் அபிவிருத்திப் பணிகளின் போது புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். பஸ் சேவை இல்லாமை, கிராமத்தின் முக்கிய பாலம் புனரமைக்கப்படாமை என்பன பெரும் குறைபாடுகளாகக் காணப்படுகின்றன. (க-18)

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவோர் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவர்

எச்சரிக்கிறார் சிறுவர் நன்னடத்தை அதிகாரி

கிளிநொச்சி, பெப்.16

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவோர், சிறுவர்களின் பெற்றோர்கள் ஆகிய இரு தரப்பினர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட நன்னடத்தை அதிகாரியான எம்.முத் த்துக்குமார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. தற்போது சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் இதனைக் கட்டுப்படுத்துவதில் துரிதமாக ஈடுபட்டுள்ளனர்.

இருந்த போதிலும் பெற்றோர்கள் சிலரின் பொறுப்பற்ற தன்மை காரணமாக சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகிவரும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதை அறியக்கூடியதாக உள்ளது. குறிப்பாக வீடுகளில் வேலைக்கு அமர்த்தப்படும் சிறுவர்கள் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவோர் மீதும் அவர்களை வேலைக்கு அனுப்பும் பெற்றோர்கள் மீதும், எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என சிறுவர் நன்னடத்தை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கோவிந்தன் கடைச் சந்திப் பகுதியில் சிறுவன் ஒருவன் தென்னை மரத்தில் ஓலை வெட்டும் போது மின்சாரத்தால் தாக்குண்ட சம்பவமும், கண்டாவளைப் பகுதியில் கடந்த ஒகஸ்ட் மாதம் சிறுவன் ஒருவன் காணாமல் போனமையும் பெற்றோர்களின் பொறுப்பற்ற தன்மையால் நிகழ்ந்தவையாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே எதிர்காலத்தில் இவ்வாறான பெற்றோர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரி எம்.முத்துக்குமார் அறிவித்துள்ளார். (க-6)

தும்புத் தொழிற்சாலையை அமைக்குமாறு கோரிக்கை

அக்கராயன்,பெப்.16

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் தென்னம் தும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைக்குமாறு இங்கு வசிக்கும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை அமெரிக்கன் திருச்சபையினரால் தென்னை உற்பத்திப் பொருள்கள் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட்ட பல பெண்கள் கோணாவில் யூனியன் குளம் கிராமத்தில் தொழில் வாய்ப்பின்றி உள்ளனர். மேலும் இந்தப் பகுதியில் பெரும் எண்ணிக்கையில் தென்னை மரங்கள் உள்ளன.

ஏதாவது உதவி நிறுவனம் ஒன்று இந்தப் பகுதியில் தும்புத்தொழிற்சாலை ஒன்றை அமைக்குமாயின் இங்குள்ள பல குடும்பங்கள் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதோடு தமது வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கோணாவில் கிராம அலுவலர் பிரிவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன.

இந்தக் குடும்பங்கள் தும்புத்தொழில் தொடர்பான அனுபவத்தைக் கொண்டு தெரிவிக்கப்படுகிறது. (க-18)

மரண அறிவித்தல்

செல்லமுத்து சங்கரப்பிள்ளை

தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது இலண்டன் (Croydon)ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லமுத்து சங்கரப்பிள்ளை (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பாறுபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி-காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் (Court Commissioner) அன்பு மனைவியும், ஏகாம்பரநாதன் (இலண்டன்), தில்லைநாதன்(இலண்டன்), மலைமகள் (இலண்டன்), திருமகள் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌரி (இலண்டன்), டாக்டர்.கிருகாம்பிகை (இலண்டன்), காலஞ்சென்ற காங்கேசன் மற்றும் தயாளசீலன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், செந்தூரன், சிவகாமி, சுகீலன், றஜீலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், சிவபாக்கியம் மற்றும் டாக்டர்.கதிர்காமசேகரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(17.02.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8.30 மணி முதல் மு.ப. 10.30 மணிவரை Oshwal Mahajan wadi, Oshwall Hall, 1 Campbell Road, Croydon, Surrvey, CRO 2SQ என்னும் முகவரியில் நடைபெற்று, பின்னர் மு.ப.11.30- பி.ப.12.15 மணிவரை South London Crematorium, Rowan Road, SW16 5JG எனும் முகவரியில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு

இல்லம்(பிரித்தானியா)-+442086539066

ஏகாம்பரநாதன்(பிரித்தானியா)-+447914188769

தில்லைநாதன்(பிரித்தானியா)-+447546220994

மலைமகள்(பிரித்தானியா)-+442085972822 தகவல்:

திருமகள்(பிரித்தானியா)-+447814576622 குடும்பத்தினர்.

— வாழ்த்து —

எமது நிறுவனத்தைத் திறந்து வைத்தவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் வருகை தந்த அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

எமது சேவையை நாடும் அனைவருக்கும்
எமது நிறுவனத்தில் உள்ள சேவைகளாவன
★SECURITY GUARD (MALE)
★SECUARITY GUARD (FEMALE) ASO, S/O
★HEAD GUARD
★BODY GUARD, OIC

இச்சேவைகளை அனைவரின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் பெறலாம்.

HEAD OFFICE
PERFECTSECURITYSERVICESPVTLTD
#125B, KOKUVIL JUNCTION, KOKUVIL.
T.P.:-021 7200170, 0778919367.
BRANCH COLOMBO- 04.

SKY COMPUTERS (PVT) LTD
புதிய பிரிவுகள் ஆரம்பம்
DIPLOMA IN VIDEO MIXING -2 MONTHS
DIPLOMA IN HARDWARE -2 MONTHS
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
T.P:- 021-222-1417
#162, MAIN STREET, JAFFNA.

தொடரும் சீரற்ற காலநிலையால் மீனவர் கடலுக்குச் செல்லவில்லை

மட்டக்களப்பு,பெப்.16

சீரற்ற காலநிலையால் மட்டக்களப்பு,காத்தான்குடி பகுதிகளில் மீனவர்கள் கடந்த சில நாள்களாக மீன் பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை.

சுமார் ஒருவார காலமாக அந்தப் பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை என்று கூறப்படுகிறது.

மழை மற்றும் காற்றுக் காரணமாகவே கடலுக்குச் செல்ல முடியாதுள்ளது என்று மீனவர் ஒருவர் கூறியுள்ளார்.

எனவே வெளியிடங்களிலிருந்து மீன்களை கொள்வனவு செய்து, இங்கு கொண்டு வருவதால் குறித்த பிரதேசத்தில் கடல் மீன்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச)

39 கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கியது மாகாண சபை

திருகோணமலை,பெப்.16

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் 39 பேருக்கு கிழக்கு மாகாண சபை நேற்று வெள்ளிக்கிழமை நியமனக் கடிதங்களை வழங்கியுள்ளது.

இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்தியத்துறை கூட்டுறவு அமைச்சர். எம்.ஐ.எம்.மன்சூர் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

இந்த நியமனம் 16 தமிழ் , 10 சிங்களம், 13 முஸ்லிம் இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

வெளிநாட்டு நாணயத்தாளுடன் அக்கரைப்பற்றில் ஒருவர் கைது

அக்கரைப்பற்று,பெப்.16

அக்கரைப்பற்று பிரதேசத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான வெளி நாட்டு நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹாயா முகைடீன் தெரிவித்தார்.

அம்பாறை விசேட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றை யடுத்து, அக்கரைப்பற்று நகரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணிக்கு சோதனை செய்யப்பட்டபோதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர் மினுவாங்கொடை, தங்கொளுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடம் இருந்து பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், மலேசியா, பிறேசில், கட்டார், சவூதி ஆரேபியா போன்ற பல நாடுகளின் நாணயத் தாள்கள் மீட்கப் பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயத் தாள் களின் பெறுமதி பல லட்சம் ரூபாவாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வெளிநாட்டு நாணயத் தாள்களின் பெறுமதி பல லட்சம் ரூபாவாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை கைது செய்யப் பட்ட நபரை அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப் பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

'நெல்சிப்' திட்டத்துக்கான நிதி வேறு அபிவிருத்திக்கு கை மாறியது

சாடுகிறார் மு.காங்கிரஸ் உறுப்பினர்; வெட்கக்கேடு என்கிறார் அமிர்தலிங்கம்

அம்பாறை, பெப்.16

கல்முனை மாநகரசபைப் பிரிவிலுள்ள பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்வதற்கான 'நெல்சிப்' திட்ட நிதி தடைப்பட்டுள்ளது. அந்த நிதி தேசத்துக்கு மகுடம் கண்காட்சி தொடர்பான அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கெனத் திசை திருப்பப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடு கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு கல்முனை மாநகர சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ. எல்.எம்.முஸ்தபா குற்றம் சாட்டியுள்ளார்.

கல்முனை மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாகிப் தலைமையில் மாநகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழன் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்த வருடத்துக்கான 'நெல்சிப்' திட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் நாங்கள், அந்தந்தப் பிரதேசங்களில் பொது மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்று அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தோம்.

ஆனால் கல்முனை மாநகரசபைப் பிரிவுக்கான 'நெல்சிப்' திட்டத்தின் இந்த வருடத்துக்கான நிதி தடைப்பட்டுள்ளதாக அறிய முடியகிறது.

அதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, அரசால் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கென திசை திருப்பப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எமது மாநகரசபைப் பிரதேசங்களின் அபிவிருத்தியே எமக்கு முக்கியமானதாகும். எமது வீட்டுத் தேவை குறித்த நிதியை நாம் கோரவில்லை.

'நெல்சிப்' திட்ட வேலைத் திட்டங்கள் தடைப்படுமானால், நாம் மக்களிடம் சென்று எவ்வாறு முகம் கொடுக்க முடியும்.

மருதமுனை சார்ந்த சபையின் நான்கு உறுப்பினர்களும் ஒருமித்தே இந்தத் திட்டத்தின் கீழ் வீதி, வடிகால் அமைப்பு தொடர்பான முன் மொழிவுகளைச் செய்துள்ளோம்.

இந்த அந்நீதியை வாய்மூடி மௌனிகளாக நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

எமது பிரதேச அபிவிருத்திக்கே தடை வருமானால், அரச தரப்போடு முஸ்லிம் காங்கிரஸ் இணைந்திருப்பதில் அர்த்தமில்லை.

எனவே இந்த மாநகர சபையின் ஆளும் தரப்பாகவுள்ள நாம், இந்த விடயத்தில் எமது அதிருப்தியை அரசின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளோம். எனவே இந்த அந்நீதிக்கு விடிவு காண மாநகரசபை முதல்வர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.

வெட்கக்கேடு

இந்தக் கூட்டத்தில் மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் ஏ.அமிர்தலிங்கம் கூறியதாவது:-

கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் சகோதர உணர்வுடன் ஒன்றித்து செயல்படவும், முஸ்லிம் காங்கிரஸுக்கே முதலமைச்சரைத் தரவும் இணக்கம் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருந்தது. அத்தோடு இணைந்து ஆட்சியமைக்க வருமாறு பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டது.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் அபிவிருத்தி என்ற மாயையை மக்கள் முன் காட்டி அரசுடன் ஒட்டிக் கொண்டு ஆட்சியமைத்தது.

அதே அபிவிருத்தி முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சி அதிகாரத்திலுள்ள சபைக்கு மறுக்கப்படுவது வெட்கக் கேடான விடயமாகும்- என்றார். (ச-30)

புலமைப்பரிசில் அடிப்படையில் பயிற்சி நெறி

ஹோட்டல் துறைகளை மேம்படுத்துவதற்காக இந்தப் பயிற்சி நெறி நடத்தப் படவுள்ளது.

மட்டக்களப்பு,பெப்.16

ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறைகளில் மனித வள அபிவிருத்தி பயிற்சி நெறிகளை, புலமைப்பரிசில் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் நடத்தவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனமும் இலங்கை வர்த்தக சம்மேளனமும் இணைந்து கல்வி அமைச்சின் அறிவூட்டல் சமூகம் எனும் கல்வித் திட்டத்தின் கீழ் உள்ளூர் சுற்றுலா மற்றும் ஹோட்டல் துறைகளை மேம்படுத்துவதற்காக இந்தப் பயிற்சி நெறியை நடத்தவுள்ளது.

கிழக்கில் அபிவிருத்தியடைந்துவரும் சுற்றுலாத் துறையில் காணப்படும் ஆளணி வெற்றிடங்களை குறைக்கும் வகையில் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ச)

காத்தான்குடியை 12 வட்டாரங்களாக பிரிக்க நடவடிக்கை

காத்தான்குடி,பெப்.16

காத்தான்குடியில் உள்ளூராட்சி மன்றத்துக்காக 12 வட்டாரங்களை பிரிப்பதற்கு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தலைமையில் அவரது காத்தான்குடி பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் காத்தான்குடி உள்ளூராட்சி மன்றத்துக்கான எல்லை நிர்ணயம் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இந்த கூட்டத்தில் காத்தான்குடி ஆற்றங்கரையிலிருந்து பிரதான வீதிவரை ஆறு வட்டாரங்களும், பிரதான வீதியிலிருந்து பெரிய தோணா வரை இரண்டு வட்டாரங்களும், பெரிய தோணாவிலிருந்து கடற்கரை வரை நான்கு வட்டாரங்களாகவும் பிரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. அது தொடர்பாக ஆராய்வதற்காக பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ச)

மண்முனைத்துறை வாவியினூடாக

'பாதை'யில் பயணிக்கும் மக்கள் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு,பெப்.16

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைத்துறை வாவியினூடான 'பாதை'யில் பயணிக்கும் மக்கள் 'பாதை' சேவையின் மந்தப்போக்கைக் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை காலை பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த வாவியில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுவரும் 'பாதை' தினமும் பழுதடைவதால் குறிப்பட்ட நேரத்துக்குப் பயணிகள் செல்லமுடியாதுள்ளது.

இரண்டு 'பாதை'கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இந்தப் 'பாதை'கள் குறிப்பிட்ட நேரத்துக்கு செல்லாததால் மட்டக்களப்பிலிருந்து கொக்கட்டிச்சோலை மற்றும் பட்டிப்பளை பிரதேசங்களுக்குச் செல்லும் அரச ஊழியர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் உட்பட பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் இந்தப் 'பாதை' பயணிகளை ஏற்றிக்கொண்டு வாவியில் பயணிக்கும்போது பழுதடைந் ததால் 4 மணி நேரம் பயணிகள் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

எனவே அவற்றைக் கருத்தில் கொண்டு நேற்றுக் காலை 'பாதை'யில் பயணிக்கும் மக்கள் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் பகிஷ்கரிப்பை அடுத்து அங்கு விரைந்த கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பு.பிரசாந்தன் பொதுமக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததையடுத்து, சம்பந்தப்பட்ட அதிகாரி

களுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்குமாறு கேட்டுள்ளார்.

அதனையடுத்து நாளைமறுதினம் திங்கட்கிழமைக்கு முன்னர் 'பாதை' சரி செய்து தரப்படும் என்று கூறியதையடுத்து பொது மக்கள் பகிஷ்கரிப்பை கைவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

மீளக்குடியமர வேண்டியோரின் விவரம் ஜனாதிபதிக்கான அறிக்கையில் தவிர்ப்பு

செயலகத்தின் செயற்பாடா இது எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியமர்த்தப்பட வேண்டிய மக்களின் புள்ளி விவரங்கள் தொடர்பிலோ, விடுவிக்கப் பட வேண்டிய பிரதேசங்கள் பற்றியோ மிதிவெடி அகற் றல் செயற்பாடுகளின் நிலை தொடர்பாகவோ, எந்தவொரு விவரமும் யாழ்.மாவட்ட செய லகத்தால் ஜனாதிபதிக்கு வழங் கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தலைமையில் யாழ்ப் பாணத்தில் விசேட அபிவிருத் திக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை 'ரில்கோ' விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது யாழ். மாவட்ட செயலகத்தால் விசேட அறிக்கை ஒன்று தயாரிக்கப் பட்டு மேற்குறித்த கூட்டத்தில் வைத்து வாசிக்கப்பட்டது. அரச அதிபராலேயே குறித்த அறிக்கை பல்லூடக எளிகருவி ஊடாக முன்வைக்கப்பட்டு வாசிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் யாழ்.மாவட்டத்தின் முக்கிய மான பிரச்சினையாகவுள்ள மீளக்குடியமர்வு மற்றும் விடு விக்கப்படாத பிரதேசங்கள் தொடர்பில் எதுவுமே குறிப் பிடப்படவில்லை.

வலி. வடக்கு மக்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

வலி. வடக்கு மக்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் 24 கிராம சேவகர் பிரிவுகள் இன்னமும் விடுவிக்கப்படா மல் இராணுவத்தினரின் கட் டுப்பாட்டிலேயே உள்ளன. அதனால் 27 ஆயிரம் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலைமையில் உள்ளனர்.

மேலும் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம், வலி. வடக்கில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்த்தப் பட வேண்டும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இவற்றின் பின்னணியி லேயே யாழ்.மாவட்டத்தின் முக்கிய பிரச்சினையாகவுள்ள மீளக்குடியமர்வு விடயத்தை அரச அதிபர் தவிர்த்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இலங்கை அர சால் இலங்கையில் நலன் புரி நிலையங்கள் இல்லை என்றும், அகதிகள் இல்லை என்றும் பிரசாரம் முன்னெ டுக்கப்பட்டு வருகிறது.

இதனாலேயே, ஜனா திபதி தலைமையில் இடம் பெற்ற விசேட கூட்டத்தில் யாழ்ப்பாணத்தின் பிரதான மான பிரச்சினையான மீளக் குடியமர்வு விடயம் மாவட்ட அரச அதிபரால் தவிர்க்கப் பட்டுள்ளது என்று தெரிவிக் கப்படுகிறது.

அண்மையில் மீளக்குடி யமர அனுமதிக்கப்பட்ட பிர தேசங்கள், மீளக்குடியமர்ந்த மக்கள் தொகை, மீளக்குடிய மர்ந்த மக்களுக்கு வழங்கப் பட்ட உதவிகள் என்பன அரச அதிபரால் இந்தக் கூட்டத் தில் தெரிவிக்கப்பட்ட போதி லும் மீளக்குடியமர வேண்டி யுள்ள மக்கள் தொடர்பில் எது வுமே குறிப்பிடப்பட்டிருக் க வில்லை.

யாழ்.மாவட்ட செயலக மிதிவெடி செயற்பாட்டு அலு வலகத்தால் யாழ்.மாவட்டத் தின் தற்போதைய மிதிவெடி அகற்றல் செயற்பாடு தொடர் பான அறிக்கை அரச அதிப ருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதும் ஜனாதிபதியிடம் சமர்ப் பிக்கப்பட்ட அறிக்கையில் அது வும் உள்ளடக் கப்படவில்லை.

இந்த விடயங்கள் தொடர் பில் அறியும் பொருட்டு நேற்று முன்தினம் மாலை யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகத்தின் அலுவ லக, கைத்தொலைபேசிகளுக்கு பலமுறை தொடர்பு கொண்ட போதிலும் அந்தப் பக்கத்தில் இருந்து பதில் குரல் எதுவும் கிடைக்கவில்லை (த-5)

பெண்கள் மீதான வன்முறையை எதிர்த்து நல்லூரில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், பெப். 16

விழுது நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பெண்கள் சமாசம் பெண்களுக்கெதிரான வன் முறையை ஒழிக்கக் கோரி நேற்று முன்தினம் யாழ்ப்பா ணத்தில் ஊர்வலம் ஒன்றை நடத்தியது.

நல்லூர் ஆலய முன்ற லில் நேற்றுமுன்தினம் பிற் பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகிய இந்த ஊர்வ லத்தில் பெரும் எண்ணிக் கையான பெண்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஊர்வலம் நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத் துக்கு அருகிலுள்ள திவ்ய ஜீவனசங்க மண்டபத்தில் நிறைவடைந்தது.

இதன்போது பெண்கள், சிறுவர்கள் தம்மீதான வன் முறைகளை ஒழிக்குமாறு கோரி வசனங்களை பலூன் களில் எழுதி அவற்றை வானில் பறக்க விட்டனர்.

பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகளை எதிர்ப் போம் எனக் கூறி மெழுகு வர்த்தி ஏற்றி சத்தியப் பிர மாணம் செய்யும் நிகழ்வும் இதன் போது இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விழுது நிறுவன நிறைவேற்று அதி காரி சாந்தி சச்சிதானந்தம் , யாழ்.மாநகரசபை சுகாதார திணைக்கள வைத்திய அதி காரி மருத்துவர் எஸ்.ஞான ஜோதி, தேசிய கல்வியியற் கல்லூரி உபஅதிபர்திருமதிநல் லையா, மனித உரிமை ஆணைக்குழு விசாரணை அதிகாரி வசந்தராஜ், பெண் கள் சிறுவர் விசாரணை பொலிஸ் அதிகாரி, யாழ். மாவட்ட தாய் சேய் வைத்திய அதிகாரி மருத்துவர் திருமகள் சிவசங்கர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-13)

கலை ஊடாகப் புரிந்துணர்வை ஏற்படுத்தவே யாழ். இசை விழா

யு.எஸ். எயிட் நிறுவன பிராந்திய இணைப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.16

கலைகள் ஊடாக இலங்கை மக்களிடையே இணைப்பை ஏற்படுத்தவும், இனங்க ளுக்கு இடையில் புரிந்து ணர்வை ஏற்படுத்துவதற் காகவுமே யாழ். இசை விழா நடத்தப்படுகின்றது. கலை ஞர்கள் ஊடாக எடுத்துச் சொல்லப்படும் செய்தி மக்களை ஒருமைப்படுத்தும் என்று நம்புகின்றோம்.

இவ்வாறு யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் பிராந்திய இணைப்பாளர் டோன் ஹைய்ன் தெரிவித்தார்.

யாழ். இசை விழா தொடர் பில் விளக்கமளிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பு யாழ். கிறீன் கிறாஸ் விடுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தச் சந் திப்பில் கலந்து கொண்டு கருத் துத் தெரிவிக்கையிலேயே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

நீண்ட காலமாக உள் நாட்டு முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்களிடையே இணைப்பை ஏற்படுத்தும் வகையில் இந்த இசை விழாவுக்கு கடந்த 2 ஆண்டு களாக எமது நிதியுதவியை வழங்கி வருகின்றோம்.

கலைகள் ஊடாக சமாதா னத்தை வளர்க்கும் நிகழ் வாகவே இது இடம்பெறு கின்றது. இதனூடாக மக்களி டையே புரிந்துணர்வு ஏற்படும் என்று யு.எஸ். எயிட் நம்புகிறது.

யாழ். இசை விழா கடந்த 2011 ஆம் ஆண்டு யாழ்ப் பாணத்தில் இடம்பெற்ற போது, நிகழ்வை பார்த்து விட்டு வெளியேறிய மக்கள் கலங்கிய கண்களுடன் சென் றனர். இசை அவர்களின் மன தைத் தொட்டதை நான் அதன் மூலம் உணர்ந்து கொண்டேன்.

இந்த நிகழ்வு கடந்த ஆண்டு கண்டியில் இடம் பெற்ற போது வடக்கிலி ருந்து பெரும் எண்ணிக்கை யான இளைஞர்கள் வந்து பங்குபற்றியி ருந்தார்கள். இது புரிந்துணர்வின் ஆரம் பத்தின் வெளிப்பாடு.- என்றார்.

மார்ச் மாதம் 1 ஆம், 2 ஆம் திகதிகளில் யாழ். மாநகரசபை மைதானத்தில் (சுப்பிரமணியம் பூங்கா எதிரில்) இசைவிழா நடத்தப் படவுள்ளது. காலையில் 9 மணி தொடக்கம் 12 மணிவரை இசைப்பயிற்சிப் பட்டறை போன்று நிகழ்ச்சி யும் , மாலை 5 மணி தொடக் கம் 10.30 மணிவரை திறமை வாய்ந்த கலைஞர்களால் பிரதான மேடை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (த-5)

குடாநாட்டில் இரு தினங்களில் 56 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப்.16

குடாநாட்டில் கடந்த புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் வியாழக்கிழமை காலை 8.30 மணி வரை 35.3 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை 20.8 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. இதன்படி கடந்த இரண்டு நாள்களில் மட்டும் 56.1 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளன.

யாழ்.திருநெல்வேலியில் அமைந்துள்ள வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி பி.பிரதீபன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த வருடம் 12 மாதகாலத்துக்குள் 943.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், இந்த வருடம் ஜனவரி மாதம் 151.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-14-4)

'பிள்ளைத் தமிழ்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.16

சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி திருக்கோவி லின் மீது வே.இராசலிங்கத் தால் பாடப்பட்ட 'பிள்ளைத் தமிழ்' எனும் நூல் வெளி யீட்டு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அத்தி யடி கணபதி கலாசார மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

தீவகக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ப.ஆரூ ரன் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன் னாள் துணைவேந்தர் பேராசி ரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை பிரதம விருந்தி னராகக் கலந்து கொள்ளவுள் ளார். (ம-13)

குடாநாட்டில் திராட்சைச் செய்கையை சர்வதேச தரத்துக்கு மாற்ற நடவடிக்கை

விரைவில் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ். குடாநாட்டில் திராட்சை செய்கையை மேலும் ஊக்குவிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப் படும் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

மாவிட்டபுரம் பகுதியில் விவசாயிகளால் மேற் கொள் ளப்படும் திராட்சைச் செய் கையை ஜனாதிபதி நேரடி யாகச் சென்று பார்வையிட் டார்.

இந்தச் செய்கையை பார்வையிட்ட பின்னர் அங்கு விவசாயத் திணைக் கள அதிகாரிகள் மத்தியில் மேற்கண்டவாறு கூறினார்.

சர்வதேச தரத்துக்கு ஏற்ற வகையில் இந்தத் திராட்சை செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் வெளிநாடு களில் இருந்து இறக்குமதியைத் தவிர்க்கலாம்.

திராட்சை செய்கையை ஊக்குவிப்பதற்கு அரசு எதிர் காலத்தில் ஏற்ற நடவடிக் கையை மேற்கொள்ளும்.

பிரதேசத்தில் திராட்சைச் செய்கையை ஊக்குவிப் பதன் மூலம் வெளிநாடு களில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இந்தப் பழங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

இந்தச் செய்கையை சர்வதேச தரத்துக்கு ஏற்ற வகையில் மேற்கொள்ள வசதியாக இதற்கான விவ சாய பயிற்சிகளை வெளி நாடுகளில் பெற்றுக் கொள் வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்று மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந் திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , வடமாகாண விவசாய அமைச்சின் செய லாளர் உட்பட விவசாயத் திணைக்கள அதிகாரிகளும் சென்றிருந்தனர். (ம-17)

நயினாதீவு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு நிதி

யாழ்ப்பாணம், பெப்.16

நயினாதீவு மாணவர்களின் கற்றல் செயற்பாடு களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக நான்கு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நயினாதீவுக்கு ஜனாதிபதி சென்றிருந்த போது மூன்று பாடசாலைகளின் அதிபர்களுடன் கலந்துரையாடி குறைநிறைகளைக் கேட்டறிந்தார். நயினாதீவு மகா வித்தியாலய அதிபர் சோ.குக னேசன், நயினாதீவு கனிஷ்ட வித்தியாலய அதிபர் வி.ஓங்காரலிங்கம், நாக பூசணி மகாவித்தியாலய அதிபர் திருமதி எஸ்.இராசரெத்தினம் ஆகியோரு டனேயே ஜனாதிபதி கலந்துரையாடினார்.

அதன்போது பாடசாலைகளின் முதற் கட்டத் தேவைக்கு நிதி ஒதுக்கீடு வழங்கு மாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த நிலையில் உடனடியாக வடமாகாண சபையால் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நயினாதீவு மகா வித்தியாலயம், நயினை கணேஷ கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய வற்றுக்கு தலா 2 லட்சம் ரூபாவும் நாக பூசணி வித்தியாலயத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-17)

ஐந்து தினங்களின் பின் இயல்பு நிலைக்குத் திரும்பியது காஷ்மீர்

ஸ்ரீநகர், பெப்.16

அப்சல் குரு தூக்கிலிடப்பட்டு 5 தினங்களுக்கு பின் காஷ்மீரில் நேற்று முன்தினம் இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்ற தாக்குதல் தீவிரவாதி அப்சல் குரு கடந்த 9 ஆம் திகதி தூக்கிலிடப்பட்டார். அவர் காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதால் அங்கு பதற்றம் நிலவியது. பல இடங்களில் இளைஞர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். அதில், 3 பேர் உயிரிழந்தனர். பொலிஸார் உட்பட 50 இற்கும் மேற் பட்டோர் காயம் அடைந்தனர்.

கடந்த 5 தினங்களாக ஊரடங்கு நடைமுறையில் இருந்ததால், காஷ்மீர் மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளா யினர். உணவுப் பொருள் களுக்குத் தட்டுப்பாடு ஏற் பட்டது. ஊரடங்கைத் தளர்த்த வேண்டும் என பல தரப்பில் இருந்தும் கோரிக்கை விடப் பட்டது. அதையடுத்து காஷ் மீரின் பல பகுதிகளில் நேற்று முன் தினம் காலை ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டது. இதனால் மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கையில் ஈடு படத் தொடங்கியுள்ளனர்.

முன்னெச்சரிக்கை நட வடிக்கையாக அப்சல் குரு வின் சொந்த ஊரான சோபோர், பாராமுல்லா, பந்திப்போரா, பழைய ஸ்ரீநகர் உட்பட 10 நகரங்களில் மட்டுமே ஊர டங்கு உத்தரவு தளர்த்தப்பட வில்லை. காஷ்மீரில் நேற்று முன்தினம் அசம்பாவிதங்கள் எவையும் நடைபெற வில்லை.

இரண்டுநாள் பயணமாக இந்தியாவுக்கு வந்துள்ள பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதி ஹோலண்டேயை புதுடில்லி ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் மன்மோகன் சிங் வரவேற்றார்.

கர்நாடகா அணையை சூழ 144 தடை உத்தரவு நீடிப்பு

பெங்களூர், பெப்.16

கர்நாடகா கிருஷ்ண ராஜ சாகர் அணையைச் சுற்றி உள்ள பகுதிகளில் போடப் பட்டுள்ள 144 தடை உத் தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

அணையிலிருந்து தமிழ கத்துக்குத் திறந்து விடப் படும் நீரின் அளவு அதிகரிக் கப்பட்டுள்ளதால் தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

பிருந்தாவனம் பூங்கா வைப் பார்க்க சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப் பட்ட அனுமதி ரத்து செய்யப் பட்டுள்ளது. கிருஷ்ணராஜசாகர் அணையி லிருந்து திறக்கப்படும் நீரின் அளவு 5,577 கன அடியாக அதிகரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (வ)

போர் விமானம் கொள்முதல் பிரான்ஸ்- இந்தியா பேச்சு

அந்நாட்டின் ஜனாதிபதியுடன் மன்மோகன்சிங் டில்லியில் சந்தித்து ஒப்பந்தம் குறித்து கலந்துரையாடல்

டில்லி, பெப்.16

நடுத்தர-பல் வகைப் பயன் இலகுரக போர் விமா னங்களைக் கொள்முதல் செய்யும் திட்டம் தொடர்பாக இந்தியா வந்துள்ள பிரான்ஸ் ஜனாதிபதியுடன் இந்தியா பேச்சு நடத்தியுள்ளது.

இதேவேளை தரையில் இருந்து வானில் உள்ள குறுகிய தூர இலக்கைச் சென்று தாக்கி அழிக்கும் திறன் படைத்த ஏவுகணையை பிரான்ஸுடன் இணைந்து தயாரிப்பது குறித்தும் இந் தியா பேச்சு நடத்தியுள்ளது.

அரசின் அனுமதி கிடைத் தவுடன் அதன் தயாரிப்புப் பணி ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள பிரான்ஸ் ஜனாதிபதி ஃபிரான்ஷுவா ஹோலண்டே, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் டில்லியில் சந்தித்துப் பேசி னர். இராணுவம், வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்ட துறை களில் இரு நாடுகளும் பரஸ் பரம் ஒத்துழைப்பு அளிப்பது பற்றி இருவரும் விவாதித்தனர்.

அதன்பின்னர், இருவரும் கூட்டறிக்கை வெளியிட் டனர். அதில் நடுத்தர-பல் வகைப் பயன் இலகுரக போர் விமானங்களை கொள் முதல் செய்யும் திட்டம் தொடர்பான பேச்சில் முன் னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அதேபோல, தரையில் இருந்து வானத்தில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் திறன் கொண்ட, குறுகியதூர ஏவுகணை தயாரிப்புத் திட்டம் குறித்த பேச்சும் இறுதிக்கட் டத்தை எட்டியுள்ளது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதமர் மன்மோகன் சிங் அளித்த பேட்டியில் இது குறித்து தெரிவித்ததாவது:-

போர் விமானங்கள் கொள்முதல் ஒப்பந்தம் தொடர்பான பேச்சில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள் ளது. குறுகிய தூர, தரையில் இருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் ஏவுக ணைகளை பிரான்ஸுடன் இணைந்து தயாரிப்பது குறித்த பேச்சு நல்ல முறை யில் முடிவடைந்துள்ளது.

அரசின் அனுமதி கிடைத்த வுடன், அந்தநாட் டுடன் இணைந்து இந்த ஏவுகணை களை இந்தியா விலேயே தயாரிக்கப்படும். இதனால், உள்நாட்டு உற் பத்தி விரி வடைவதுடன், பிரான்ஸ் நாட்டுடனான யுத்திசார்ந்த நல்லுறவும் பலப்படும் -என் றார். (வ)

கும்பமேளா நிகழ்வில் தீ

ஒருவர் சாவு; 19 பேர் காயம்

அலகாபாத், பெப்.16

அலகாபாத்தில் நடை பெற்று வரும் கும்பமேளா நிகழ்வில் நேற்றுக் காலை திடீரென ஏற்பட்ட தீ விபத் தில் ஒருவர் உயிரிழந்தார். பெண்கள், குழந்தைகள் உட்பட 19 பேர் தீக்காயங் களுக்கு ஆளாகினர். மேலும் பல கூடாரங்கள் தீயில் எரிந்து சாம்பலாகின.

உத்தரப் பிரதேசம் அல காபாத்தில் கும்ப மேளா விழா நடைபெற்று வரு கிறது. கடந்த 10 ஆம் திகதி மவுனி அமாவாசையை முன்னிட்டு 3 கோடி பேர் திரிவேணி சங்கமத்தில் நீராடிவிட்டு தங்கள் ஊர்க ளுக்குச் செல்ல அலகாபாத் ரயில் நிலையத்தில் கூடினர். அப்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 36 பேர் உயிரிழந்தனர். பலர் பேர் காயம் அடைந்தனர். இந்த நிலையில் கும்பமேளாவுக்கு வந்துள்ள யாத்திரிகர்கள் தங்க அங்கு பல கூடாரங் கள் அமைக்கப்பட்டிருந்தன.

நேற்று அதிகாலை 2 மணி அளவில் திடீர் என்று அந்த கூடாரங்கள் தீப் பிடித்து எரிந்தன. கூடாரங்களுக்குள் நித்திரையாக இருந்தவர்கள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தனர்.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். சுமார் 30 கூடாரங்கள் எரிந்து சாம்ப லாகின. மின் கசிவு ஏற்பட் டதால் தான் கூடாரங்கள் தீப்பிடித்ததாக அந்தப் பகுதி பொலிஸ் அதிகாரி தெரிவித் தார். (வ)

நக்சல்கள் வேட்டையில் இறங்கியது தமிழக அதிரடிப்படை

நக்சல்களின் நடமாட் டத்தையடுத்து, நீலகிரி மாவட்டம், கூடலூரை அடுத்து தாத்தவயல், சேரம் பாடி உள்ளிட்ட மலைப் பகுதிகளில் தமிழக அதிர டிப்படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

கர்நாடகா மற்றும் கேரளா கொமாண்டோ படைகள் எல்லைப்பகுதிகளில் நக்சல் வேட்டைகளை கடந்த 2 தினங்களாக நடத்தி வரும் நிலையில், தமிழக அதிரடிப் படை அதிகாரி மறைமலை தலைமையிலான தமிழக அதிரடிப்படையினர் 20 பேர் நக்சல் தேடுதல் வேட்டையில் நேற்று ஈடுபட்டுள்ளனர். (வ)

ஜனாதிபதியின் இணையத்தளத்திலிருந்து கருணை மனுப் பிரிவு அதிரடியாக நீக்கம்

டில்லி, பெப்.16

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் இருந்து தூக்குத் தண்டனை கைதிகள் கருணை மனு குறித்த பிரிவு அதிரடியாக நீக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி முன்பு காத்தி ருக்கும் கருணை மனுக்கள் பற்றிய விவரங்கள் அவரது அதிகாரபூர்வ இணைய தளத்தில் அனைவரது பார் வைக்காகவும் பகிரங்கமாக வெளியிடப்பட்டிருந்தன. மும்பை தாக்குதல் குற்ற வாளி அஜ்மல் கசாப்பை தூக்கிலிட்டபோது அந்தப் பிரிவு ஜனாதிபதியின் அதி

காரபூர்வ இணையப் பக் கத்தில் இடம்பெற்றது. ஆனால் அடுத்தடுத்து தூக்குகள் நிறைவேற்றப் படும் நிலை யில் திடீரென அந்த இணை யப் பக்கம் காணாமற் போய் விட்டது.

இதுதொடர்பாக விளக்கம் அளித்த ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள், கருணை மனு குறித்த பிரிவையும் இனிமேல் உள்துறை அமைச்சகமே கையாளும்என்று தெரிவித்தன.

இந்தநிலையில் 1958 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜனாதிபதிகள் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்கள் அப்போது அவருடன் பய ணம் செய்த பத்திரிகையாளர் கள் பெயர் அட்டங்கிய பட்டி யல் இந்த இணையத்தளத்தில் வெளியிடப்பட் டுள்ளது. (வ)

அணு உலை எதிர்ப்பாளர்கள் போராட்டம் ; பிரான்ஸ் கொடிக்கு தீ வைப்பு

இடிந்தகரையில் பதற்றம்

நெல்லை, பெப்.16

நெல்லை மாவட்டம், இடிந்தகரையில் போராட்டம் நடத்திய அணு உலை எதிர்ப் பாளர்கள் நடத்திய நேற் றைய போராட் டத்தில் பிரான்ஸ் தேசியக் கொடி யைத் தீ வைத்து எரித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்காய்ஸ் ஹோலன்டே இந்தியாவுக்கு வருவதைக் கண்டித்து மேற்படி போராட் டம் நடத்தப்பட்டது. பெரும் திரளான ஆண்களும், பெண் களும் இடிந்தகரையில் திரண்டு முதலில் பேரணி நடத்தினர்.

கூடங்குளம் அணு உலை யைத் திறக்கக் கூடாது என்ற கோரிக்கையுடன் அந்தப் போராட்டம் நடைபெற்றது. பேரணியின் நிறைவில் பிரான்ஸ் தேசியக் கொடி தீ வைத்து எரிக்கப்பட்டது.

இதுகுறித்து அணு சக் திக்கு எதிரான மக்கள் இயக் கம் வெளியிட்ட அறிக்கையில்- இந்தியாவில் ஜைதாப் பூரில் அணு மின் திட்டத்தை நிறைவேற்றுவது தொடர் பான ஒப்பந்தத்தில் இந்தியா வும், பிரான்ஸும் கையெழுத் திடவுள்ளன.

இதற்காகவே ஹோலண்டே வருகிறார். இதைக் கண் டித்தே தேசியக் கொடி எரிப் புப் போராட்டம் நடத்தப்பட் டது என்று தெரி விக்கப்பட்டி ருந்தது. (வ)

2 ஜி அலைக்கற்றை உரிமம் ரத்தான நிறுவனங்களின் சேவை நிறுத்தம்

உச்ச நீதிமன்றம் உத்தரவு

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக் கற்றை உரிமம் ரத்தான நிறுவனங்கள் தங்களது சேவையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2ஜி அலைக்கற்றை உரிமம் ரத்து செய்யப்பட்ட பல தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தொடர்ந்து இயங்கி வருகின்றன.

இந்தநிலையில், 2ஜி புதிய ஏலம் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால், அந்த ஏலத்தில் பங்கேற்காத நிலை யில், உரிமம் ரத்தான பின் சேவை வழங்கிய நிறுவனங் கள் உடனடியாக தங்களது சேவையை ரத்து செய்ய வேண்டும் என்றும், உரிமம் ரத்தான பின்னரும் சேவையை வழங்கியதற்கு கூடுதல் கட்டணத்தை செலுத்த வேண் டும் என்றும் உச்ச நீதிமன் றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த 2ஜி ஏலத்தில் பங்கேற்று உரிமம் பெற இயலாத தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு சேவையை உடனடியாக ரத்து செய்ய வேண்டியது தொலைத்தொடர்பு நிறுவ னத்தின் பணி. எனவே, உரிமம் ரத்தான நிறுவனங் களின் சேவையை உடனடி யாக ரத்து செய்ய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் மத்திய அர சுக்கு அறிவு றுத்தியுள்ளது.

வடகொரிய அணு சோதனைகள் அமெரிக்காவுக்கான எச்சரிக்கை

பாதுகாப்புத்துறை அமைச்சர் லியோன் பெனட்டா

நியூயோர்க், பெப்.16

வடகொரியாவால் அண்மையில் நடத்தப்பட்ட அணு ஆயுத சோதனை அமெரிக்காவுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை என்றே கருதுகின்றோம்- இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சர் லியோன் பெனட்டா.

அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே பெனட்டா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

வடகொரியா 3 ஆவது முறையாக நிகழ்த்தியுள்ள அணு ஆயுத சோதனை சர்வதேச நாடுகளின் ஸ்திரத் தன்மையைத் தளம்பச் செய்துள்ளது. அமெரிக்கா உட்படப் பல்வேறு நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதும் வடகொரியா சோதனை நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. அணு ஆயுத சோதனையை அமெரிக்காவுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகவே நாம் கருதுகின்றோம். அதற்கு தகுந்த பதில் எம்மிடமும் உள்ளது- என்றார். (ற)

வடகொரியாவின் அணு ஆயுத சோதனை

எல்லை சுற்றுச் சூழலை கண்காணிக்கிறது சீனா

பீஜிங், பெப்.16

வடகொரியாவால் நடத்தப்பட்ட அணு ஆயுத சோதனையை அடுத்து தமது நாட்டு எல்லை அருகே அந்தப் பகுதிகளில் சுற்றுச் சூழல் கண்காணிப்பை அதிகப் படுத்தியுள்ளது சீனா.

கடந்த செவ்வாய்க் கிழமை வடகொரியா 3ஆவது அணு ஆயுத சோதனையை வெற்றிகரமாகப் பரிசோதித்திருந்தது. சீனாவின் எல்லைக்கு அண்மையில் சுமார் 100 கிலோ மீற்றர் தூரத்திலேயே அந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

சோதனையை அடுத்து சீன எல்லைப் பகுதி மக்களிடையே கதிர்வீச்சுத் தொடர்பான அச்சநிலை தோன்றியிருந்தது.

அதையடுத்து சீன சுற்றுச் சூழல் அமைச்சகம் 150 இடங்களில் சுற்றுச் சூழல் கண்காணிப்பு நிலையங்களை அமைத்து கதிர்வீச்சுத் தொடர்பான கண்காணிப்புகளில் ஈடுபட்டுள்ளது. ஆய்வுகளின் மூலம் எந்தவகையான கதிர்வீச்சுகள் கண்டறியப்படவில்லை என்று சீன சுற்றுச் சூழல் கண்காணிப்பு மையம் நேற்றுத் தெரிவித்தது.

இதேவேளை, வடகொரியாவின் அணு ஆயுத சோதனைக்கு சீனாவும் அதிருப்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

காதலியை சுட்டுக் கொன்ற பரா ஒலிம்பிக் தடகள வீரர்

வேடிக்கை முடிந்தது விபரீதத்தில்

ஜோகன்னர்ஸ்பேர்க், பெப்.16

காதலியைச் சுட்டுக் கொன்றார் என்ற குற்றச் சாட்டில் 26 வயதுடைய தென்னாபிரிக்காவின் பிரபல பரா ஒலிம்பிக் வீரர் ஒஸ்கார் பிஸ் டோரியஸ் கைது செய்யப் பட்டார். மாற்றுத் திறனாளியான இவர் 200 மீற்றர் மற்றும் 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பரா ஒலிம்பிக்கில் உலக சாதனை படைத்தவர். இவரை 'பிளேட் ரன்னர்' என்று ரசிகர்கள் அழைக்கின்றனர்.

அவரது காதலி ரீவா ஸ்டீன்கேம்ப் முன்னாள் மொடல் அழகி. காதலர் தினமான நேற்று முன்தினம் ஒஸ்காருக்கு இன்ப அதிர்ச்சி கொடுப்பதற்காக அவரது வீட்டுக்குள் இரகசியமாக நுழைந்தார் ரீவா ஸ்டீன்கேம்ப். ரீவாவை இனங்காணாத ஒஸ்கார் துப்பாக்கியால் சுட்டுள்ளார். சம்பவ இடத்திலேயே ரீவா உயிரிழந்தார்.

அதையடுத்து ஒஸ்காரைப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாரோ திருடன் ஒருவன் உள்ளே வந்துள்ளானா எனக் கருதி தவறுதலாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டாக பொலிஸ் விசாரணைகளில் ஒஸ்கார் தெரிவித்துள்ளார். காதலர் தினத்தில் இடம் பெற்றுள்ள இந்தச் சம்பவம் தென்னாப்பிரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

தற்கொலைத் தாக்குதல்: பாகிஸ்தானில் 11 பேர் சாவு

இஸ்லாமாபாத், பெப்.16

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 5 பாதுகாப்புப் படையினர் மற்றும் 2 குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹேங்கு என்னுமிடத்தில் உள்ள சோதனைச் சாவடியில் குண்டுகள் நிரப்பப்பட்ட காரைக் கொண்டு தற்கொலைப்படை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பன்னு என்னுமிடத்தில் நடந்த மற்றும் இருவேறு தாக்குதல்களில் தீவிரவாதிகள் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

தாக்குதல்களுக்கு தெஹ்ரிக் இ தலிபான் தீவிரவாத அமைப்பு உரிமை கோரியுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ற)

கிழக்கு ரஷ்யாவில் நிலநடுக்கம்

மொஸ்கோ, பெப்.16

ரஷ்யாவின் கிழக்கே உள்ள சாகா பகுதியில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவுகோலில் 6.8 அலகுகளாகப் பதிவாகியுள்ளது.

உஸ்ட்- நேரா என்கிற கிராமத்திலிருந்து வடக்கே 300 கிலோமீற்றர் தொலைவில் பூமிக்கு அடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கத்தின் மையம் காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதி மக்கள் குடியிருப்புகள் அற்ற பிரதேசம் என்பதால் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.(ற)

பதவியை விட்டு விலகினாலும் மக்களோடு இணைந்திருப்பேன்

பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பர்

வத்திக்கான், பெப்.16

பாப்பரசர் பதவியை துறந்தாலும் மக்களுடன் இணைந்திருப்பேன் என பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பர் தெரிவித்துள்ளார்.

பெசிலிக்காவிலுள்ள புனித பேதுருவானவர் தேவாலயத்தில் நடைபெற்ற திருநீற்றுப் புதன் திருநாளில் தமது இறுதி பொது பிரார்த்தனையை அவர் மேற்கொண்டார். அப்போது மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பாப்பரசர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்த பின்னர், முதல் முறையாக அவர் பொது பிரார்த்தனையில் கலந்துகொண்டார். அந்தப் பிரார்த்தனையில் கலந்துகொண்ட சுமார் 8000 பக்தர்கள் மத்தியில் பாப்பரசர் உரை நிகழ்த்தினார்.

பாப்பரசர் பொறுப்பில் இருந்து விலகவுள்ளதாக அறிவித்துள்ள 16 ஆவது ஆசீர்வாதப்பர், இந்தமாத இறுதியில் பாப்பரசர் பொறுப்பில் இருந்து உத்தியோகபூர்வமாக விலகுவார் என்று வத்திக்கான் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ற)

சர்வதேச வர்த்தகத்தில் லஞ்சம் சர்வசாதாரணம்

இத்தாலியின் முன்னாள் பிரதமர் கூறுகின்றார்

ரோம், பெப்.16

சர்வதேச வர்த்தகத்தில் லஞ்சம் கொடுப்பது சர்வசாதாரணம். அதில் தப்பிருப்பதாகத் தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார் இந்தாலியின் முன்னாள் பிரதமர் பெர்லஸ்கோனி.

இத்தாலியின் பென் மெனிக்கா நிறுவனம் இந்திய அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகிறது.

அதுதொடர் பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சர்வதேச அளவில் வர்த்தகம் செய்வதற்கு லஞ்சம் மிக அவசியமாகிவிட்டது. எல்லா இடத்திலும் லஞ்சம் உள்ளது. அதைக் குற்றமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

பென் மெனிக்கா நிறுவனத்தின் தலைவர் ஓர்சியை கைது செய்தமை தவறு. அதனால் இத்தாலியின் பெரிய நிறுவனங்களிடம் இனி யாரும் ஒப்பந்தம் செய்ய முன் வர மாட்டார்கள்-என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பென் மெனிக்கா நிறுவனத்துக்குப் புதிய தலைவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. (ற)

காதலர் தின செய்திகளுக்கு பாகிஸ்தானில் கட்டுப்பாடு

இஸ்லாமாபாத், பெப்.16

காதலர் தினக் கொண்டாட்டங்களைப் பற்றி செய்தி வெளியிடுவதை மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு பாகிஸ்தான் ஒலி-ஒளிபரப்பு அமைச்சு கோரியுள்ளது. அதுகுறித்து பாகிஸ்தானிய வானொலிகள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது.

காதலர் தினக் கொண்டாட்டங்கள் குறித்த செய்திகள், மத உணர்வுகளைப் புண்படுத்தக் கூடும். அத்துடன் நாட்டின் இளைஞர்களின் பாதையையும் மாற்றக்கூடும். அவற்றைத் தவிர்க்கவே காதலர் தினக் கொண்டாட்டங்கள் பற்றிய செய்திகளை மட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

காதலர் தினம் கொண்டாடப்படுவது நாட்டின் மத விழுமியங்களுக்கு எதிரானது என்று சமூகத்தின் பெரும் பாலான தரப்புகளிலிருந்து வந்த முறைப்பாடுகளை அடுத்தே அமைச்சால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது-என்று ஒலி-ஒளிபரப்பு அமைச்சு விடுத்துள்ள தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பாகிஸ்தானில் காதலர் தினம் பரவலாகக் கொண்டாடப்பட்டது என்று கூறப்படுகிறது. (ற)

ஆப்கன் இராணுவத்தில் பெண்கள் சிறப்புப் படை

காபூல், பெப்.16

ஆப்கன் இராணுவம் பெண்களுக்கான சிறப்புப் படைப் பிரிவை உருவாக்கி பயிற்சி அளித்து வருகிறது. ஆப்கன் இராணுவத்தில் பெண்களுக்கான சிறப்பு படை உருவாக்கப்படுவது இதுவே முதற்தடவை என்று கூறப்படுகிறது.

அவர்களுக்கு சிறப்புக் கொமாண்டோ பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆப்கனில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறத் திட்டமிட்ட நிலையில் இந்தச் சிறப்புப் படைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

பயிற்றப்படும் சிறப்புப் படைப்பிரிவு, கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்தல், இரவு நேர ரோந்து நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடு படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

பெண்களுக்கு எதிரான வன்முறையை எதிர்த்து ஆப்கனில் ஆர்ப்பாட்டம்

காபூல், பெப்.16

ஆப்கனில் அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தக் கோரி ஆப்கன் நாடாளுமன்றம் அருகே பெண்கள் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

ஆப்கனில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் குரல் கொடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த ஏராளமானோர் ஆப்கன் நாடாளுமன்றத்துக்கு அருகில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். (ற)

வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, கவாரியார் வீதியில் இணைந்த குளியல் அறை,1200 சதுரஅடி, மைல் பதிக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு-0775194332

(27674)(3.45.6.7)

புறோயிலர் இறைச்சி கோழி விற்பனைக்குண்டு

நீர்வேலி சந்தி, பழயகிளாஸ்பக்ரறி முன்பாக புதன், சனி, ஞாயிறு கிழமைகளில், 6 மணியிலிருந்து ஒரு மணி வரை, சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: 0776331914 (28926)(2.6.7)

வீட்டுடன் காணி விற்பனைக்கு

நல்லூர் மூத்தவிநாயகர் வீதி, 133ஆம் இலக்கத்தில் (பழைய வளவு) 05 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- 077 8323 526, 021 3007 562.

(29284)(3.45.6.7)

காணிகள் விற்பனைக்கு

சங்கானை மேற்கு, சாங்கையில் 11 பரப்பு பள்ள வயற்காணி (இரண்டு போகம் செய்யக்கூடியது) உரும்பிராய் சம்பந்தர் ஒழுங்கை, வடலிப் புலத்தில் 15 பரப்பு தோட்டக் காணி என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு-0772873245, 0778025022

(29401)(6.7.11)

வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் சர்வதேச DMI நிறுவனத்தில் புதிதாக வடக்கு,கிழக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய கிளைகளுக்கு பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன பயிற்சியுடன் வேலைவாய்ப்பு அளிக்கப்படும். பயிற்சியின் போது 10000/= 12000/= வரையும் பயிற்சியின் பின் 35000/= ஆரம்ப சம்பளத்துடன் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளலாம்.

★ தகைமை O/L ஆகக்குறைந்தது
★ வயதெல்லை 18-30

முதல் வரும் 25 நபர்களுக்கு மட்டும் தங்குமிட வசதியும் உணவு வசதியும் இலவசம்.

T.P- 0774122203, 0247900171

(27673)(46. 3.6.7)

வாகனம் விற்பனைக்கு

மிற்சுபி வடி வாகனம் ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0756701519 (28954)(2.6.7)

காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய் - பண்டத்தரிப்பு பிரதான வீதியில் 3 பரப்பு காணி விற்கப்படும்.

தொடர்பு:- 0777110569 (28934)(2.6.7)

வீடு வாடகைக்கு உண்டு

ஆனைப்பந்தியடியில் வீடு வாடகைக்கு உண்டு. Working Couple Prefered, No Brokers

தொடர்பு:-0715140950 (28930)(2.6.7)

SINHALA CLASSES

SINHALA CLASSES
BY
PIYADASA (RETIRED SINHALA TEACHER S.L.T.S-1)
VISTING LECTURER
OPEN UNIVERSITY (SINHALA)
CONTACT NO - 0718797761
E.S.Piyadasa
132, Brown Road, Jaffna.

(28930)(6.7.11)

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1975, பூசம், கடகராசி, ஒன்றில் செவ்வாய் 30½ கிரகபாவம், 5'8" BSC பட்டதாரி following Dip.சட்டமாணி LLB ஆசிரியருக்கும் 1976, உத்தரம் கன்னிராசி, 28 கிரகபாவம், 5'8" Advance Diploma in NCC (UK) following MCSC, CISCO, Managing Director Colombo மணமகன்களுக்கு படித்த பணியிலுள்ள மணப்பெண்கள் தேவை.

சிவாலயா சர்வதேச திருமண நிலையம், 42/11, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

0779694009, 0244907956 (வவுனியா)
Email-shivaalaya@yahoo.com/
jesus wedding mattimony@gmail.com

(28918)(6.7.11)

ஆடுகள் விற்பனைக்கு

நல்ல இன செவி, மடி செவியமுனாபாறி, சணல், கடாய், மறி.

தொடர்பு: 0779181018 (28931)(2.6.7)

IELTS

A1 B1 B2

Quick Preparation Class Av. Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts

தனிப்பட்ட முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்

K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

வீடு விற்பனைக்கு

சுதுமலை கிழக்கு, மானிப்பாய், இணுவில் - மானிப்பாய் வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் (பாலாவோடை) 6 பரப்பில் அமைந்த கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
077 6004219

(28963)(2.6.7)

தற்போதைய அதிபர் ஆசிரியருடன் புலமையாளர்கள் இடமிருந்து வலம்

பீ.பயஸ் ஜெனோசன்	- 159	ஸ்.றிவால்டோ	- 157,
யூ.அபிஷன்	- 150,	வி.டிசாந்தன்	- 169,
சி.யேசுநாதன்	- 152,	யூ.கிஷாந்தனன்	- 152,
அ.போஸ்வின்	- 166		

இவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 10 மாணவர்களையும் முன்னோடியாக நின்றுழைத்து புகுவியுயர்வு பெற்றுச் சென்ற அதிபர் செல்வி அன்ரனி சந்தா மரியபாரிள்ளை மற்றும் ஆசிரியர் இராசையா ஜெகுமார் அவர்களையும் இன்றைய பரிசளிப்பு நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes
பாடசாலைச் சமூகம்.
யா/இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலை

(28955)(5-6-7)



IIS
SUCCESS THROUGH KNOWLEDGE

IIS CITY CAMPUS

17th INSTITUTE DAY & GRADUATION - 2013

எமது வாழ்விற்கு கலங்கரை விளக்காக ஒளிரும் IIS CITY CAMPUS அன்னையின் பாதக்கமலங்களுக்கு இவ்விதழ் சமர்ப்பணம்

இன்று (16.02.2013) இல.1229, K.K.S வீதி, பூனாறிமரத்தடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள "செல்வா மஹாலில்" நடைபெறும் பட்டமளிப்பு விழாவிலே பிரித்தானிய Edexcel நிறுவனத்தின் Higher National Diploma பட்டக்கல்வியில் கணினி விஞ்ஞானம், குடிசார் பொறியியல், கணிய அளவையியல் ,வர்த்தக முகாமைத்துவம் ஆகிய துறைகளில் கற்கை நெறியை பூர்த்தி செய்து பட்டங்களைப் பெறும் எமது சகோதர, சகோதரிகளை மனதார வாழ்த்துவதோடு, அவர்கள் மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று சிறந்த பிரஜைகளாக இம் மண்ணிலே மிளிர எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிப்பாராக

சிறப்பிதழ் தொகுப்பு
மாணவர் மன்றம் 2012/13
IIS CITY CAMPUS

(சி/4906)

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் வாகனங்களின் உடைந்த பிளாஸ்ரிக் உதிரிப்பாகங்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மின் திருத்திக்கொடுக்கப்படும்.

இல. 06, நகரசபை லேன், சிவலிங்கப்புளியடி, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: இல. 30/27, ஏத்த விநாயகர், இரண்டாம் ஒழுங்கை, நல்லூர்.
Tel: 021 222 8680, 0775925088, 0750407430

(சி/6217)(2.6)

சொற்பொழிவு

சுவாமி சின்மயானந்தரின் பிறந்த தினத்தை முன்னிட்டு வேதாந்த மடத்தின் ஏற்பாட்டில் யாழ். சின்மயாமிஷன் நடத்தும் ஸ்ரீமத்பகவத்கீதை தொடர் சொற் பொழிவை இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20ஆம் திகதி வரை மாலை 6 மணிக்கு இல. 18, குமாரசுவாமி வீதி, யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் இடம் பெறவுள்ளது. இந்த தொடர் சொற்பொழிவை யாழ். சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா நிகழ்த்துவார். (ம-14)

வேலைவாய்ப்பு

இலங்கையின் பிரபல தொலைத் தொடர்பாடல் நிறுவனம் ஒன்றிற்கு வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனை மேம்படுத்தல் அதிகாரி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்ப்பார்க்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு-0772264756

(காலை 8.30 முதல் மாலை 5.30 வரை அலுவலக நாள்களில் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

(27877)(3.6)

விற்பனைக்கு

வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட பின்வரும் பொருள்கள் விற்பனைக்குண்டு.

1) ஜாக் முட்டு பைப் - 2''
2) கலர் பிறிண்டர் பக்ஸ் மொடல்

தொடர்பு:- (28928) (2.6.7)

0778446093, 0776013566

வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

சகல விதமான மோட்டார் வாகனங்களுக்கும் பிளாஸ்ரிக் உடைவுகள் ஒட்டுதல், ஸ்பிறே பெயின்ரிங் செய்தல், பைவர் மோல்டிங், பிளேற்றிங் மொப்பிங், கண்ணாடி பொலிசிங் செய்தல் என்பன சிறந்த முறையில் சீர்செய்து கொடுக்கப் படும். (நல்லூர் பின் வீதி)

இல.286/2, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: கி.கேதீஸ்வரன் 077351 2591

(28924)(5-6-7)

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, புனித யுவானியர் தேவாலயத்திற்கு அருகில் நிலப்பரப்பு 1குளி 3.95 அளவு கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 163 6394, 075 508 5715

(28936)(5-6-7)

விற்பனைக்கு

Sony Z 7 e Video Camera (32 GB memory, Sony-Recorder) விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 618 3106,021 492 3936

(28938)(5-6-7)

தவறிவிட்டது

சிங்கம் லேன், உடுவில் என்னும் முகவரியுடைய மகேந்திரராசா சுகந்தினி என்பவரின் தேசிய அ.அட்டை (878182669V), சாரதி அனுமதிப்பத்திரம், NSB,Bank of ceylon ஆகிய வங்கிப்புத்தகங்கள் மற்றும் வேறு சில ஆவணங்கள் அடங்கிய கைப்பை உடுவில் ஆலடி ஆஸ்பத்திரிக்கும், சீரணிச் சந்திக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 774 3137, 077 903 0960

(28943)(5-6-7)

காணி விற்பனைக்கு

கொடிகாமம், பருத்தித்துறை வீதியிலுள்ள குளத்தடியிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் பயன்தரு மரங்களுடன் கூடிய 10 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 736 6784, 021 227 0554

(18939)(5-6-7)

மணமகள்தேவை

* 68இல் பிறந்த, 8இல் செவ்வாய், 15½ பாவமுடைய, ஜேர்மனியில் பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு அழகான, படித்த மணமகள் தேவை.
* 79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 42 பாவமுடைய CIMA முடித்து லண்டனில் பிரஜா உரிமை பெற்ற சைவபோசன மணமகனுக்கு B.Sc., M.Sc. முடித்த சைவ போசனமுள்ள மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த, 2 இல் செவ்வாய், 28½ பாவமுடைய, ஆஸ்திரேலியா பிரஜாஉரிமை பெற்ற மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த 12இல் செவ்வாய் 35½ பாவ முடைய CIMA முடித்து சவுதியில் அரச நிறுவனத்தில் எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 78 இல் பிறந்த, செவ்வாய் பாவமில்லாமல் 21¼ பாவமுடைய, லண்டன் பிரஜா உரிமை பெற்று வந்துள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை.

நாலக்கண்ணன் திருமண சேவை
இல. 435/3, கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே.:077 607 0862

(28941)(5-6-7)

மரண அறிவித்தல்

சாமுவேல் செல்வநாயகம்

உமையாள் புரத்தை பிறப்பிடமாகவும் திருவையாறு 2 ஆம் பகுதியை வதிவிடமாகவும் கொண்ட சாமுவேல் செல்வநாயகம் 14.02.2013 அன்று காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், மகாலிங்கம், காலஞ்சென்ற சந்திரன் மற்றும் புஸ்பவதி, தயாவதி, சிவஞானம் (ஆசிரியர்), திருஞானம் (பிரான்ஸ்), திலகா (லண்டன்), கருணாவதி, பத்மாவதி, பிறேமா ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தி, பரமானந்தம், குஞ்சு, விக்னராஜா, வளர்மதி, காமினி (பிரான்ஸ்), சுகந்தன் (லண்டன்), குமார், நந்தகோபாலன், ரஜனிகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா, செல்லத்துரை, சரஸ்வதி மற்றும் மகேஸ்வரி, தவமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2013) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இரணைமடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.54/2, திருவையாறு,
கிளிநொச்சி.
தொ.பே.இல- 0215687111

தகவல்:
குடும்பத்தினர்.

(24251)(6.7.11)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்	மறைவு
10*02*1938	19*01*2013

சமரபாகு மஞ்சிமாவை பிறப்பிடமாகவும், எரிச்சோலையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி இராசம்மா 19.01.2013 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பசுபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரவணை வீரகத்தியின் அன்பு மனைவியும், சீதாதேவி, றஞ்சிதாதேவி, சச்சிதானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற துரைராசா, புலேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற கிருஸ்ணசாமி (Engineer), சந்திரசேகரம் (AO,GN.JP), ஸ்ரீமலர் (Bahrain), மாலினி, றஜனி, பாமினி (Teacher), சுதா, பிரகாஸ் (France) பிரதீஸ் (France) ஆகியோரின் அன்பு மாமியும், சரஸ்வதி மற்றும் காலஞ்சென்ற நேசமலர் ஆகியோரின் மைத்துனியும், உமா (Canada), றமா (Teacher), ஜிமா (Australiya), றஜீமா (Teacher), கோபிகிருஸ்ணா (Australiya), பேபிகிருஸ்ணா, ரீபசேகரம் (London), நிரஞ்சினி (Jaffna University) ஆகியோரின் அம்மம்மாவும், சுஜீத் (ACCA,BBA, Senior Charted Accountant-Bahrain), சுஜன் (B.Com-Bahrain) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அமரர்
வீரகத்தி இராசம்மா

எமது குலவிளக்காய் திகழ்ந்த வீரகத்தி இராசம்மா இறைபதமடைந்த செய்தி கேட்டு உடன் வந்து ஒத்தாசை நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தூரத்தில் இருந்து தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தோருக்கும், அனுதாபம் தெரிவித்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (16.02.2013) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, 18-02-2013 திங்கட்கிழமை அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், மதியபோசன நிகழ்வும் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: சச்சிதானந்தன் (மகன்)
உரிமையாளர்-
(Saravanaas Nowayar Computer System-Bahrain)
T.P: 00973-39159116

(27745) (10.6.7)

இசை மருந்து

இசை ஓர் மருந்து என்று கூறினால் அதை எவரும் நம்ப மாட்டார்கள். கூறுபவர்களைச் சந்தேகத்துடன் பார்ப்பார்கள்.

''இசை விருந்து'' என்று கூறுவதுதான் பழக்கமாக உள்ளது. அதுபோலவே இசை மருந்து என்று கூறினாலும் அதில் ஒன்றும் தவறில்லை.

''இசை என்றால் எவரோ ஒருவர் பாடும் பொழுது இன்னும் ஒருவர் தலையாட்டி விட்டுச் செல்வது இல்லை''. அதில் அதிகவிடயங்கள் உள்ளடங்கியிருக்கும்.

''காஞ்சிப் பண்'' பாடினால் புண்கள் எல்லாம் விரைவில் குணமாகிவிடும் என்று சங்ககாலப் புலவர்கள் பல பாடலில் பாடியுள்ளனர்.

''அவர்களுக்கு என்ன? ஏதோ ஒரு ''சிந்தனையில்'' பாடிவிட்டு போய்விட்டார்கள்'' என்று நினைத்துக் கொள்ளலாம்.

ஆனால் இப்பொழுது சில வைத்தியர்கள் சொல்வதைப் பார்த்தால், அவர்கள் அனைவரும் அனுபவத்தைத்தான் பாட்டில் சொல்லியிருப்பார்கள் போல் இருக்கின்றது!

முன்பையில் ஒரு வைத்தியர் இருந்தார். அவருடைய பெயர் கே.கெனி.

இசை மூலமாக அவர் சில இதய நோயாளிகளைக் குணப்படுத்தியிருக்கின் றார். அதுமட்டுமில்லாமல் சில ஆஸ்துமா நோயாளிகளையும் குணப்படுத்தியி ருக்கின்றார்.

அவர் அவ்வாறு குணப்படுத்திய நோயாளிகளை நிபுணர்களிடம் காட்டினார்.

முற்றிய நிலையில் இருக்கின்ற காசநோயைக்கூட இசை மூலமாக குணப்படுத்த முடியும் என்பது அவரலால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக எமக்கு வருகின்ற நோய்களுக்கும் மனதுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கின்றது. இசையைக் கேட்கும்போது மனம் இலேசாகும், மனது இதமாக இருக்கும். அதனால் நோய் குணமாவதற்கும் அது காரணமாக இருக்கும் போல உள்ளது.

கடவுளை வணங்கும்பொழுது கண்ணை மூடிக்கொண்டு சிலபேர் பாடுவார்கள் அது எதற்காக என்றால்...

கடவுள் அவர்கள் பாடுவதை ரசித்துக் கேட்கின்றார் என்பதற்காகவா? அவ்வாறு இல்லை.

அவர்கள் பாடுவது அவர்களுக்கே மருந்தாகின்றது. அதுதான் கண்ணை மூடிக் கொண்டு பாடுவதற்குக் காரணம். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் வேண்டுதலை இசை மூலமாகத்தான் இறைவனுக்குச் சொல்கிறார்கள்.

கந்தசஷ்டிக் கவசம், கந்தரனுபூதி, விஷ்ணு சகஸ்ர நாமம், சுப்ரபாதம் இவ்வாறெல்லாம் சொல்வது எதற்காக என்றால்...

இவற்றுக்கெல்லாம் ஆன்மீக காரணங்கள் எதுவாக இருந்தாலும் இதயத்திற்கு இதமாயிருக்கின்றது என்பது எல்லோராலும் விளங்கிக்கொள்ளக் கூடிய ஒரு காரணம்.

யானைக்கு மதம் பிடிக்கும்போது, மதம் பிடித்த யானைகூட இசைக்கு அடங்கிப் போகும் என்ற எண்ணம் தோன்றும். ஒரு பெரிய மலையில் மதம் பிடித்த பெரிய யானை ஒன்று பிளிறிக்கொண்டு ஓடி வருகின்றது. அது ஏன் ஓடி வருகின்றது என்றால்... தினைப்புலத்தில் உள்ள தினைக் கதிரை உண்ணுவதற்காக. அந்த நேரத்தில் தினைப்புலத்தில் ஒரு சிறிய பெண் ஒருவர் காவலுக்காக நின்றாள்.

சிறிது நேரத்திற்கு முதல் பக்கத்தில் உள்ள சுனை நீரில் நீராடிவிட்டு வந்து நிற்கிறாள் அந்தப் பெண். அவளுடைய நீளமான கூந்தல் ஈரமாக உள்ளது அதனால் அதை விரல்களால் வாரிக் கொண்டு இருக்கின்றாள்.

அங்கே ஓடிவந்த யானை அந்த இசையைக் கேட்டது. அப்படியே அசையாமல் நின்றது.

தினைக் கதிரையே உண்ண வந்ததையே மறந்து விட்டது.

பசியை மறந்து இசையில் மறந்து நிற்கின்றது அந்த யானை.

''அக நானூறில்'' இந்தப் பாட்டு உள்ளது. இசைக்கு உள்ள சக்தி எவ்வாறு என்று பாருங்கள்.

ஒரு சங்கீத வித்துவானைப் பற்றி இரண்டுபேர் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அங்கே இருக்கின்ற அந்த வித்துவான் பாடினால் நாள் முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம்! என்று ஒருவர் கூறினார்.

''அவ்வளவு இனிமையாக அவர் பாடுவாரா..?'' என்று மற்றவர் கேட்டார்.

அதற்கு இவர்...

''அவ்வாறு இல்லை; அவர் பாட ஆரம்பித்தால் விரைவில் முடிக்க மாட்டார்!'' அதனால் அப்படிக் கூறினேன் என்று பதில் சொன்னார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

உறுதியான கல்வி வளர்ச்சியில் புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை

(கடந்தவாரத் தொடர்ச்சி....)

ஞானி

ஆரம்பப் பாடசாலைகளின் அடைவு மட்டத்தை கல்வித் தரத்தை வெளிப்படுத்தி சமூகத்தை பாடசாலையின்பால் நம்பிக்கை கொள்ள வைக்கும் குறிகாட்டி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறு பேறு. இந்த வகையில் புத்தூர் இந்து ஆரம்பப் பாட சாலையின் 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட் சைப் பெறுபேற்றில் ஏழு மாணவர்கள் புலமைப் பரிசில் பெறுவதற்கு தகைமை பெற்றிருந்தனர். பெருமளவு மாணவர்கள் பரீட்சையில் சித்தி யடைந்திருந்தனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2011 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பெறுவதற்கு தகைமை பெறும் நிலையில் சித்தியடைந்த வி.ரிஷிசங்கர், க.விதுசனன், கே.திரேசா பா.பிரசாத், ம.வர்ணிகா, ம.வினோசன், வி.விதுஸா ஏழு பேரும் பாடசாலை யில் முதல் வெற்றி வீரர்களாகத் துலங்குகின்றனர்.

கிராமப்புற பாடசாலைகள் இதுவரையில் மக்களின் முழுமையான நம்பிக்கையை பெற்றுக் கொள்ளாத நிலையில் காணப்படுகின்றன. அந்த வகையிலேயே தரம் ஒன்று தொடக்கம் உயர்தர வகுப்பு வரை பல நூற்றுக்கணக்கான மாணவர் களை நகரப் பாடசாலைகளை நோக்கி பெற்றோர் அனுப்பி வைத்துவிட்டு மனச்சுமையுடன் நாளாந் தம் காத்திருக்கின்றனர். இந்த வகையில் பிள் ளைகளும் பல்வேறு உளநெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கல்வியில் கிராமம் நகரம் என்ற வேறுபாடு இன்றி சம வாய்ப்பு ஏற்பட வேண்டும் என்பதற்காகவே இசுறுப் பாடசாலை, ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட் டங்கள் அரசினால் ஏற்படுத்தப் பட்டன. இசுறுப் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் தோற்றம் பெற்றதே புத்தூர் இந்து ஆரம்பப்பாட சாலை. புதிய பாடசாலையில் சமூகம் கொண்டுள்ள நம்பிக்கை உரிய முறையில் நிறைவேற் றப்படுமானால் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தரம் 1-5 வகுப்புகளில் கணிசமான எண்ணிக்கையானோர் கிராமி யச் சூழலிலேயே தமது ஆரம் பக் கல்வியை மன நிறைவோடு பெற்றுக் கொள்ள முடியும்.

இசுறு பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் பிரகாரம் தோற்றம் பெற்றதே புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை. புதிய பாடசாலையில் சமூகம் கொண்டுள்ள நம்பிக்கை உரிய முறையில் நிறைவேற்றப்படுமானால் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தரம் 1–5 வரையான வகுப்புகளில் கணிசமான எண்ணிக் கையானோர் கிராமியச் சூழ லிலேயே தமது ஆரம்பக் கல்வியை மன நிறைவோடு பெற்றுக் கொள்ள முடியும்.

புத்தூர் இந்து ஆரம்பப் பாட சாலை புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தக் கல்லூரியில் இருந்து 2010, ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் திகதி பிரிந்து வேறு பாட சாலையாக புதிய நிர்வாகத் தின் கீழ் செயற்படத் தொடங் கியதில் இருந்து, ஆரம்பக் கல்வி யில் உறுதியான வளர்ச்சிக்கு இடமளித்து முன்னேறி வரு வதாக பாடசாலைச் சமூகம் நம்பிக்கை கொண்டு ஒத்து ழைப்பு வழங்கி வருகின்றது.

புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலையின் முதலாவது அறுவடையாக 2011 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வி.ரிசி சங்கர், ச.விதுஸனன் கோ. திரேகா, பா.பிரசாந். கு.வர்ணிகா, ம.விரோசன் வி.துர்ஸன் ஆகிய ஏழு மாணவர் சித்தியடைந்து தரம் ஐந்து புலமைப் பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்றனர். கணிசமான தொகையினர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்டனர். இது பெற்றோரின் எதிர்பார்ப்பை மெய்மைப் படுத்தியதோடு ஆசிரியர்கள், அதிப ரையும் புத்தூக்கம் கொள்ளச் செய்தது.

புலமைப் பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்ற ஏழு மாணவர்களும் தமது வெற்றிக்கு உறுதுணை யாக இருந்த பாடசாலைக்கு உதவ வேண்டும்; பாடசாலையில் நிலவும் அடிப்படைத் தேவைகளை ஓரளவேனும் நிறைவு செய்ய வேண்டும் என்ற உயர் நோக்கோடு மூன்று இரும்பு அலுமாரிகளை 40 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்து பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

புதிய பாடசாலையாகப் பிரியும் போது உத்வேகத் தோடு பிரிந்தபோதிலும், நாளாந்த நடைமுறையில் தேவைகளை உரிய வேளையில் நிறைவு செய்து கொள்வதில் எதிர்பாராத இடர்பாடுகளைப் பாட சாலை நிர்வாகம் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.

பாடசாலையின் தேவையைக் கருத்தில் கொண்டு யூனிசெவ் நிறுவனம் புதிய மலசலகூடம் ஒன்றை நிறுவி மாணவர்களின் அடிப்படைத் தேவையை நிறைவு செய்தது. பாடசாலை சமூகத் தில் முன்னணிப் பிரமுகர் கு. மகாதேவன் ஒலி பெருக்கி சாதனத் தொகுதியை வழங்கி உதவினார். ஜேர்மனிலுள்ள பழைய மாணவனான ரமேஸ் பாண்ட் வாத்தியக் கருவியை வழங்கியுள்ளார்.

யாழ். கல்வி வலயம், பாடசாலையில் கணினி கூடத்தை நிறுவி நான்கு கணினித் தொகுதிக ளையும் வழங்கியுள்ளது. பாடசாலை மாணவர்களின் பெற்றோர் போட்டோஸ்ரட் யந்திரம் ஒன்றை வழங்கியுள்ளனர். யுனிசெவ் நிறுவனம் ஐந்து லட்சம் ரூபா செலவில் தண்ணீர் தாங்கியை நிறுவி குழாய் இணைப்புக்களைச் செய்து மாணவர்களின் குடிநீர் வசதியை வளமாக்கியுள்ளது.

புதிய பாடசாலை யின் அடிப்படைத் தேவை களை நிறைவு செய்வ தில் தாய்ப்பாடசாலை யான ஸ்ரீ சோமஸ் கந்த கல்லூரியின் நிர்வாக மும் காலத்துக்கும் கள நிலைக்கும் ஏற்ற வகை யில் உதவிகள் ஒத்துழைப் புக்களை நல்கி வருவது பாடசாலையின் வளர்ச் சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றது.

பாடசாலையின் தேவை என்ற வகையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய போதிலும் ஆங் கில ஆசிரியர் இல்லாமை பெருங்குறையாகவுள்ளது. மாணவர்களின் ஆங்கில அறிவு விருத்தியில் இது பெரும் பாதிப்பையும் ஏற்படுத்தி வருவதாக பெற்றோர் கவலை தெரி விக்கின்றனர். இந்த வகை யில் வலயக் கல்வி நிர் வாகம் பாடசாலையின் தேவையை இனங்கண்டு நிறைவு செய்யத் தவறி விடுதல் பெற்றோர் மத் தியில் மனத்தாக்கத்தை ஏற்படுத்தி வருவதோடு நகரப் பாடசாலைகளை நோக்கி பிள்ளைகள் செல்வதற்கும் வழி வகுத்து விடுகின்றது. பாடசாலையின் தேவைகள், எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக பாடசாலையின் அதிபர் இ. கோகுலராகவன் கருத்து தெரிவிக்கையில்,

புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலை புதிய பாடசாலை என்ற வகையில் பெற்றோரின் நம்பிக்கையை நிறைவு செய்து வருகின்றது. பாடசாலைச் சமூகம் சோமஸ்கந்தக் கல்லூரிக்கு அருகில் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து புதிய மாடிக்கட்டடம் ஒன்றை நிறுவி தனித்துவமான முறையில் பாடசாலையை செயற்பட வைப்பதற்கு எண்ணியுள்ளது. எண்ணம் நிறைவேறும்; நல்லன நடக்கும் எனத் தெரிவித்தார். (முற்றும்)

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித்திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலு சந்தி, அல்வாய்: 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, ஜோதி புக்சென்ரர் – மன்னார்: 0232222052 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

நீருயர நெல்லுயரும்...?

மன்னர் ஆட்சி நிலவிய காலத்தில் அரசவைக்குள் நுழைந்தவுடனேயே மன்னனின் வாயில் இருந்து உதிரும் சொற்கள் இவையாகத்தான் இருக்கும்.

''மந்திரியாரே! நாட்டில் மாதம் மும்மாரி பொழிகிறதா..?'' என்பதே அது. ஏனெனில் நல்லாட்சி நிகழ்ந்தால் ஒரு மாதத்தில் மூன்று முறை– அதுவும் இரவில் மாத்திரம்– மழை கட்டாயம் பொழிய வேண்டும். அவ்வாறில்லாமல் மழை பொய்த்து விட்டாலோ அல்லது பகலில் திடீரெனப் பெய்து மக்களின் வாழ்வை குழம்பச் செய்து விட்டாலோ ஆட்சியில் ஏதோ ஊறு நிகழ்ந்து விட்டது என்றே அந்தக் காலத்தில் அர்த்தம் கொள்ளப்பட்டது. அத்தோடு மழை சீராகப் பெய்தால்தான் பயிர்கள் செழித்து வருமானம் பெருகி மக்களும் நாடும் மகிழ்வோடு இருக்க முடியும். எனவே தமது ஆட்சியின் நிலையை அறிந்து கொள்ள மழை பற்றிய விசாரிப் புகளோடே அரசவையை மன்னர்கள் ஆரம்பிப்பது வழக்கமாகவிருந்தது.

இப்போதும் இலங்கையின் பல பிரதேசங்களில் மாதம் மும்மாரி பொழியத்தான் செய்கிறது. ஆனால் எப்போதெல்லாம் பயிர்களுக்கும் மக்களுக்கும் மழை வேண்டுமோ அப்போதெல்லாம் ஒளிந்திருந்துவிட்டு, தேவையற்ற வேளைகளில் கொட்டித் தீர்க்கிறது பெருமழை. ஒரு முறை ஔவை கூட ''வரப்புயர..'' என்று மன்னனை வாழ்த்தினார். அதில் ''நீருயர நெல்லுயரும்..'' என்றொரு வரியுண்டு. இப்போதும் வயல்களில் நீருயர நெல்லும் உயரவே செய்கின்றது. அறுவடை செய்யப்பட்டு சூடுமிதிப்புக்காக அடுக்கப்பட்டிருந்த நெற்பயிர்களெல்லாம் வெள்ளத்தில் உயர்ந்து, மிதந்துகொண்டிருக்கின்றன.

இந்த முறை பெரும்போகச் செய்கை ஆரம்பிக்கும் முன்னரே பெருமழை தொடங்கியிருந்தது. ஆனால் பயிர் விதைப்பின் போதோ , உரம் போடும் போதோ , களை பிடுங்கும் போதோ , கதிர் தள்ளும் போதோ ஏனென்றும் எட்டிப் பார்க்கவில்லை அது. ஆனால் இத்தகைய பருவங்களில் தான் நெற்பயிருக்கு மழை கட்டாயம் தேவை. விவசாயிகளும் மழைக்காகக் காத்திருந்து களைத்துப் போய், கடைசியில் குளத்திலிருந்தோ , கிணற்றிலிருந்தோ நீரை இறைத்து நெல்லுக்கு தண்ணீர் பாய்ச்சி விட்டு நிமிர்கையில் , ''சோ'' என பெருமழை விண்ணில் இருந்து மண்ணைத் தொடும். தண்ணீர் கூடியதால் பயிர்கள் அந்தரித்து, தள்ளாடும்.

இந்தமுறை ஒவ்வொரு பருவத்திலும் மழையால் பாதிப்புற்ற பின்னும் தப்பிப் பிழைத்த வயல்களில் அறுவடை செய்து தாம் விதைத்த நெல்லையாவது எடுத்துவிடலாம் என்றே விவசாயிகள் நம்பிக் கொண்டிருந்தனர். கொத்தாக குலுங்கிக் கொண்டிருந்த நெல் மணிகளோடு பயிர்களை அரிவுவெட்டி, சூடுவைப்பதற்காக அடுக்கியும் வைத்தனர். ஆனால் இப்போது பெய்த பெருமழை அடுக்கி வைத்த அத்தனை கதிர்களையும் அள்ளிச் சென்று விட்டது. வழமை போலவே வாயிலும் வயிற்றிலும் அடித்து புலம்புவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் விவசாயிகளால்..?

''இப்பிடி பருவம் தப்பி கண்ட கண்ட நேரத்துக்கெல்லாம் முந்தி மழை பெய்யுறேல. இப்ப கலிமுத்திப் போச்சுது. நாட்டில் நல்ல ஆட்சி நடந்தால் ஏன் இந்தப்பாடு..? நல்லாட்சி நடக்காததாலதான் இப்பிடி அழிவுகள். அரசர்மார் செய்யுற பிழையளுக்கு அப்பாவிகள் நாங்களெல்லோ அவதிப் படுகிறம்.'' என்று விவசாயிகள் தங்களுக்குள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தென்னிலங்கை விவசாயிகளுக்கு சிறுபாதிப்பு என்றாலே 'ஆத்துப் பதைத்துக்' கொண்டு நிவாரணங்களை அள்ளி வழங்கும் அரசு, தமிழ் விவசாயிகளின் குடிசைகள் வெள்ளத்தில் அள்ளுண்டு போனாலும் கூட அதைப் பற்றி போதிய, மனதார்ந்த அக்கறை கொள்வதில்லை. அவ்வாறிருக்கையில் இப்போது விதைத்த நெல்லைக்கூட எடுக்க முடியாத அளவுக்கு மழையால் இப்போது நொந்து போயுள்ள விவசாயிகளின் துயரைத் துடைக்க, அரசு உரிய வேளையில் முன்னரும் என்று நம்புவதைவிட முட்டாள்தனமான காரியம் வேறொன்றும் இருக்க முடியாது.

தமிழக அழுத்தங்களுக்கு அடி பணியுமா மத்திய அரசு?

இந்திய நாடாளுமன்றின் கூட்டத் தொடர் ஆரம்பிக்கப் படவுள்ளது. இந்தநிலையில், இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் முன்வைக்கப்படும் தீர்மானத்தை இந்திய மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியன அழுத்தம் கொடுத்து வருகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக 'செயல்முறை தீர்மானம்' ஒன்றைத் தான் முன்வைக்கவுள்ளதாக கடந்த மாதம் அமெரிக்கா அறிவித்திருந்தது. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெறும் இறுதி நாளான மார்ச் 22 அன்று இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாக்கெடுப்பு இடம்பெறும் போது இந்திய நாடாளுமன்றின் அமர்வும் இடம்பெறும் என்பதால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கட்சிகள் அதிக அழுத்தம் கொடுக்கும்.

கடந்த ஆண்டில் மனித உரிமைகள் பேரவையில்இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என அழுத்தம் கொடுத்த தமிழ்க் கட்சிகளை இணைத்து இந்த முறையும்பணியாற்றுவதற்கான முயற்சியில் தி.மு.க. இறங்கியுள்ளது.

தமிழீழ ஆதரவாளர் அமைப்பான ரெசோ அமைப்பின் மூத்த உறுப்பினர்கள் உள்ளடங்கலாக தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்ராலின் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று கடந்த திங்களிலிருந்து இதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளனர். அதாவது பேரவையில் அமெரிக்காவால் முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரிக்குமாறு கோரி, ஸ்ராலின் தலைமையிலான பிரதிநிதிகள் குழு சில அனைத்துலக நாடுகளின் தூதரகங்களுக்கு நேரில் சென்று பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்.

தி.மு.க.பொருளாளர் மு.க.ஸ்ராலின் தலைமையிலான குழுவினர் இந்தியாவுக்கான இத்தாலி, மலேசியா மற்றும் மொன்றனீகுறோ தூதர்களைச் சந்தித்து இது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

பிரதிநிதிகள் குழுவினர் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் மற்றும் ரஷ்ய தூதுவர்களையும் சந்தித்து தமது கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தையும், இலங்கை மீது முன்வைக்கப்பட்ட போர்க் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்படுவதை எதிர்த்தும் ரஷ்யா வாக்களித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதே.

இலங்கை அரசானது தனது நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்கி, அவர்களை சமமாக நடத்தும் வரை இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையை விதிப்பதற்கான தீர்மானம் ஒன்றை ஐ.நாவில் நிறைவேற்றுவதற்கான கோரிக்கையை முன்வைப்பதற்கான முயற்சியை இந்திய மத்திய அரசும் முன்வைக்க வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா கடந்த வாரம் வலியுறுத்தியிருந்தார்.

பெப்ரவரி 21 அன்று ஆரம்பமாகவுள்ள இந்திய நாடாளுமன்ற அமர்வின் போது இந்தக் கோரிக்கையை தி.மு.க மற்றும் அ.இ.அ.தி.மு.க ஆகியன இணைந்து இந்திய மத்திய அரசிடம் வலியுறுத்தவுள்ளன.

இந்திய நாடாளுமன்றின் இரு சபைகளிலும் தி.மு.க. இலங்கை மீதான தனது கோரிக்கையை வலுப்படுத்தவுள்ளதாகவும், இலங்கைத் தமிழர்களின் புனர்வாழ்வு மற்றும் அவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வு தொடர்பாக அரை மணி நேர விவாதம் ஒன்றை அ.இ.அ.தி.மு.க முன்வைக்கவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த மாதம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தைச் சேர்ந்த மூன்று உயர் மட்ட அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்த போது ஐ.நா. பேரவையில் அமெரிக்காவால் முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள செயன்முறைத் தீர்மானம் தொடர்பாக அறிவிக்கப்பட்டது. 2012இல் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்த 24 நாடுகளும் இந்தத் தடவையும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பர் என அமெரிக்காவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் இந்தியா தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. கடந்த ஆண்டில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக இலங்கையால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்வதற்கான ஒரு செயன்முறையாகவே தற்போது முன்வைக்கப்படவுள்ள தீர்மானம் அமைந்திருக்கும் என அமெரிக்கா சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த தடவை முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் இந்தியா ஈடுபட்ட போதிலும் அது பயனளிக்கவில்லை. இலங்கைக்கு எதிராக கடந்த ஆண்டில் தீர்மானம் முன்வைக்கப்படுவதற்கு முன்னர் அதன் மொழிநடையில் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு அமெரிக்கா மற்றும் ஏனைய தரப்பினருடன் இந்தியா பேச்சுக்களை நடத்தியிருந்தபோதிலும் அது வெற்றியளிக்கவில்லை.

ஆனால் இந்தத் தடவை இந்தியா கடந்த தடவை போன்று இலங்கை சார்பாக முன்னின்று செயற்படாது. இந்தியாவின் உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் அழுத்தங்களே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

ஜெயலலிதா அரசை சாந்தப்படுத்துவதற்காக கடந்த ஆண்டில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இதன் பின்னர் கூடங்குளம் அனல்மின் நிலையத் திட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தமிழ்நாட்டு அரசின் ஆதரவு இந்திய மத்திய அரசுக்கு தேவைப்பட்டது.

இந்தத் தீர்மானம் தொடர்பாக இலங்கையும் அமெரிக்காவும் நேரடிப் பேச்சுக்களில் ஈடுபடுவதையே இந்தியா விரும்பியது. கடந்த ஆண்டில் முன்வைக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் இந்தியாவால் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள் பயனளிக்காத நிலையில் இலங்கை அரசு தனது நிலைப்பாட்டில் சடுதியான மாற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் இந்தியா சமரச முயற்சியைக் கைவிட்டு அமெரிக்காமற்றும் இலங்கை நேரடிப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கான நிலைப்பாட்டை உருவாக்கியது.

அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் இலங்கைக்கு எதிரான தமது வரைவை, வாக்களிப்பு இடம்பெறுவதற்கு 10 நாள்களுக்கு முன்னர் பேரவையில் சமர்ப்பிப்பார்கள். ''இறுதி நிமிடத்தில் இவ்வரைவில் நிறைய மாற்றங்கள் செய்யக் கூடும். இதனால் வாக்களிப்பு இடம்பெறுவதற்கு இன்னும் பல நாள்கள் இருக்கும் நிலையில் தற்போது நாம் இது தொடர்பில் அழுத்தம் கொடுப்பது சாதகமாக அமையாது'' என இந்தியாவின் மூத்த அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ★

(நன்றி: புதினப்பலகை)

தருவது வித்தியா

இன்றைய நாள்

உங்களுக்கு எப்படி?

மேடம்: மன உளைச்சல் ஏற்படும். யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக் கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினைகள் வந்து போகும்.

இடபம்: வெளியில் முடிய வேண்டிய சில காரியங்களை இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி வரும். உறவினர், நண்பர்களால் சங்கடங்கள் ஏற்படும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

மிதுனம்: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

கடகம்: புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் விலகும். வியாபாரத்தில் பழைய மிகுதிகளை வசூலித்து பெறுவீர்கள். அரசகாரியங்களில் அனுகூலம் உண்டு.

சிங்கம்: செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் கூடும். பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

கன்னி: மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதைப் பெரிதாக்க வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்படுவீர்கள்.

நாலை

மாசி- 05 ஞாயிற்றுக்கிழமை 17.02.2013
திதி: ஸப்தமி பி.ப. 03.07 வரை
நட்சத்திரம்: பரணி மரணை மு.ப. 10.52 வரை
சுபநேரம்: 09.32- 11.02 வரை
இராகுகாலம்: 05.02- 06.32 வரை

துலாம்: பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். பெண்களுக்கு பெற்றோரின் ஆதரவு கிட்டும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

விருச்சிகம்: தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. தாயாரின் உடல்நிலை சீராக இருக்கும். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

தனுசு: திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

மகரம்: நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். பணம் தேவையான அளவு இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

கும்பம்: புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள். பணவரவு உண்டு.

மீனம்: யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். நண்பர்களின் வருகையுண்டு. வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும்.

சுடோக்கு

எண் விளையாட்டு

4		7	6			9		1
8	6	9	2	1		5	7	
				9			6	
				5				8
	7		8		2		3	
2				4				
	8			7				
	3	4		2	6	8	1	7
7		1			9	6		2

நேற்றைய சுடோக்கின் விடை

3	9	6	4	1	2	8	7	5
4	8	5	3	7	6	9	2	1
2	7	1	1	8	5	6	4	3
7	1	9	6	8	4	5	3	2
8	6	2	1	5	3	7	9	4
5	4	3	9	2	7	1	8	6
9	3	8	2	6	1	4	5	7
1	5	4	7	3	9	2	6	8
6	2	7	5	4	8	3	1	9

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபபகுதிகள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சிலகட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானிய சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக புழக்கத்தில் கொண்டுவந்தது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

CITY COLLEGE OF ENGLISH

ENGLISH EXAMINATIONS

IELTS BRITISH COUNCIL

ACADEMIC & GENERAL

IELTS பரீட்சைகள் **16.05.2013** இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

* பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள் 16.02.2013 ஆரம்பம்.
* விரிவுரையாளர்கள் IELTS ஆசிரியப் பயிற்சி நெறியில் பயிற்சி பெற்றவர்களாவர்
* ஒவ்வொரு மாணவர்கள் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
* IELTS பரீட்சைக்குப் பதிவு செய்யும் போது இலவச நூல்களை நாம் தருவோம்.
* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British Council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்.

வகுப்புகள் ஆரம்பம் **16.02.2013** Classes : Sat, Sun 8.30 - 11.30 am

IELTS Registration Center for British Council.

IELTS கற்கப்போதுமான அளவு ஆங்கில அறிவு இல்லையெனில் முதலில் **PET** வகுப்பில் படித்தபின் **IELTS** இல் சேரலாம்.

16.05.2013 யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைகளுக்கு பதிவுகள் எமது நிலையத்தில் ஆரம்பமாகியுள்ளன. நீங்கள் எங்கு படித்தாலும் எம்மிடம் வந்து பதிவுகளை மேற்கொள்ளமுடியும். கடைசி நேரம் வரை காத்திருக்க வேண்டாம்.

For registration and further details contact

Perliminary English Test

Level B1 PET Perliminary English Test இது ஓர் Intermediate Level பரீட்சையாகும் **UK** யில் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் PET பரீட்சையை IELTS ற்குப் பதிலாக ஏற்றுக்கொள்கின்றன.

A/L சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு போவதற்கு முன் PET வகுப்பில் சேர்ந்து சர்வதேச Certificate ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்.

குறுகிய காலத்தில் பூரண ஆங்கில அறிவனைப் பெற! சரளமாக எந்தச் சுழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச, இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத, எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாகப் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி பரீட்சைகள் PET ஆகும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

வகுப்புக்கள் **ESOL**
பாடநெறியை பூரணமாகக் கற்ற விரிவுரையாளர்களால் நடத்தப்படுகின்றன.

Cambridge University PET பரீட்சைகள் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் 14.05.2013 இல் நடைபெறவுள்ளன.

Barch I - 7.00 a.m - 8.00 a.m
Barch II - 8.30 a.m - 10.30 a.m

வகுப்புகள் ஆரம்பம் **18.02.2013**

UNIVERSITY OF CAMBRIDGE

நீங்கள் ஏன் PET பரீட்சைக்கு ஆயத்தப்படுத்த வேண்டும் ?

பரீட்சைப் பெறுபேறுகள் மூன்று Lavel களில் வருகின்றன

Distinction - Lavel - B2
இது ILTS Band 6.5 சமனானது
Pass Lavel B1
நீங்கள் 46 புள்ளிகளுக்கு மேல் பெறுவீர்களாயின் Lave A2 கிடைக்கும்

PET tests written and spoken language at an intermediate level in work, study and social situations, for those who want to use English for work and study, PET is an important step towards attaining higher qualifications.

நீங்கள் சாரளமாக ஆங்கிலத்தில் எழுத, நாளாந்தக் கருமங்களை ஆங்கிலத்தில் செய்வதற்கு உடனடியாக PET வகுப்புக்களில் சேருங்கள்.

வகுப்புகள் Mon - Tus - Wed - Thu
வாரத்தில் நான்கு நாட்கள்
8 மணித்தியாலம் நடைபெறும்

CITY COLLEGE OF ENGLISH
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 2220384 / 077 8803887

அமைச்சுக்களுக்கு நேரில் சென்று ஜனாதிபதி அபிவிருத்தித் திட்டங்களை மீளாய்வு செய்வார்

நாளைமறுதினம் முதல் ஆரம்பம் என்கிறார் லலித் வீரதுங்க

கொழும்பு,பெப்.16

தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அமைச்சு மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து அமைச்சுக்களுக்கு நேரில் சென்று மீளாய்வு செய்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

ஜனாதிபதி முன்னெடுக்கவிருக்கும் வேலைத் திட்டம் குறித்து ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான செய்தியாளர் மாநாடு அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் திட்டத்தின் கீழ் ஜனாதிபதி அமைச்சுக்களுக்கு நேரில் சென்று மீளாய்வு செய்யும் முதலாவது கூட்டம் நாளைமறுதினம் திங்கட்கிழமை கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

மஹிந்த சிந்தனை தொலைநோக்கு வேலைத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து ஜனாதிபதி முதலில் மாகாண மட்டத்தில் மீளாய்வுக் கூட்டங்களை நடத்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட மட்ட மீளாய்வுக் கூட்டங்களை நடத்தியுள்ளார். தற்போது அமைச்சு மட்டத்தில் மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளார்.

இந்தக் கூட்டங்களின் ஊடாக அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து விசேட கவனம் செலுத்தப்படுகின்றது.

இதேவேளை ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்களாக செய்து முடிக்கப்படாதுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களைச் செய்து முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் ஜனாதிபதி மேற்கொள்ளவுள்ளார்.

அரச அதிகாரிகள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள், நெருக்கடிகள் குறித்து கேட்டறிந்து அவற்றுக்கும் ஜனாதிபதி தீர்வைப் பெற்றுக் கொடுக்கவுள்ளார்.

அந்த அடிப்படையில் 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்படவிருக்கும் நடுத்தர முதலீட்டு வேலைத் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி தலைமையில் அமைச்சு மட்டத்தில் மீளாய்வு செய்யப்படவுள்ளன.-என்றார். (ச)



ராஜகிரியவிலுள்ள ஆயுள்வேத போதனா வைத்தியசாலையை மிகிந்தலைக்கு இடமாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அகில இலங்கை சுதேச வைத்திய சங்கத்தினர் வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போக்குவரத்துத்துறையில் பிரச்சினைகள்

நிதி அமைச்சு தலையீடு

கொழும்பு,பெப்.16

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பஸ் கட்டண மீளாய்வை நடைமுறைப்படுத்தாமையால் போக்குவரத்துத்துறையில் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. அதனால் பயணிகள் எவ்விதத்திலும் அழுத்தங்களுக்கு ஆளாகுவதைத் தடுக்கும் பொருட்டு நிதி அமைச்சு இந்த விடயத்தில் தலையீடு செய்துள்ளது.

அதனடிப்படையில் தனியார் பஸ் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நிதி அமைச்சின் மத்தியஸ்தத்துடன் தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சில் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை பஸ் கட்டண கொள்கைகள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் சீர்குலைக்கப்பட்டுள்ளன என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

அதன் காரணமாக தனியார் பஸ் உரிமையாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

நாய்களுக்கான தடுப்பூசி மருந்துக்குத் தட்டுப்பாடு

விசர்நாய்க்கடியால் ஆபத்து ஏற்படும் நிலை

விசர்நாய் கடிக்காக நாய்களுக்கு ஏற்றப்படும் தடுப்பூசி மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு மாதங்களாக இந்தத் தடுப்பூசி மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும், இதுவரை அதற்குத் தீர்வு வழங்கப்படவில்லை. அதன் காரணமாக நாடு முழுவதும் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளன. அதனால் விசர்நாய்க்கடியால் ஆபத்து ஏற்படும் நிலை வரலாம் என்று சுகாதார சேவைகள் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை இந்த தடுப்பூசி வகைகளின் கையிருப்பு முடிவடைந்துள்ள போதிலும், தடுப்பூசிக்கான தட்டுப்பாடு நாட்டில் நிலவவில்லை என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் சரத் அமுனுகம தெரிவித்தார். (ச)

26,944 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கு

பௌதிக வளங்களுக்காக 4 ஆயிரம் மில்லியன் ரூபா மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது என்கிறார் திஸாநாயக்க

கொழும்பு,பெப்.16

இந்த ஆண்டு 26,944 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று உயர் கல்வி அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

உயர்கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ள 5182 மாணவர்களுக்கு என சகல பல்கலைக்கழகங்களிலும் வளங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைக்கமைய புதிய பாடத் திட்டம், பழைய பாடத் திட்டம் என வெவ்வேறாக வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன. இதே போன்று உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையின்படி மேலதிகமாக 5182 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

அவர்களை மேலதிகமாக இணைத்துக்கொள்ளத் தேவையான கட்டட மற்றும் சகல பௌதிக வளங்களும் சகல பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. அதற்குத் தேவையான நிதியை அரசு வழங்கி உள்ளது.

பல்கலைக்கழகங்களில் பௌதிக வளங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக அரசு மேலதிகமாக 4000 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

5 பல்கலைக்கழகங்களில் 7 புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அடுத்த மாதம் சகல பல்கலைக்கழகங்களிலும் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. பழைய பாடத்திட்டத்தின் பிரகாரம் 13,474 பேரும், புதிய பாடத் திட்டத்தின் பிரகாரம் 13,470 பேரும் பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.- என்றார். (ச)

> பழைய பாடத்திட்டத்தின் பிரகாரம் 13,474 பேரும், புதிய பாடத் திட்டத்தின் பிரகாரம் 13,470 பேரும் பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மாணவியின் கை பறிபோனமைக்கு வைத்தியசாலை அதிகாரிகளே காரணம்

உறுதி செய்தது சுகாதார அமைச்சின் குழு

கொழும்பு,பெப்.16

கொழும்பு சட்டபீட மாணவி அச்சலா பிரியதர்ஷினி கையை இழந்தமைக்கு மாத்தறை வைத்தியசாலை அதிகாரிகளே காரணம் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக விசாரணை நடத்திய சுகாதார அமைச்சின் குழு, தனது விசாரணை அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

மாத்தறை வைத்தியசாலையின் வைத்தியர்கள் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனமின்மை காரணமாகவே அச்சலாவின் கை பறிபோனது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

எனவே குற்றவாளிகளுக்குத் தகுந்த தண்டனை வழங்கும் வகையில் குற்றப்பத்திரம் தயாரித்து, அது அரச சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சின் செயலர் நிஹால் ஜயத்திலக தெரிவித்தார். (ச)

சுங்க அத்தியட்சகரின் கைது குறித்து விரிவான விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு,பெப்.16

லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் அண்மையில் சுங்க அத்தியட்சகர் ஒருவர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு விரிவான விசாரணைகளை ஆரம் பித்துள்ளது.

கடத்தல்காரர்கள் சிலர் திட்டமிட்டு சுங்க அத்தியட்சகரை லஞ்ச ஊழல் குற்றச்சாட் டில் சிக்கவைத்துள்ளனர் என தகவல் கள் கிடைத்துள்ளன என்று ஆணைக் குழு சட்டப் பிரிவின் செயலர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இதேவேளை லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களாலும் சுங்க அத்தியட்சகர் மனிதாபிமானமற்ற வகையில் நடத்தப்பட்டுள்ளார் என்றும் முறைப்பாடு கிடைத்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

எனது வாக்குமூலத்தை தமிழ் மொழியில் பதிவுசெய்வ தற்கு அனுமதி மறுக்கப்பட்டது என்று சுங்க அத்தியட்சகரின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அவரது மொழி உரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் ஆராயப்படவுள்ளது. சட்டத்துக்கு ஏற்ற வகையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளாரா என்பது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் செயலாளர் நிமல் புஞ்சிஹேவா மேலும் தெரிவித்தார். (ச)

> சட்டத்துக்கு ஏற்ற வகையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளாரா என்பது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளது

எதிர்வரும் 24 ஆம் திகதி திசைகாட்டியின் இரண்டாவது பிறந்ததினத்தை முன்னிட்டு அரைவாசி கட்டணச் சலுகையுடன்

ஆஸ்திரேலியா (தனியாள்) விசா ஆலோசனை

வியாபாரம் புரிய, படிக்க, Visit Visa
(ஒரு வாரத்தில் ஆலோசனை)

நியூசிலாந்து, சைப்பிரஸ், ஆஸ்திரேலியா, லிதுவேனியா, மலேசியா, Student Visa

ஒரு மாத காலத்தில் விசா ஆலோசனை, சைப்பிரஸ், மலேசியா IELTS தேவையில்லை

டுபாயில் ஒரு லட்சம் படித்துக் கொண்டே சம்பாதிக்கலாம்.

Hotel முகாமைத்துவக் கற்கைநெறி, O/L போதுமானது. (வயதெல்லை இல்லை)

IELTS இலவச வகுப்புக்கள்

சனி, ஞாயிறு பி.ப 2 மணி (நிபந்தனைகளுடன்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். 0212219016
Hot line-0215689090

எல்லா நாள்களும் காலை 8.30 - மாலை 6.30 வரை திறந்திருக்கும்

மரண அறிவித்தல்

நடராசா துரைசிங்கம்

வண்ணார்பண்ணை, கேசாவில் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா துரைசிங்கம் 13.02.2013 அன்று சுவிற்ஸர்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா-சிவபாக்கியம் தம்பதியரின் ஏக புத்திரனும் பொன்னுத்துரை-கனகம்மா தம்பதியரின் மருமகனும் குகனேஸ்வரியின் கணவரும், கவிதா, விஜிதா,துளசி,குருபரன் ஆகியோரின் தந்தையும், கி.ஜெகதாம்பாள், நா.விஜயலட்சுமி, சி.தில்லைநாயகி, அ.இந்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (18.02.2013) திங்கட்கிழமை சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

தகவல்:
நாகரத்தினம்
விஜயலட்சுமி(சகோதரி)

24ஏ, நாவலடி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்.
021 222 1404

(28927)(5-6-7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

தொலைந்துவிட்டது

கைஏஸ் வானுடைய இன் சூரன்ஸ், லைசென்ஸ், அடையாள அட்டை வரிப் பத்திரம் என்பன பளையில் காணாமல் போய்விட்டன.
NIC.No. 842832047V
தொடர்பு:அ.திவாகர் 077 604 2299

(24253)(5-6-7)

வீடு விற்பனைக்கு

தொல்புரம், டச்சுரோட்டில் இருக்கும் 5 அறைகொண்ட வீடு, 9பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 6178 073, 077 9440 906

(27681)(5-6-7)

கடை வாடகைக்கு

புளியந்தோட்டம், 7ஆம் கட்டையடி மல்லாகத்தில் ஆறு கடைகள் வாடகைக்குஉண்டு.
தொடர்பு: 077 3096 884

(28047)(5.7.45)

கடைவாடகைக்கு

சாவகச்சேரி, டச்சு வீதியில் 23A இலக்க கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு:077 374 5951

(18040)(5-6-7)

வீடு விற்பனைக்கு

ஆறுகால்மடம்,மானிப்பாய் வீதியில் இருந்து 100m இற்குள் (பாடசாலை வீதியில்) 5பரப் பும் 1குளியும் உடைய காணியுடன் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக் குண்டு.
தொடர்பு:
077 257 5500 (தரகர் தேவையில்லை)

(29472)(5-6-7)

நாஹா மருத்துவ நிலையம்

கடுமையான எலும்புகளில் வலி, வேதனை தரும் வாதம்,புரையோடும் புண்கள், சளியுடன் கூடிய காய்ச்சல், முட்டு, கர்ப்பநோய்கள் தீர்க்கும் மருந்தியல்:
கிழமைநாள் - 3PM-7PM
சனி, ஞாயிறு - 8AM-2PM
T.P:0773212740
வங்கிமுன் லேன், சாத்தாவத்தை, வைரவர்கோயிலடி(ஜெகபதிவீடு), மானிப்பாய்.

(28877)(5.6.14)

மரண அறிவித்தல்

திருமதி குகதாசன் சின்னம்மா

புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குகதாசன் சின்னம்மா 14.02.2013 வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பரமநாதர் குகதாசன் (ஓய்வுபெற்ற பொதுமுகாமையாளர்,அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம்) அவர்களின் பாசமிகு மனைவியும், பெரிய தம்பி(வர்த்தகர்),சி.கனகசபை (அதிபர்), சி.வடிவேலு (முகாமையாளர்,ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சிவயோகதேவி (ஓய்வுபெற்ற பிரதிஅதிபர்), டாக்டர் சிவானி மச்செல்(கனடா), டாக்டர் குகானந்த மூர்த்தி (சீசெல்ஸ்),குகானந்தன் (ஆசிரியர், கப்பூது ஏகாம்பர வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்), மச்செல்(பொறியியலாளர் கனடா), கமலராணி (பல் வைத்திய நிபுணர் -கொழும்பு), பத்மராணி(பல்வைத்திய நிபுணர்-அச்சுவேலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரதாசினி,ஜான்சி, கிருஷராணி,லக்ஷினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாளை (17.02.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி,வல்லை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குகானந்தன்(மகன்)

தபால் நிலையத்துக்கு முன்பாக,
அச்சுவேலி.

(26046)(5-6-7)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

2013 ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

காலம்:-
இன்று (16.02.2013) சனிக்கிழமை
நேரம்:-
முற்பகல் 9.30
இடம்:-

செயலாளர்,
யாழ்.வணிகக் கழகம்.

(சி:4917)
(2.6.7)

The Vembadi Girls' High School Old Girls Association

It is decided to clebrate the 100th Anniversary of the Association and to hold the Annual General Meeting in the middle part of March, 2013. Any suggestion for amendment to the constitution should be submitted /posted to the Secretary, Off ice of the OGA,Vembadi Girls' High School **on or be fore 1st of March 2013.**

Secretary

(c/4906)(6.7.11)

மரண அறிவித்தல்

கந்தசாமி மோகனதாஸ்

14.02.2013 அன்று உதயன் 14ஆம் பக்கத்தில் பிரசுரமான மேற்படி விளம்பரத்தில் சகோதரர்களின் பெயர் வரிசையில் பாலசுந்தரம் என்பதற்குப் பதிலாக காலஞ் சென்ற பாலசுந்தரம் என தவறுதலாக பிரசுரமாகியுள்ளது. திருத்தி வாசிக்கவும்.

(27747)(5.6.7)

கண்ணீர் அஞ்சலி

அன்னை நடராசா லெட்சுமி

எமது தேவஸ்தான வளர்ச்சிக்காக அதிக உற்சாகத்துடன் உழைத்து பரிபாலன சபையின்அங்கத்தவராகவும், உபதலைவராகவும் பணியாற்றிய எம் அன்னையே உம் பணிகள் என்றென்றும் அழியாது நீடித்து நினைவிருக்கும்.

உம் பிரிவால் துயருறும் உம் குடும்பத்தார்க்கும் உறவுகட்கும் எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

ஸ்ரீ ஞான செல்வவிநாயக ஆலய தேவஸ்தானம்
புது வீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

ஆலய பரிபாலன சபையினரும்,
ஆலய அர்ச்சகரும், ஆலய சமூகமும்.

(சி/4904)(5-6-7)

மரண அறிவித்தல்

திருமதி

திருநாவுகரசு தவதேவி (தேவி)

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட தவதேவி திருநாவுகரசு (தேவி) செவ்வாய்க்கிழமை (12.02.2013) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரத்தினம்-இராஜேஸ்வரி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுந்தரம், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுவாமிநாதர் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற திருநாவுகரசின் அன்பு மனைவியும், றஞ்சினிதேவி (நெதர்லாந்து), ஜெயந்திரன் ஷாலினி, விமல் (ரஞ்சன்-டென்மார்க்) ஆகியோரின் அன்பான சகோதரியும், ஜெயந்தியின் (றோசி-டென்மார்க்) அருமைத் தாயாரும், புவிந்திரதாசின் (புவி) அன்பு மாமியும், கந்தசாமி, கௌசலா ஆகியோரின் பாசமான மச்சாளும், நாகரத்தினத்தின் சம்பந்தியும், ஷாருஜன், ஷாரா ஆகியோரின் பெரியம்மாவும், ஷருண், ஷஜித், ஷாலினி ஆகியோரின் அன்பு அத்தையம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரல்ல ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. நாளை (17.02.2013) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைக்காக பொரல்ல இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விமல் (ரஞ்சன்)
004548444959
0770404132

கொட்டாஞ்சேனை.

(28933) (10-6-10)

கல்முனை மாநகர அரிலிருந்து தொடர்பான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக் கிழமை நடை பெற்றபோது முதல்வர் சிறாஸ் மீராசாஹிப் உரையாற்றுகிறார்.

டெங்கு காய்ச்சலால் மாணவி சாவு

மட்டக்களப்பு,பெப்.16

மட்டக்களப்பு வின்சன்ட் பெண்கள் உயர் தேசிய பாடசாலை மாணவி ஒருவர் டெங்குக் காய்ச்சலால் நேற்று வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே குறித்த மாணவி உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

10ஆம் தரத்தில் கல்வி கற்றுவரும் ஒசானியா என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

ஆஸி. பயணத்தைத் தடுக்க விழிப்புணர்வு செயற்றிட்டம்

கிழக்கு மாகாண சபை நடவடிக்கை என்கிறார் முதல்வர்

திருகோணமலை,பெப்.16

முப்படைகளின் அனுசரணையுடன் சட்டவிரோதமாக படகுகளில் செல்வதைத் தடுக்கும் நோக்கில், கிழக்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்த கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்தார்.



ஆஸ்திரேலிய நாட்டின் சுங்கம் மற்றும் எல்லைப்புறப் பிரிவின் தலைமை அதிகாரி திருமதி சூனைட், கிழக்கு முதல்வர் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக படகுகளில் வருபவர்களில் அதிகமானோர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஆஸ்திரேலிய நாட்டின் சுங்கம் மற்றும் எல்லைப்புறப் பிரிவின் தலைமை அதிகாரி முதலமைச்சருக்கு சுட்டிக் காட்டியுள்ளார். அவர்கள் அங்கு அகதிகளாக வருவதற்கான காரணங்களையும் கேட்டறிந்தார்.

இதற்கு பதிலளித்த கிழக்கு மாகாண முதலமைச்சர், கிழக்கு மாகாணத்தில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது. உயிர் உடைமைகளுக்கு அச்சுறுத்தல் இல்லாமல் மக்கள் அமைதியாக வாழ்கின்றனர். படகுகளில் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்பவர்கள் சொகுசு வாழ்க்கையைத் தேடிச்செல்பவர்கள்- என்றார்.

இந்தச்சந்திப்பில் கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தின் அதிகாரி கிறிஸ் டொபர் வூட்ஸும், முதலமைச்சரின் ஆலோசகர் சாஹிரும் கலந்துகொண்டனர். (ச)

கஞ்சா வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம்

அம்பாறை,பெப்.16

அம்பாறை, இறக்காமம் பிரதேசத்தில் கஞ்சா போதைப்பொருளை வைத்திருந்தவருக்கு அம்பாறை நீதிவான் எம்.எஸ்.பிரியங்கி 10,000 ரூபா அபராதம் விதித்துள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இறக்காமம், குடுவில் பிரதேசத்தில் 5 கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் கடந்த புதன்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தப்பட்டபோது அம்பாறை நீதிமன்ற நீதிவான் சந்தேகநபர் குற்றவாளி என ஏற்றுக் கொண்டதைய டுத்து 10,000 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ச)

தென்கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கு 100 மாணவர்கள் அனுமதி

தென் கிழக்கு பல்கலைக்கழகப் பொறியியல் பீடம் ஒலுவில் வளாகத்திலேயே இயங்கவுள்ளது.

அம்பாறை,பெப்.16

இந்த ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தென் கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கு 100 மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். அதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது என்று பல்கலைக்கழக துணை வேந்தர் எஸ்.எம்.எம்.இஸ்மாயில் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிவில், மின்னியல், இலத்திரனியல், பொறிமுறை, கணினி உட்பட ஐந்து துறைகள் தென் கிழக்கு பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் வழங்கப்பட்டுள்ளன.

தென்கிழக்கு பல்கலைக்கழகப் பொறியியல் பீடம் ஒலுவில் வளாகத்திலேயே இயங்கவுள்ளது. அதனாலேயே பொறியியல் பீட அங்குரார்ப்பண நிகழ்வு ஒலுவிலில் இடம்பெற்றது. எனினும் சிலர் தெரிவிப்பது போன்று அம்பாறையில் ஒருபோதும் பொறியியல் பீடம் செயற்படாது.

பொறியியல் பீடத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் பல்கலைக்கழக பொறியில் பீடத்துக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் நிறைவு செய்வதற்கு இன்னும் பல வருடங்கள் தேவையாகும். அதுவரை பொறியியல் பீடத்திலுள்ள மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்படும்.- என்றார். (ச)

கல்முனை ஏ-31 வீதியில் மரக்கன்றுகள்

அம்பாறை மாவட்ட வனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கல்முனை ஏ-31 வீதியின் இருமருங்கிலும் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன என்று அம்பாறை மாவட்ட வன அதிகாரி ஆர்.ரவிராஜ் தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டு திட்ட நடைமுறைப்படுத்தலில் முதல் கட்டமாக அம்பாறை மாவட்டத்தில் 370 மரக்கன்றுகள் நேற்றுமுன்தினம் நடப்பட்டன.

வனத்திணைக்களத்துடன் பொதுமக்களும் இணைந்து மருது, ஆபிரிக்க மகோகணி ஆகிய மரக்கன்றுகளை நட்டனர். ஏ-31 வீதியின் 2.50 கிலோ மீற்றர்களுக்கு இந்த மரக்கன்றுகள் இருபக்கங்களிலும் நடப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

மரம் முறிந்து தலையில் விழுந்ததில் பெண் சாவு

பதுளை,பெப்.16

பதுளை பிரதேசத்தில் பெய்த கடும் மழையால் பண்டாரவளை பகுதியில் மரம் முறிந்து தலையில் விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஆர்.வி. பேமாவதி (வயது-65) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை கடும் காற்று வீசிய போது, குறித்த பெண் தனது வீட்டின் முற்றத்தில் நின்றிருந்த வேளை மரமொன்று முறிந்து விழுந்துள்ளது. அந்த மரத்துக்குள் சிக்குண்டே குறித்த பெண் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

'100 கோடி பெண்களின் எழுச்சி' மட்டக்களப்பில் மனிதசங்கிலி

மட்டக்களப்பு,பெப்.16

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் வகையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை '100 கோடி பெண்களின் எழுச்சி' என்னும் தலைப்பிலான நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு இடர் முகாமைத்துவ கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் பெண்கள் மனித சங்கிலி எழுச்சி நிகழ்வு மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் அந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பிலான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், பல்வேறு சுலோகங்கள் தாங்கிய பதாகைகளையும் பெண்கள் ஏந்தியிருந்தனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வுகளும் பெண்கள் அமைப்புகளால் நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

புதிய கூட்டு ஒப்பந்தம் குறித்து

முதலாளிமார் சம்மேளன கருத்துகள் நியாயமற்றவை

நுவரெலியா,பெப்.16

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும், தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம் எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் காலாவதியாகிறது. அதனை புதுப்பிப்பது தொடர்பாக முதலாளிமார் சம்மேளனம் கூறும் கருத்துகள் நியாயமற்றவை.

இவ்வாறு இலங்கை - இந்திய வம்சாவளி தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தேசபந்து முத்தப்பன் செட்டியார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தோட்ட பொது சேவையாளர் சங்கத்துக்கும் இடையில் சம்பள முரண்பாடு தொடர்பாக வழக்கொன்று நிலுவையிலுள்ளது என்று கூறப்படுகிறது.

எனினும், இந்த விடயத்தை இணக்கப்பாட்டுக்கமையவே கையாளுகின்ற நிலையில், அதில் எந்தச் சிக்கல்களும் இல்லையென்றே கூறப்படுகின்றது.

எனவே, தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்ற முற்படும் சதிவலைக்குள் விழுந்துவிடாமல் எமது மக்களின் உரிமைகளை, சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மலையக பெருந் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை, சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க எவரும் பின்னிற்கக்கூடாது.- என்றார்.

SHAMROCK

ஈச்சபோட்டை — யாழ்

A/L 2015

கலை வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் நடை பெறுகின்றன.

B.st:-B.S.பசில்	Tam:-S.சிவா
Acc:-S.தவா	Pol.Sc:-P.லிகோறி
Eco:-K.பிரதீபன்	Geo:-S.ஜீன்சியா
	Log:-S.றொகேஷியன்
C/Ma:-G.கண்ணன்	Chrisi, Civil } ஆசிரியர்
Bio:-R.குகானந்தன்	
Phy:-சசி	
Che:-M.A.நிறோஜன்	GIT:-D.ஷெல்ரன்.

சிங்களம்: சனி, ஞாயிறு பி.ப. 4 மணிக்கு நடை பெறுகின்றது

(28972)(8.6.14)

advt@uthayan.com
0215671111

சுத்திகரிப்பாளர்கள் தேவை

★ விடுதி சுத்திகரிப்பாளர் (Restaurant)
★ சமையலறை சுத்திகரிப்பாளர் (Kitchen)
★ கழிவறை சுத்திகரிப்பாளர்
★ பூந்தோட்ட பராமரிப்பாளர்

நல்ல தேக ஆரோக்கியமுடைய 25 வயதுக்கு மேற்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் (பகுதி/முழுநேர வேலைகள்) ஆண்கள் இரவு கடமை புரியக் கூடிய வராக இருத்தல்வேண்டும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். எதிர்வரும் (18.02.2013) திங்கட் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நேரில் வரவும்.

TILKO JAFFNA CITY HOTEL
No. 70/6, K.K.S. ROAD,
JAFFNA.
077 9944 439, 021 7200 705.

(சி/4927)(8.7.45)

காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி,
நீர்வேலியில் 6½ பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
0770168444, 021 226 4377

Diploma in Pharmacy

Leading To Bsc Pharmacy

2 Years Course
CMCC Syllabus
Full Practical
Monthly Rs.3000/= ONLY
*Initial Payment Rs.20000/

Addmissions Open

உடனடி வேலை வாய்ப்பு!!

Visalam Wide and Beyond

Visalam MINDS
127/1 Temple Road Jaffna
021 221 9695 075 979 9695
Email: admin@visalamholdings.com

SPOT ADMISSIONS -EUROPE
STUDY IN CYPRUS
2013 -02- 23 Saturday

NO NEED IELTS
NO NEED SPONSOR
100% VISA

O/L-ONLY

O/L உடன் நீங்களும் EUROPE சென்று உயர் கல்வி கற்க 100% சாத்தியமான முறையில் visa வினை பெற ஓர் அரிய சந்தர்ப்பம். IELTS - Bank Balance அவசியம் இல்லை. உங்களிடம் உள்ள ஆவணங்களுடன் உடனே வாருங்கள்.

INTERNATIONAL CITY COLLEGE

NO:07,2nd FLOOR,W.A.SILVA MAWATTA,WELLAWATHA,COLOMBO-06
TEL: 0114 594 104 - 077 12 50 789 FAX: 0112 582722

மரண அறிவித்தல்கள்

திருமதி பஞ்சலிங்கம் செல்லம்மா

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சலிங்கம் செல்லம்மா நேற்றுமுன்தினம் (14.02.2013) வியாழக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பஞ்சலிங்கத்தின் அருமை மனைவியும், காலஞ்சென்ற சரஸ்வதி (மலேசியா) மற்றும் அமிர்தலிங்கம் (கனடா), கந்தநாதன் (லண்டன்), புவனேஸ்வரி, இராமச்சந்திரன், சரோஜினி தேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மநாதன் (கனடா), காலஞ்சென்ற பரமநாதன் (வஞ்சி - கனடா) மற்றும் பத்மராணி, பத்மலோஜினி, பத்மினி தேவி, பத்மரஞ்சினி, பரமானந்தன் (கண்ணன்-கனடா), பவானி (கனடா), பகீரதன் (முத்து-கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், அருமைநாயகி, மகேஸ்வரி, இராசா, குகனேஸ்வரன், மகேந்திரன், தபாகுணம், மாலா, தங்கவேலு, ஜானகி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா, ரொரன்டோவில் நாளைமறுதினம் (18.02.2013) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
இராமசாமி குகனேஸ்வரன்
(குகன்) T.P- 0214922415
மருமகன்- 0773753688
மகன்-பரமானந்தன்(கண்ணன்)
0019054742637

(33505)(8.7.11)

செல்லத்துரை நாகரெட்ணம்



மண்கும்பான் மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரம் சிற்பனை முருகன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை நாகரெட்ணம் கடந்த (13.02.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்துரை, காலஞ்சென்ற சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பொன்னு தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரியலக்ஷன், அபிரா(முதலாம் வருடம், கிழக்குப் பல்கலைக் கழகம்), ரக்ஷினி (தரம்-7 மாணவி, யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோஜினிதேவி (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (கனடா), மகாலட்சுமி (ஜேர்மனி), மனோகரன் (பாலன் - சுவிஸ்), இரத்தினசிங்கம் (கிளி - லண்டன்) ஆகியோரின் சகோதரனும், தனபாலசிங்கம் (ஜேர்மனி), பத்மசுலோசனா (கனடா), விமலநாதன் (ஜேர்மனி), சகுந்தலா (சுவிஸ்), ஞானசோதி (லண்டன்), காலஞ்சென்ற செல்வராணி மற்றும் செல்வராஜா (கொழும்பு), சிவராஜா (கொழும்பு), சகுந்தலராணி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற நடராஜா, பரஞ்சோதி (ஆயுள்வேத வைத்தியர்) ஆகியோரின் சகலனும், சொர்ணகாந்தி (கொழும்பு), வள்ளிநாயகி (கொழும்பு) ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
6ஆம் வட்டாரம்,சிற்பனை.
021 721 0055

தகவல்:
குடும்பத்தினர்.

(33508)(2.6.7)

வாழ்த்துகின்றோம்

கலாநிதி
நாகலிங்கம்
தனேந்திரன்

எமது குடும்ப நண்பரும் கொட்டடிக் கிராம அபிவிருத்திச் சங்கத்தை 1998 ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்வதற்கு முன்னின்றதுடன் என்னை அங்கு செயலாளராகக் கொண்டுவந்து என்னுடன் பொருளாளராகப் பக்கபலமாக இருந்து பல்வேறு சமூக சமயப் பணிகளில் ஈடுபட்டவரும் தற்போது கொட்டடிக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் யாழ்.பிரதேச செயலக மாதர்கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவராகவும் வட இலங்கை சுதேச வைத்தியசபை நிர்வாக உறுப்பினராகவும் மேலும் பல பொது அமைப்புகளில் அங்கம் வகித்து தமிழ் மக்களுக்கு சேவையாற்றிவரும் கலாநிதி நா.தனேந்திரன் J.P. அவர்களுடைய சேவையை வியந்து அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் "சாமசிறி தேச கீர்த்தி" எனும் கௌரவம் வழங்கப்பட்டமையையிட்டு அகமகிழ்ந்து சீரும் சிறப்புடனும் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வைத்தியர் ஜெ.ஜெயலன், சுஜீவா வைத்தியசாலை
(சுஜீவா தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுள்வேத வைத்தியசாலை),
கலட்டி அம்மன் வீதி, (தட்டாதெருச் சந்திக்கும், நாச்சிமார் கோயிலுக்குமிடையில், யாழ்ப்பாணம்)

(33506)(2.6.7)



மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

மின் தடைஅறிவிப்பு

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின்மார்க்கங்களின் புனரமைப்பு பணிகளுக்காகவும் சில பகுதிகளில் மிண்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரையும் ஆனைக்கோட்டை, காக்கைதீவு, அட்டகிரி, சாவற்கட்டு, வராகி அம்மன் கோவிலடி, ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதி, மந்திகைப் பிரதேசம், புலோலி, சாரையடி, ஓராம்கட்டை, தம்பசிட்டி, பருத்தித்துறைப் பிரதேசம், அல்வாய் பிரதேசம், நெல்லியடிப் பிரதேசம், கரவெட்டிப் பிரதேசம், சுன்னாவம்பிரதேசம், குஞ்சர் கடைப் பிரதேசம், கற்கோவளம், புனித நகர், நெல்லண்டைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (3)

மெய்வன்மைப் போட்டிகள்

ஏழாலை மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் மா. ஆனந்தகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் காங்கேசன் துறை கிளை முகாமையாளர் தி.செந்திநாதனும், சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற பிரதி அதிபர் ச.கனகசபாபதியும் கலந்து கொள்வர்.

★ ★ ★

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப்போட்டி கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் வே.க. இரத்தினவேல் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவும், சிறப்பு விருந்தினராக நல்லூர்ப் பிரதேச செயலக கணக்காளர் என்.எஸ்.ஆர். சிவரூபனும் கலந்துகொள்வர்.

★ ★ ★

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. சிதம்பராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய முகாமைத்துவப் பிரிவு கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரன் கலந்துகொள்வார். (3-8)

★ ★ ★

பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் கே.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்வார். (3-8)

★ ★ ★

பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் அ.வி. மரியநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி .இரஞ்சிதம் குட்டித்தம்பி கலந்துகொள்வார். (3-8)

★ ★ ★

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடை பெறும். கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப் பாளர் எஸ். சந்திரராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபை செயலர் ஏ.சோதிநாதனும், கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற கே.செல்வராசுவும் கலந்து கொள்வர்.

★ ★ ★

நெடுந்தீவு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் நடை பெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தீவக வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணனும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.புவனேந்திரன், யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப் பாளர் பி.அருணகிரிநாதன், தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (3-7)

★ ★ ★

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஆளுநரின் செயலர் இ.இளங்கோவனும், சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீ.முருகதாஸ் காந்தனும் கலந்து கொள்வர். (3)

★ ★ ★

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலய, அமரர் சரஸ்வதி சுப்பிரமணியச் செட்டியார் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணிக்க பாக்கியம் விளையாட்டு அரங்கில் அதிபர் நா.தனபால சிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப் பாளர் எஸ்.கந்தசாமியும், சிறப்பு விருந்தினராக உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கோசலை குலபாலசிங்கம் கலந்து கொள்வர்.(3)

மனமாற்றத்தின் காலம்

தவக்காலம் மனமாற்றத்தின் காலம். மனித மனம் ஒரு நிலையில் இல்லாமல் தனது எண்ணங்களிலே தாவித் திரியும் தன்மையைக் கொண்டுள்ளது. இது மனிதனின் பாவத்தின் பயனாக இருக்கிறது. எனவே நாம் மனம் போன போக்கிலே உலக இச்சைகளுக்கு இடம் கொடுத்து பல்வேறு ஆசைகளை தன்னுள் வளர்த்து அவைகளை செயல்படுத்த முனைகின்றோம். நன்மை கொடுக்கின்ற எண்ணங்கள், செயல்கள் நமக்கும் மற்றவர்களுக்கும் நல்வாழ்வு கொடுக்கின்றன. ஆனால் பல பொழுதும் நம் மனித மனம் தீமையான எண்ணங்களையும் இறைவனின் கட்டளைகளுக்கு எதிரான கருக்கொண்டு அவைகளை செயல்படுத்துகின்றது. அதனால் அந்த தனி மனிதனுக்கும் அவனுடைய சூழலில் மற்றவர்களுக்கும்தீமைகள் நிறைகின்றன. அதனால் அவனுடைய அமைதி, சந்தோஷமும் மற்றவர்களின் அமைதி வாழ்வும் பற்பல தடைகளும் பிரச்சினைகளும் வருகின்றன.

நாம் இவ்வுலகில் பிறக்கின்றது, பிறந்தது நாம் நல்வாழ்வு வாழ்ந்து மற்றவர்களுக்கும் நன்மை செய்வதற்கே. இத் தவக்காலம் இதை நமக்கு நினைவூட்டும் காலமாகவும், நம் மனம் மாறிய நல்வாழ்வுக்கு நம் அன்பு வாழ்வாலும் செபவாழ்விலும், நோன்பு வாழ்வாலும் நமக்கு வழிகாட்டும் காலமாகவும் அமைகின்றது. இயேசுவின் இவ்வுலகப் பிறப்பும், வாழ்வும், வார்த்தைகளும், பலியும், பாடுகள், இறப்பு, சிலுவை மரணம், உயிர்ப்பு ஆகிய நிகழ்வுகளும் நமக்கு மாபெரும் வழிகாட்டியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

தவக்காலச் சிந்தனை

எனவே நாம் இயேசுவிலே நம்பிக்கை கொண்டு இந்த தவக்காலத்தில் அவருடைய வார்த்தைகளையும் வாழ்வையும் வேதாகமத்தில் (பைபிள்) படித்து நமது வாழ்வில் நல்ல எண்ணங்களையும், நல்ல வார்த்தைகளையும், நல்ல வாழ்வையும் நமதாக்கிக் கொள்வோம். அதன் பயனாக நமது வாழ்வையும் மற்றவர்களின் வாழ்வையும் வளப்படுத்துவோம். மகிழ்ச்சியும், மன்னும், மகிமையும் நிறைந்த வாழ்வாக ஆக்குவோம்.

அருட்திரு.அ.ம.ஸ்ரீபன், செ.தா. அருள் ஆசிரமம்

தமய சந்நிதிகளில்

புங்குடுதீவு கிழக்கு, தல்லையபற்று சங்கரமூர்த்தி, முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில், எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் முற்பகல் 10 மணிக்குதீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ். வண்ணை- கன்னாதிட்டி காளியம்பாள் ஆலயப் பெருந் திருவிழாஇன்றுகாலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (3)

மரண அறிவித்தல்

சதாசிவம் பாலகிருஷ்ணன்

(ஓய்வு பெற்ற ஆய்வுகூட உதவியாளர்- மானிப்பாய் இந்துக் கல்லூரி)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் மேற்கை வதிவிடமாகவும்கொண்ட சதாசிவம் பாலகிருஷ்ணன் 13.02.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான செல்லத்துரை- ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான நாகலிங்கம், சோமசுந்தரம், பூரணி, கண்ணாம்மா, கனகசபை, பூபதி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தம்பியும், சிவஞானமணி, சந்திராவாணி, யோகேஸ்வரி ஆகியோரின்மைத்துனரும், தர்மினி (சுவிஸ்), சஜமுகன்(கனடா), செந்தன் (செந்தன் கிறீன் ஹவுஸ்), கோகுலன்(லண்டன்), தாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரவியநாயகம், செல்வமலர் (மலர்), தாரணி, அகல்யா, ஜெயந்திரன்(வலயக் கல்வி அலுவலகம்,வலிகாமம்), ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீன், வருண், தாரகன், தெய்வயான், வானுஷன், அனுஜன், காவிஷன், தனுஷன் கிஷோந், கிஷோபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் உரும்பிராய் மேற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
தொ.பே. 021 3008 907.

(செந்தன் கிறீன் ஹவுஸ்,)

(28961) (15.6.7)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
20.10.1920

மறைவு
15.01.2013

அமரர் பொன்னுத்துரை உலகாத்தப்பிள்ளை

வீட்டிற்கோர் தெய்வமென
வீற்றிருந்து எமைக்காத்தீர்
அனைவருமே பிள்ளைகள் போல்
அன்பைச் சொரிந்திருந்தீர்
தெய்வபக்தி நிறைந்தவராய்
எங்களையும் வளர்த்தெடுத்தீர்
தெய்வம் உமை அழைத்ததனால்
தேடிநிதம் அழுகின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்

உங்கள் பிரிவால் தவிக்கும்
குடும்பத்தினர்.

(28912)(3..45.6.7)

கண்ணீர் அஞ்சலி

எமது செயலகத்தின் தெல்லிப்பழை சமூர்த்தி வங்கியின் முகாமையாளராகக் கடமையாற்றும் தேவராசா விக்கினேஸ்வரன், பட்டதாரிப் பயிலுநராகக் கடமையாற்றும் செல்வி தேவராசா வினோதினி ஆகியோரது அன்புத் தந்தை திரு **கணபதி தேவராசா** அவர்களின் தீடீர் மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.

நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பளை.

(28979) (8.16.14)

advt@uthayan.com 021 567 1111

மரண அறிவித்தல்

ஆறுமுகம் மகாலிங்கம்

(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மகாலிங்கம் நேற்று முன்தினம் (14.02.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான ஆறுமுகம்-செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் இரஞ்சித மலரின் அன்புக் கணவரும் அஜந்தி, ஜங்கரதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவனேஸ்வரி, சாந்தநாயகி, பரஞ்சோதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு JAYARATNE FUNERAL PARLOURS 2C, ELVITIGALA MAWATHA, COLOMBO-8 என்ற முகவரியில் நடை பெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

376/1RudraMwth,
Colombo-06.
0777141382

(28966)(8.16.14)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

28வது பொதுப்பட்டமளிப்பு வைபவம்

2013 பெப்ரவரி 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 28ம் திகதி நடைபெறும்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுவோர்க்கு கீழ்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்தில் பங்குபற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றுச் சீட்டினையும், பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினையும் காண்பித்து, புகைப்படத்திற்காக ரூபா. 60.00 இனை செலுத்தி கல்விக்கிளையில் பின்வரும் திகதிகளில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பட்டமளிப்பு விழா நிகழ்வை DVD யில் பெற விரும்புவோர் ரூபா 250/= ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

திகதி	நேரம்	பட்டம்.
2013.02.22	மு. ப. 09.00 – 12.00	Ph.D, M.Phil., LL.B, BFA
	பி. ப. 02.00 – 04.00	M.A.(Tamil),M.B.B.S.,BBA, B.Com.
2013.02.23	மு. ப. 09.00 – 12.00	P.G.D.E.,B.Sc.(Agri.),B.S.M.S.
	பி. ப. 02.00 – 04.00	MED, B.Sc.
2013.02.24	மு. ப. 09.00 – 12.00	B.A.(Special)
	பி. ப. 02.00 – 04.00	M.A.(Saiva Siddhanta), B.A.(General)

குறிப்பு:
வவுனியா வளாக மாணவர்கள் தங்களுக்குரிய பட்டமளிப்பு அங்கிகளை வவுனியா வளாகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

பதிவாளர்

BIT-Degree (University of Colombo)

நுழைவுத்தகைமை
A/L 3 பாடம் சித்தியடைந்தோர் நேரடியாகவும் ஏனையோர் FIT எனும் பாடநெறியைப் பூர்த்தி செய்வதன் மூலமும்.

கற்கை நெறிக் கட்டணம்
மாதாந்தம் 2750 ரூபா

புலமைப்பரிசில்

பாடசாலை அதிபரினால் சிபார்சு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 15000 ரூபா புலமைப்பரிசில்

மேலதிக கட்டணமின்றி
International computer Driving License Vocational Training Authority சான்றிதழ்கள்

MCSE-MTA கற்கை நெறிக்கான 80$ Exam fee மற்றும் 15000/= கற்கை நெறிக்கட்டணமும் முற்றிலும் இலவசம்

முதலாம் வருட முடிவில்
Diploma in Information Technology சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலவச மீட்டல் வகுப்பு
March 23,24 Semester I பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கானது.

யாழ்.கந்தர்மடத்தைச சேர்ந்த பிரியங்கா சிவராஜா ஆகிய நான் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில் நுட்ப பட்டக்கற்கை நெறியை MCS IT campus நிறுவனத்தில் பயின்று சித்தியடைந்துள்ளேன். இந்நிறுவனத்தின் சிறந்த விரிவுரையாளர் அணி மூலம் நான் பெறுமதிவாய்ந்த தகவல் தொழில்நுட்ப பட்டச்சான்றிதழை பெறக்கூடியதாகவிருந்தது. என்னை இவ்வெற்றிக்கழைத்துச்சென்ற MCS IT campus நிறுவனத்திற்கு எனது நன்றிகள்.

சிறந்த பெறுபேற்றிற்காக கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து விருது பெற்ற நிறுவனம் MCS

MCS IT CAMPUS

324,Palaly Road, Parameswara Junction,Jaffna 0772395895

புங்குடுதீவு கிழக்கு, தல்லையபற்று
சங்கர மூர்த்தி முருகமூர்த்தி தேவஸ்தானம்

கொடியேற்றம்

இன்று (16.02.2013) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆலய மகோற்சவ குருவும் நித்திய , நைமித்திய குருக்கள் சிவஸ்ரீ கணசகுததாசக்குருக்களின் தலைமையில் கொடியேற்ற வைபவம் நடைபெறும். தொடர்ந்து
24.02.2013 ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும்
25.02.2013 திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும்
நடைபெறும். அடியார்கள் இத்திருவிழாவில் கலந்துகொண்டு முருகனின் அருள்பெற்று ஏகமாற அன்புடன் அழைக்கின்றோம்.
தர்மகர்த்தாவும், ஆலய நிர்வாக சபையினரும்.

நீரில் மூழ்கி சிறுவன் சாவு

யாழ்ப்பாணம், பெப்.16

வீட்டில் கட்டு இல்லாத கிணற்றினுள் தவறி விழுந்த சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தான்.

இந்தச் சம்பவம் செம்மணி வீதி கல்வியங்காட்டில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த புவனேந்திரன் சாம்சன் (வயது-2 1/2) என்ற சிறுவனே உயிரிழந்தான்.

கிணற்றில் நீர்மட்டம் உயர்ந்திருந்தது. எதேச்சையாக அதில் தவறி விழுந்து உயிரிழந்தான். சிறுவனைக் காணாது தேடியபோதே சிறுவன் கிணற்றில் மயங்கிய நிலையில் காணப்பட்டான். உடனடியாக மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் சிறுவன் உயிரிழந்தது உறுதிப்படுத்தப்பட்டது. (1)

மெய்வன்மைப் போட்டி

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமை நாயகம் கலந்துகொள்ளவுள்ளார்.

கணினி திருத்தம்
COMPUTER REPAIR
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737
GUNAA BEST PC
52, HOSPITAL ROAD, JAFFNA.

பிரத்தியேக வகுப்பு
தரம் 4, 5 இற்கான புலமைப் பரிசில் வகுப்புக்கள், தரம் 6-11 வரையான கணிதம், கணக்கீடு ஆகிய பாடங்கள் பிரபல ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-072 8065351

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

பஸ் விற்பனைக்கு
30-XXXX தொடரிலக்கமுடைய JOURNEY BUS விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0779673395

அளவெட்டி தவளக்கிரி முத்துமாரியம்மன் கோயில்

அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த பொதுச்சபைக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் உபய திருத்தங்களும் நாளை (17.02.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற உள்ளதால் உபயகாரர்கள் அனைவரும் தவறாது சமுகம் அளிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.
ஆலயபரிபாலன சபையினர்.
(26973)(6.7.11)

மகோற்சவ விளம்பரம்

நந்தன வருடம் (2013)
16/02/2013 சனிக்கிழமை:- கொடியேற்றம்
வசந்தமண்டப பூஜை:- 7.30 மணி
கொடி யேற்றம்: 9.00 மணி
24/02/2013 ஞாயிற்றுக்கிழமை. தேர் உற்சவம்
வசந்தமண்டப்ப் பூஜை: 8: மணி
தேரில் எழுந்தருளல் :9:மணி
25/02/2013 திங்கட்கிழமை தீர்த்தோற்சவம்
வசந்த மண்டபப் பூஜை 8:30 மணி
தீர்த்தம் :9:30 மணி

அடியார்கள் யாவருமே மகோற்சவ காலத்தில் பக்தி பேருணர்வையும் ஈர்ப்பு பற்றி நிகழ்வதாக பரமேஸ்வரியின் பேரருட் பெருங்கருணையைப் பெற்றின்புற வேண்டுகின்றோம். பழமைபோல் தேர்த்திருவிழா பொது உபயமாகவும் பெறவுள்ளது.

தேவஸ்தான ஆதீன கருத்தாக்கள்
அருள்மிகு காளியம்மன் தேவஸ்தானம் கல்வாதி டி, யாழ்ப்பாணம்

கண்ணீர் அஞ்சலி

சின்னையா சண்முகலிங்கம்
(கைதடி நுணாவில் விவசாய சம்மேளனத் தலைவர்)

அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

சமூகசேவைகள் நிலையம், கைதடி — சமூகசேவைகள் நிலையம், கைதடி, வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிறுவனம், கைதடி நுணாவில் விவசாய சம்மேளனத்தினர்

அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியஅழைப்பு

விண்ணில் 03 04 1937
மண்ணில் 17 01 2013

திருமதி .சோமன் சின்னப்பிள்ளை

கடந்த 17.01.2013 அன்று இறைபதம் எய்திய எமது தாயின் வீட்டுக்கிருத்திய கிரியைகளும் அன்னாரின் இல்லத்தில் இன்று (16.02.2103) சனிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு இடம்பெற இருக்கின்றது.
இந்த நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர், கைதடி மத்தி.

அன்புடன் : சோ.சுப்பிரமணியம் (காவடித்தம்பி–மகன்)

BID NOTICE
TEACHING HOSPITAL JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna will receive sealed bids from the qualified contactors for the following works.

Work/Service Details	Non-refundable Deposit (Rs.) (Bid fee)	Security Deposit (Rs.)	Validity Period of Bid Security (Days)	Approximate Direct cost of the Work (Rs. In million)	Minimum ICTAD Grade
Renovation of Ward No 22	500.00	60,000.00	90	3.0	C8

Bid forms may be obtain from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Office, Teaching Hospital, Jaffna till 21/02/2013.

Perfected bid should be sealed and mark with the and the name of the work on the top left corner of the envelop and send by registered post to reach the Director, Teaching Hospital, Jaffna or could be deposited in the bid box kept at Director Office, Teaching Hospital, Jaffna.

Bids will be accept till 10.00 am on 22/02/2013 and open immediately thereafter.Bidders or their authorized representatives could be present at the time of opening of bids.

Bids forms may be inspected by the bidders free of charge at the residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

Director (Chairman),
Regional Procurement C. nmittee,
Teaching Hospital, Jaffna.

(c/4928) (6.7.10)

E CITY யில் விசேட விலைக்கழிவு

Mouse	300.00
Keyboard	450.00
4GB Pen Drive	800.00
8GB Pen Drive	900.00
16GB Pen Drive	2,000.00
HP Printer Toner:	4,500.00
Canon Printer Toner	5,000.00
Dell I3 Laptop	63,000.00
Dell I5 Laptop	78,000.00
Dell Desktop	74,000.00

ஒரு வருட உத்தரவாதம்

E CITY
338A, Kasthuriar Road
(Rolex Bakery க்கு முன்னால்)
Jaffna. T.P: 0774784387
வியாபாரிகளிற்கு விசேட விலைக் கழிவு உண்டு

வடமாகாண கடற்கரை கரப்பந்து சம்பியன்

21 வயதுப் பிரிவு- புதிய பாரதி, கே.கே.எஸ்.வி.க
திறந்த பிரிவு- ஆவரங்கால் இந்து, புதிய பாரதி

யாழ்ப்பாணம்,பெப்.16

வடமாகாணக் கடற்கரை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண், பெண் இருபாலருக்குமான 21வயதுப்பிரிவு திறந்த பிரிவு போட்டிகள் கிளி நொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் கடந்த வாரம் இடம் பெற்றன.

இதில் 21 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி புதிய பாரதி விளையாட்டுக்கழக அணியும், பெண்களுக்கான போட்டியில்கே.கே.எஸ் விளையாட்டுக்கழகமும், ஆண்களுக்கான திறந்த பிரிவுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும், இதே பிரிவில் பெண்களுக்கான போட்டியில் புதிய பாரதி விளையாட்டுக்கழகமும் வெற்றியீட்டி சம்பியனாகியுள்ளன.

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான திறந்த பிரிவுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் ''ஏ'' அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் "பி"அணிமோதிக்கொண்டது.

இதில் முதலாவது சுற்றை ஆவரங்கால் இந்து இளைஞர் ''ஏ'' அணி 21:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டது.

இரண்டாவதுசுற்றை ஆவரங்கால்இந்து இளைஞர் ''பி'' அணி 16:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கியது.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது சுற்றில் எழுச்சி கண்ட ஆவரங்கால் இந்து இளைஞர் ''ஏ'' அணி 15:8 என்ற புள்ளி அடிப்படையில் அந்தச் சுற்றை சுவீகரித்து சம்பியனானது.

பெண்களுக்கான திறந்த பிரிவு போட்டியில் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி விபுலானந்த விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலாவது சுற்றில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணி 21:19 என்ற புள்ளி அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது சுற்றில் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் அந்தச் சுற்றைத் தனதாக்கி பதிலடி கொடுத்தது.

அதே ஆக்ரோஷத்தோடு மூன்றாவது சுற்றில் களமிறங்கிய புதிய பாரதிவிளையாட்டுக்கழக அணி 15:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் அந்தச் சுற்றையும் வென்று சம்பியனானது.

21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் கிளிநொச்சி புதிய பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி விபுலானந்த விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலாவது சுற்றை கிளிநொச்சி புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி 21:13 என்ற புள்ளி அடிப்படையில் தனதாக்கியது.

இரண்டாவது சுற்றையும் புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி 21:15 என்ற புள்ளி அடிப்படையில் வென்று சம்பியனைச் சுவீகரித்தது.

21 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான போட்டியில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கெலவிறு விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சிறப்பாக ஆடிய கே.கே.எஸ். விளையாட்டுக்கழக வீராங்கனைகள், முதலாம், இரண்டாம் சுற்றுகளை முறையே 21:18, 21:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் சுவீகரித்து சம்பியனானது.

(ந-23)

நெடுந்தீவு எல்லே; இறுதிக்கு முன்னேறிய அணிகள்

யாழ்ப்பாணம்,பெப்.16

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான எல்லே போட்டி அண்மையில் நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் ஆண்களுக்கான அரையிறுதிப் போட்டி யொன்றில் சென். ஜோன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.அன்ரனிஸ் யுத் விளையாட்டுக்ககழக அணி மோதிக் கொண்டது.

இதில் சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழக அணி 11:3 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 21:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

பெண்களுக்கான முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் முன்னேறியது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் யுத் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சென்.அன்ரனிஸ் யுத் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

(த-23)

ஊர் சுற்றும் ஓட்டம் தேசிய போட்டி நாளை

யாழ்ப்பாணம்,பெப்.16

ஆண்,பெண் இருபாலாருக்குமான ஊர் சுற்றும் ஓட்டத்தின் தேசிய மட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை பியகமவில் இடம் பெறவுள்ளது. இதில் நாடளாவிய ரீதியில் இருந்து மாகாண மட்ட ஊர் சுற்றும் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களும் வீராங்கனைகளும் கலந்துகொள்ள வுள்ளனர்.

மேற்படி போட்டியில் பங்கு பெற்றுவதற்காக வடமாகாண அணியினர் நேற்று வெள்ளிக்கிழமை பியகம புறப்பட்டுச் சென்றனர்.

(ந-23)

இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

பி.ப.4 மணி

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் எதிர் சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம்.

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் இன்று சனிக்கிழமை மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப.3.45 மணி

மயிலிட்டி கண்ணகை விளையாட்டுக் கழகம் எதிர் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

ஆர்.இராசேஸ்வரன் மகிதரனின் ஆதரவுடன் யாழ் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மகிந்தன் வெற்றிக்கிண்ணத்துக்கான 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நடை பெற்று வருகிறது. இதில் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பி.ப 4.45 மணி

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம்(பிரிவு-பி) எதிர் யாழ்.ஐக்கியம் விளையாட்டுக்கழகம்

★ ★ ★

யாழ்.உதைபந்தாட்டலீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களின் 40 வயதுக்குமேற்பட்ட வீரர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப3.45 மணி

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்.ஐக்கியம் விளையாட்டுக்கழகம்.

★ ★ ★

ஜனாதிபதி தங்க கிண்ணத்திற்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் தேசிய மட்ட ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை பலாங்கொடையில் நடை பெறவுள்ளன.

மேற்படி போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகள் இந்தத் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

★ ★ ★

வடமராட்சிக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைக்கு இடையிலான 15வயது, 19வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்கப் போட்டி இன்றும் , நாளையும் ஹாட்லிக் கல்லூரியில் காலை 8மணி முதல் மாலை 5மணி வரை இடம் பெறவுள்ளது.

★ ★ ★

யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம், அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெறவுள்ளது.

பி.ப 2 மணி

(பெண்களுக்கான மூன்றாமிடம்)

பட்டர்பிளை விளையாட்டுக்கழகம் எதிர் உடுவில் விளையாட்டுக்கழகம்

பி.ப 4.30 மணி

(பெண்களுக்கான இறுதியாட்டம்)

கே.கே.எஸ். விளையாட்டுக்கழகம் எதிர் பபிலியன்ஸ் விளையாட்டுக்கழகம்

மாலை 3.30 மணி

(ஆண்களுக்கான மூன்றாமிடம்)

பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் கே.சி.சி.சி விளையாட்டுக்கழகம்

மாலை 6.30 மணி

(ஆண்களுக்கான இறுதியாட்டம்)

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் புளூஸ் அணி எதிர் கோப்பாய் ஐக்கியம் விளையாட்டுக் கழகம்

(ந-23-228)

ஆட்டத்தின் பரபரப்பான தருணமொன்று....

இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட அணி

உடுவில் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் எபைசன் அக்னியு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட 20 வயதுப் பிரிவினருக்கான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் முதல் இடத்தை உடுவில் மகளிர் கல்லூரியும், இரண்டாம் இடத்தை யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட அணியும் பெற்றுக் கொண்டன. (ந-86)

இந்து-பற்றிக்ஸ் இறுதியில் மோதல்

பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் 19 வயது பிரிவு ஆண்,பெண் இரு பாலாருக்குமான கீர்த்திகன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கொக்குவில் இந்துக் கல்லூரி நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, யாழ்.இந்துக்கல்லூரி அணி ஆகியவை வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன. யாழ்.மத்திய கல்லூரியுடன் நடைபெற்ற அரையிறுதியில் வென்று யாழ்.இந்துக் கல்லூரி இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருந்தது.

இந்த நிலையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரி அணிக்கும் இடையில் இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 64:50 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (ந-23)

தொடர் இங்கிலாந்து வசம்

நியூஸிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும், நியூசிலாந்து அணிக்கு மிடையிலான 3 போட்டிகள் கொண்ட 20/20 தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

ஏற்கனவே 2 ஆட்டங்கள் நடை பெற்று முடிந்த நிலையில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றிகளைப் பெற்றிருந்ததால் தொடர் சமநிலையில் இருந்தது.

எனவே மூன்றாவது ஆட்டத்தில் வெற்றிபெறும் அணிக்கே கிண்ணம் என்ற நிலை தோன்றி யிருந்தது.

இந்த நிலையில் நேற்று இடம்பெற்ற 3ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 10 இலக்குகளால் வெற்றி யீட்டி தொடரையும் தனதாக்கியது.

வெலிங்டனில் இடம் பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

ஆரம்பம் முதலே மெதுவாக ஆடிய அந்த அணி, 3.3 பந்துப் பரிமாற்றங்களில் 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது முதலாவது இலக்கை இழந்தது. அதன் பின்னர் 2ஆவது இலக்குக்காக 45 ஓட்டங்கள் பகிரப்பட்டன.

தொடர்ந்து களமிறங்கிய வீரர்கள் சிறப்பாக ஆடாததால் நியூஸிலாந்து அணி தடுமாறத் தொடங்கியது.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து அணி சார்பாக மார்ட்டின் குப்பில் 55 பந்துகளில் 59 ஓட்டங்களையும், பிரண்டன் மக்கலம் 20 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவர்ட் ப்ரோட் 15 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஜேட்டேர்ண் பக் 36 ஓட்டங்களுக்கு 3 இலக்குளையும், ஜோ ரூட், ஜேம்ஸ் ட்ரெட்வெல் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர்.

140 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 12.4 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கு எதனையும் இழக்காது வெற்றிக் கோட்டைத் தொட்டது.

ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய இங்கிலாந்து அணி, நியூஸிலாந்தின் பந்துவீச்சாளர்களுக்கு இலக்கை வேட்டையாடும் வாய்ப்புகளை வழங்கியிருக்கவில்லை. பந்துகளை எல்லைக் கோட்டுக்கு பறக்க விட்டு, வெகு விரைவாகவே வெற்றி இலக்கை இங்கிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட இணை நெருங்கியது.

ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடிய இங்கிலாந்து அணி, நியூஸிலாந்தின் பந்துவீச்சாளர்களுக்கு இலக்கை வேட்டை யாடும் வாய்ப்புகளை வழங்கியிருக்கவில்லை. பந்துகளை எல்லைக் கோட்டுக்கு பறக்க விட்டு, வெகு விரைவாகவே வெற்றி இலக்கை இங்கிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட இணை நெருங்கியது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அதிரடியாக ஆடிய அலெக்ஸ் ஹேல்ஸ் 4 சிக்ஸர்கள் அடங்கலாக 42 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களையும், மைக்கல் லம்ப் 34 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்த வெற்றியையடுத்து 3 போட்டிகள் கொண்ட 20/20 தொடரை இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. (ங)

உதயன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கமராவினுள் இருந்த 'மெமறி சிப்'பும் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

தெல்லிப்பழையில் நேற்று நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஏற்பட்ட களேபரத்தை படம் பிடிக்க முயன்ற ஊடகவியலாளருக்கே இந்த நிலை ஏற்பட்டது.

உண்ணாவிரதப் போராட்டத்தில் குழப்பம் விளைவிக்க முயன்ற ஒருவரை படையினர் தமது முகாமுக்குள் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தை தனது வீடியோக் கமராவில் பதிவு செய்து கொண்டிருந்தார் 'உதயன் ஒன்லைன்' ஊடகவியலாளர். அதன்போது அங்கு நின்ற படை அதிகாரி ஒருவர் ஊடகவியலாளரைத் தாக்கி அவரது கமராவைப் பறித்தெடுத்து அடித்து நொருக்கியதுடன், அதிலிருந்த 'மெமறி சிப்'பும் பிடுங்கப்பட்டது.

இதன் பின்னர் சிறிது நேரத்தில் தெல்லிப்பழைப் பொலிஸார் அந்த வீடியோக் கமெரா வீதியில் கிடந்ததாகத் தெரிவித்து வலி.வடக்குப் பிரதேச சபை தவிசாளரிடம் ஒப்படைத்தனர். (த-1)

இலங்கையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கள் இன்னமும் மறையவில்லை எனப் பிரிட்டனின் வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் நாடாளுமன்ற இராஜாங்க உதவிச் செயலாளர் அலிஸ்ரயர் பேர்ட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட வேண்டும். கொடூர செயல்களை விடுதலைப் புலிகள் செய்திருப்பினும் அரச படைகள் செய்திருப்பினும் அவற்றுக்கு காரணமானவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்பட வேண்டும். இதையே பிரிட்டன் அரசு பொறுப்புக் கூறுதல் என்றுகருதுகின்றது.

நான் வடக்குக்கும் தலைநகர் கொழும்புக்கும் சென்றேன். தமிழர்கள் தமது வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்ப முயல்கின்றனர். பல விடயங்கள் நடந்துள்ளன. பொருளாதாரம் வளர்கின்றது. போர் நடந்த இடங்களில் உள்கட்டுமான வேலைகள் விருத்தியடைந்துள்ளன.

பல இடங்களில் நிலக்கண்ணிகள் அகற்றப்பட்டுவிட்டன. உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் குறைந்துள்ளனர். சிலர் அரசு திட்டப்படி நல்லிணக்கம் செய்வதை நியாயப்படுத்துகின்றனர். ஒரு அரசியல் தீர்வு உருவாகச் சகல தரப்பினரும் செய்ய வேண்டியது நிறையவுள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

அரசியலில் மக்களுக்குப் பொறுப்புக் கூற மறுத்தல் அவசியம். குற்றமிழைத்தவர்களைப் பொறுப்புக்கூற வைக்கத் தவறினால் நீங்கள் எதிர்கால மோதலுக்கான விதையை விதைத்தவர்களாவீர்கள். காயங்களைச் சுகப்படுத்த வேண்டிய நேரம்.

அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசு செயற்படுத்துவது இதற்கான முதற்படியாக அமையும். 2013 இலங்கைக்கு முக்கிய வருடமாகும். எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வது பற்றி பிரிட்டன் இன்னும் தீர்மானிக்கவில்லை.

மாநாட்டை நடத்துபவர்கள் என்றவகையில் அவர்கள் பொதுநலவாயத்தின் விழுமியங்களான நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் என்பவற்றை கடைப்பிடிப்பதோடு நின்றுவிடாது அவற்றை முன்னெடுப்பவர்களாகவும் மாற வேண்டும்-என்றார்.

(த)

வெளிவந்துவிட்டது

தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான நாவலர் வெளியீட்டின் "புலமைச் சிட்டு"

தொடர் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் திங்கள் தோறும் பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

★பூபாலசிங்கம் புத்தக சாலை - யாழ்.
★அன்னை புத்தக சாலை - யாழ்.
★துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்.
★பரணி புத்தகசாலை - நெல்லியடி.
★ஸ்ரீலங்கா புத்தக சாலை- யாழ்.
★ரூபன் புத்தகசாலை- யாழ்.
★மக்மிலன் புத்தக சாலை- நல்லூர்.

தொடர்பு:-0774598440

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு: advt@uthayan.com 0215671111

Personal Class Combinemaths

இணைந்த கணிதம் 9வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் தனிப்பட்டரீதியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு-0777364959

ஓட்டுமடம்,யாழ்ப்பாணம்

(29434)(3.6)

நீங்களும் அறிவிப்பாளர் ஆகலாம்

வவுனியாவில் ஆரம்பமாகின்றது(பிரிவு 10)
Diploma In Mass Media

வவுனியா,மன்னார்,முல்லைத்தீவு,கிளிநொச்சி மாணவர்களே! சாதாரணதரம் மற்றும் உயர்தரம் படித்துவிட்டு இருக்கும் இளைஞர், யுவதிகளே!

இதோ உங்கள் கிராமத்தில்....
இருந்து நீங்களும் அறிவிப்பாளராகலாம் இலங்கையிலும் சர்வதேசத்திலும் துடிப்புமிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக ஊடகவியலாள ராக வேண்டுமா?

பதிவுகளுக்கு விரையுங்கள்
SUN BRITISH COLLEGE
No-26,Station Road, Vavuniya.
T.P-0777929475

(27875)(3.6.7)

சிங்கப்பூர் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

★அதிஉயர் சம்பளம்
★பகுதி நேர/முழு நேர தொழில்வாய்ப்பு
Hotel,Restaurant,Super Market
★கட்டார் நாட்டில் மிகக்குறைந்த கட்டணத்தில் பயணமாகலாம்
★பேனீச்சஸ் காப்பென்டர்/மேசன்/கவுஸ் பெயின்டர்
இரண்டே வாரத்தில் பயணம்
உடன் தொடர்பு கொள்ளவும்
Lanka Voice
0777929475

(27676)(3.6)

advt@uthayan.com 0215671111

புலமைப் பரிசில்- 2013

"புலமைச் சிட்டு" (நாவலர் வெளியீடு) பரீட்சை 1 இல் அதிகூடிய புள்ளி பெற்ற மாணவர்கள்

★து.அபிராம் -174 (யா/ ஆனைப்பந்தி மெ.மி.வித்)
★கோ.கம்ஷாயினி- 163 (யா/புனித ஜோண்பொஸ்கோ)
★ஞா.நாகநந்தினி- 158 (யா/புனித ஜோண் பொஸ்கோ)

5ஆவது பரீட்சை 17.02.2013 (ஞாயிறு - விரும்பிய 6 நேரங்களில்) தொடர்புகளுக்கு- 0774598440

நாவலர் கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

ST. ANTONY ல் கணினி மலிவு விற்பனை

IBM DUAL CORE FULL SET Computer 29,750/= மட்டுமே.

ஒரு வருட உத்தரவாதம்

FREE (MONITOR 19" LED)

4GB PEN DRIVE/HEADPHONE/ WEBCAM

(வெளிநாட்டில் உள்ளவர்களுடன் முகம் பார்த்து கதைக்கலாம்.)

187, K.K.S ROAD JAFFNA.
021 222 4865, 0750698608

தொழிற்பயிற்சிகள்

★ELECTRONICS
சகல இலத்திரனியல் பொருள்கள் (T.V, DVD,Phone) திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

★Mobile Phone Repairing
சகல Phone களின் Hardware, Softwareகள் செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்

★Air Conditioning
சகல குளிர் சாதனங்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.

மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம்-17.02.2013

சகல பயிற்சிகளும் முழுநேர செயன்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி முடிவில் தொழில் வாய்ப்பு பெற்றுத்தரப்படும்.

குறிப்பு: O/L படித்த மாணவர்களும் அனுமதிக்கப்படுவர்.

சிங்கள வகுப்புகள்

A/L பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல உள்ள மாணவர்களிற்கு சிங்களம் எழுத, வாசிக்க, கதைப்பதற்கு ஏற்றவாறு கற்பிக்கப்படும்.

Batch: I-கிழமை நாள்கள் 9.00am - 11.00am (காலம் 3 மாதம்)
Batch : II -சனி, ஞாயிறு 4.30pm - 6.00pm (காலம்: 9 மாதம்)

ஆசிரியர் - K.R. ஸ்ரீ வகுப்புகள் ஆரம்பம்: 18.02.2013

விவரங்களிற்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

இல.23, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:0718561654, 0778249949.

கிளை: NEWASIANCENTER 56/15B, Stanley Road, Jaffna.
077 9254078.

(5/6388)(3.6)

சுயதொழில் முயற்சியாளர்களே இதோ உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி ஆரம்பம் 14 பிரிவு

கட்டணம் 9500

★நீங்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவரா?
★சுயதொழில் ஒன்றை எதிர்பார்த்து காத்திருப்பவரா?
★வேலை செய்துகொண்டு பகுதி நேரமாக 100000/- க்கு மேல் வருமானம் பெற வேண்டுமா? ★இத்துறையில் வெளிநாடு ஒன்றில் அதிக சம்பளத்துடன் வேலை வாய்ப்பினை எதிர்பார்ப்பவரா? ★கவலை வேண்டாம் நான்கே நாள்களில் உங்களை ஓர் MOBILE PHONE திருத்துவராக மாற்றுவோம். 100% உத்தரவாதம். கணினி HARDWARE ஆரம்பம் (JUST 5 DAYS COURSE) இது ஒரு சுயதொழில், யாழ். நகரில் மற்றும் வவுனியாவில் பதிவுகளுக்கு முந்துங்கள்.

ஆரம்பம்:- 22.02.2013 காலை 9 மணி முதல்

ISEES NALLUR CHAMPUS
No - 762, POINT PEDRO Rd, NALLUR, JAFFNA.
T.P.:- 0777 929475, 021 222 4728

CANADA

Work Permits - Cleaners

* Age 20- 35 Years
* Basic English Knowledge
* 2 Years Work Contract

தொடர்புகளுக்கு

Closing Date 23-02-2013

ICS Integrated Corporate Solutions Pvt Ltd

No 77, Clock Tower Road, JAFFNA.
021 - 7306000

O/L மாணவர்களுக்கான புதுமையான வழிகாட்டி

நேற்று முதல் வெளிவரும்

வெற்றிப்படி

எனும் கையேட்டை இலகுவாக பெற்றுக்கொள்ள யாழ். மாவட்ட மாணவர்கள் 0716182182 என்ற இலக்கத்திற்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட மாணவர்கள் 0770427947 என்ற இலக்கத்திற்கும் தொடர்பு கொண்டு உங்கள் இருப்பிடங்களிலேயே இலகுவாக பெற்றுக்கொள்ளலாம்.

விற்பனைக்கு

கறுப்புநிற PLEASURE (VD) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதிகள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புக்கள் மிக விரைவில்... T.P.: 021 222 8093
61, Kachcheri Nallur Road, Jaffna.
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

AFTER A/L STUDY IN UK

உங்கள் UK செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

நீங்கள் ஏன் EXPONET ஐ தெரிவு செய்யவேண்டும்

- 2012 A/L எடுத்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள்
- இலவச IELTS or City & Guilds வகுப்புக்கள்
- மிகக்குறைந்த கல்லூரிக் கட்டணங்கள்
- மிகச்சிறந்த UK பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் அனுமதி பெற்றுத் தரப்படும் (HTS College)

எமது நிறுவனத்தின் மூலம் பயணமான யாழ் மாணவர்களில் சிலர்

ABIRAM JAFFNA
AINGARAN JAFFNA
AJANTHAN VAVUNIYA
ARCHANA JAFFNA
AUGUST JAFFNA
BAMINI VALVETTI
ISAIPPIRIYA JAFFNA
JERIN JAFFNA
KARTHEEKARAN JAFFNA
KRISHANTH JAFFNA
LUXSHAN JAFFNA
MATHIARASAN JAFFNA
NITHTHIYA VALVETTI
PARIJA JAFFNA
PIRAJEETH VAVUNIYA
RAJEEVAN JAFFNA
SELVARANJAN JAFFNA
SHANTHINIVETHAN KOKUVIL
THARMIKA UDUPPITY
THARSUMAN CHUNNAKAM
ANTONY JEYAKUMAR JAFFNA
ANUSHA JAFFNA
ANUSHAJINI JAFFNA
ANUSHAN JAFFNA
ARAVINTHAN JAFFNA
ARUDKANTHY JAFFNA
ARULNESAN JAFFNA
ATPUTHARAJAJAH JAFFNA

யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்.

UKல் உயர்கல்வி, உயர்கல்வியுடன் இணைந்த வேலை வாய்ப்புப்பற்றி தெளிவான ஆதாரபூர்வமான ஆலோசனைகளை பெற எமது கருத்தரங்கில் இணைந்து கொள்ளுங்கள்

SPOT ADMISSION

எமது நிறுவனத்தின் அதிபர் யாழில் மாணவர்களை சந்தித்து உடனடி அனுமதிகள் வழங்க இருப்பதால் உங்கள் அனுமதிக்கு முந்துங்கள்.

Date	: 16/02/2013
Venue	: Gnanams Hotel-Clock Tower Road, Jaffna
Time	: 10.00 am- 3.00 pm

EXPONET Overseas Consultants

Head Office : 379-1/2, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197, Arasady Road, Jaffna. (Between Kantharmadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.

Hotline - 021 7538395 / 021 2227230

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.